# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 23 ஞாயிற்றுக்கிழமை (06.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 192


### ஜனாதிபதி - கூட்டமைப்பு நாளைய சந்திப்பில்

# போருக்குப் பிந்திய மீள்குடியேற்றம்

# தமிழருக்குரிய நிரந்தர அரசியல் தீர்வு

## இவற்றுக்குக் கூடுதல் முன்னுரிமை என்கிறார் மாவை



யாழ்ப்பாணம்,ஜூன்6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் முதல் முறையாக நாளை மாலை நடைபெறவுள்ள உத்தியோகபூர்வமான சந்திப்பில் - பேச்சுவார்த்தையில்

போருக்குப் பிந்திய கால மீள்குடியேற்றத்துக்கும் தமிழ் மக்களுக்கு உரிய நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் கூடுதல் முன்னுரிமை கொடுக்கப்படும்."

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

★ தமிழ் மக்களின் போருக்கு பிந்திய கால மீள்குடியேற்றம் ★ சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர் இளைஞர், யுவதிகளை விடுவிக்க விரைவான நடவடிக்கை ★ விடுதலைப் புலிப் போராளிகள் எனத் தெரிவித்து முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளித்தல் ஆகியன குறித்தும் நாளைய பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## 23ஆயிரம் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு,ஜூன்6

நாட்டில் உள்ள 15 தேசிய பல்கலைக் கழகங்களுக்கும் இம்முறை 23 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

நாளை வெளியாகவிருக்கும் அனுமதிக்கான வெட்டுப்புள்ளியில் இருந்து பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவோர் விவரம் வெளியாகும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் 2 லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 50 சதவீதமானவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற ஆகக்குறைந்த தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் அரைவாசிப் பகுதியினரே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தனர் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-1)

## பிரிட்டன் அமைச்சர் லியம் பொக்ஸுடன் ஜி.எல்.பீரிஸ் சிங்கப்பூரில் பேச்சுவார்த்தை

சிங்கப்பூர்,ஜூன்6

பிரிட்டனின் புதிய அரசின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் லியம் பொக்ஸுடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பேச்சு நடத்தியுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள இருவரும் அங்கு சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பிரிட்டனில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் இருநாட்டுக்கும் இடையில் நடந்த உயர்மட்டச் சந்திப்பு இதுவாகும்.

இலங்கையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் (28ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய கடற்பரப்பில் இரு படகுகள் முற்றுகை

### அவற்றில் ஈழ அகதிகள் எனச் சந்தேகம்

கன்பரா,ஜூன் 6

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் மேலும் இரு அகதிகள் படகுகள் முற்றுகையிடப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சு அறவித்துள்ளது.

முற்றுகையிடப்பட்ட ஒரு படகில் 54 அகதிகளும், மற்றைய படகில் 28 அகதிகளும் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு படகுகளிலும் இலங்கை அல்லது ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த அகதிகளே (28ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் கல்வி நிறுவனங்கள் ஞாயிறு, போயாவில் இயங்கத் தடை

### முதலமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,ஜூன் 6

நாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிறு மற்றும் போயா நாள்களில் இயக்குவதற்குத் தடை விதிக்கும் தீர்மானம் மாகாண முதலமைச்சர் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர்களின் மாநாடு நேற்று மாரவிலவில் நடைபெற்றது. கிழக்கு மாகாண முதலாமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இந்தியாவில் பயிற்சி ஒன்றுக்குச் சென்றதால் அவர் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.

ஏனைய மாகாண முதலமைச்சர்கள் இம்மாநாட்டில் (28ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினராக இந்தியா?

### அமெ. முழு ஆதரவளிக்கும் என்கிறார் ஹிலாரி

வாஷிங்ரன்,ஜூன்6

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து பெறுவதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுக்ள் பாதுகாப்புக் கவுன்ஸில் விரிவுபடுத்தப்படும் போது, அதில் இந்தியாவை சேர்ப்பதில் அமெரிக்கா முனைப்புடன் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (28ஆம் பக்கம் பார்க்க)


இந்த சவாலை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாரா?

முடியுமானால் சொல்லுங்கள் ஒரு மில்லியனை வெல்லுங்கள்!

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் மாபெரும் ரியாலிட்டி தொலைக்காட்சி நிகழ்ச்சியான DFCC மைண்ட் ஸ்டாருடன் இணைந்து கொள்ளுங்கள். க.பொ.த (சாதாரண) தரத்தில் நீங்கள் சித்தி பெற்றவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பின், ஜூன் 10 ஆம் திகதிக்கு முன் கீழுள்ள முகவரிக்கு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வையுங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 663888

DFCC வங்கி — DFCC வர்தன் வங்கி

பெயர்: ________ வயது: ________ தேசிய அடையாள அட்டை இல: ________

முகவரி: ________

மேலே தரப்பட்ட தகவல்கள் எனது அறிவுக் கெட்டிய வரையில் சரியானவையும், உண்மையானவையும் என உறுதி கூறுகிறேன்.

மாவட்டம்: ________ கையடக்கத் தொலைபேசி: ________ நிரந்தர தொலைபேசி: ________

கல்வித் தகைமை: க.பொ.த. (சாதாரணம்) ☐ க.பொ.த. (உயர்தரம்) ☐ வேறு தகைமைகள்: ________ திகதி: ________ கையொப்பம்: ________

தெரிவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி:

சிங்களம் ☐ ☐ தமிழ் ☐ ஆங்கிலம்


நிபந்தனைகளுக்கு உட்பட்டது

DFCC MINDSTAR DFCC Bank, 73/5, Galle Road, Colombo 03.

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயர்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உணர்வுபூர்வமான செயற்பாடுகள் மூலமே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும்

## நேற்றைய ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 6

விழிப்புடன் கூடிய உணர்வுபூர்வமான செயற்பாடுகள் மூலமே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மாவட்டத்தில் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்:

அமைச்சர் அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது :-

இன்றைய மருத்துவ உலகிற்கு டெங்கு நோய் மிகுந்த சவாலாக உள்ளதை இங்கு உரையாற்றிய மருத்துவர்கள் விரிவாகவும் விளக்கமாவும் எடுத்து விளக்கியுள்ளனர்.

எனவே எமது பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க விழிப்புணர்வும் உணர்வுபூர்வமான செயற்பாடுகளுமே முக்கியம். அத்துடன் இந்த நோய் தொடர்பாகவும் அதன் தாக்கங்கள் தொடர்பாகவும் மக்களுக்குத் தெளிவான அறிவூட்டல்களும் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெளிவாக புள்ளிவிவரங்களுடன் விளக்கியுள்ளார். எனவே, நோய்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பொறுப்பானவர்கள் தமது கடமையாக மட்டுமன்றி பொறுப்பாக உணர்ந்து கூடிய கவனமெடுத்துச் செயற்படவேண்டும்.

அப்போதுதான் நோய்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழுமையடையும். இது தொடர்பில் வட மாகாண அளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மிகுந்த அக்கறையும் கரிசனையும் கொண்டிருக்கிறார் - என்றார்.

அத்துடன் இனிமேலும் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களிலும் அனைவரும் பங்கெடுத்து யாழ். மாவட்டத்தில் டெங்குநோயை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தனது ஆரம்ப உரையில்,

யாழ். மாவட்டத்தில் மலேரியாவை ஒழிக்க எவ்வாறு ஒன்றுபட்டு உழைத்தோமோ அதேபோன்று டெங்கு நோயையும் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா உரையாற்றும்போது மாநகர எல்லைக்குட்பட்ட சுற்றுச்சூழலை பாதுகாத்து டெங்கை ஒழிக்க மாநகர சபை தொடர்ந்து தீவிரமாக உழைக்கும் என்று உறுதி வழங்கினார்.

அடுத்து சுகாதார அமைச்சின் தலைமை அதிகாரி டாக்டர் பானுகாவர்த்தன, இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக விரிவாகவும், விளக்கமாகவும் புள்ளிவிவரங்களுடன் எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து வவுனியா மாவட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான டாக்டர் சத்தியமூர்த்தி வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்தும் அதன் பரம்பல்கள் குறித்தும் புள்ளிவிவரங்களுடன் விளக்கினார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் மருத்துவத்துறை சார்ந்தோர், கல்விச் சமூகத்தினர், பாடசாலை சமூகத்தினர், சமூகப் பெரியார்கள், வர்த்தகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ)

## நல்லூர்க் கந்தனுக்கு நாளை கற்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 6

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை கற்பூரத் திருவிழா நடைபெறும்.

ஆறுமுகப்பெருமான் நாளை மாலை கற்பூர ஒளி வெள்ளத்தில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பார்.

(ஒ)


### குளிரூட்டிகளுக்கான சேவை வழங்குகின்றோம்

ஐஸ் பிளான்ட், கூல்ரூம், BLAST FREEZER ஐஸ்பழ மெசின், ஐஸ் கிறீம் மெசின், யூஸ் பைக்கெட் செய்யும் குளிரூட்டும் இயந்திரங்கள் மற்றும் குளிரூட்டும் இயந்திரங்களின் தேவைகளை மிகவும் நியாயமான முறையில் செய்து தருவோம். தற்போது எங்களிடம் சகல மெசின்களும் ஆயத்தமாக உண்டு.

விவரங்களுக்கு:

0779356562, 0263269076



# VACANCY

- ACCOUNT ASSISTANT
- IT EXECUTIVES
- Accounting Trainees (Training will be given under well experienced Auditor)

Requirements:
Good Knowledge in Accounting, Computer & English is necessary.

நேரில் வரவும்

From : இன்று (06.06.2010) தொடக்கம் 09.06.2010 வரை
Time : 10 a.m. to 4 p.m.
At : Annai Nagaa Food City
175, K.K.S. Road,
Jaffna

(சி-568179)


## 5ஆவது ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு | | மறைவு |
|---|---|---|
| 20 - 05 - 1919 | | 01 - 06 - 2005 |

### க.பொன்னம்பலம்

(சித்த ஆயுள் வேத மருத்துவர்)

பூநகரியில் பிறந்து தொழிற் கல்வி கற்று உயர்ந்தவர்
பூநகரியில் வாழ்ந்தும் எம்மை உயரப் பறக்க வைத்தவர்
கனிவான தோற்றம் கடவுளுக்கு அடுத்த வைத்திய சேவை
நினைவு கொள்ளும் நாள் இன்று மட்டுமல்ல என்றும் ஐயா.

கிருஷ்ணசாமி (மைத்துனர்)
85/2, பாமன் கடை லேன்,
கொழும்பு - 6

சிறிஸ்கந்தராசா (மகன்),
69, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 4900498

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலங்கேஸ்வரி நடராஜா



பருத்தித்துறை வீதி, 2ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமான திருமதி இலங்கேஸ்வரி நடராஜா 04.06.2010 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி நடராஜாவின் (கார்த்திகேசு ஆசிரியர்) அன்பு மனைவியும் சியாமளாவின் அன்புத் தாயாரும் மோகன்ராஜின் அன்பு மாமியாரும் பிரணவனின் அன்புப் பேர்த்தியும் நீலாதாட்சியின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான இ.சி.சோகுநாதன் (அதிபர்), இ.சி.சொக்கநாதன் (ஆசிரியர்), இ.சி.தில்லைநாதமூர்த்தி (சுங்க அதிகாரி, சுங்கத் திணைக்களம்), பஞ்சாட்சரேஸ்வரி கிருஸ்ணதேவா மற்றும் குணேஸ்வரி, நடராசா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(99211)

தகவல்:
சியாமளா (மகள்)

தொ.பே.: 00914424510401

### திருமேனி சுந்தரலிங்கம்



காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமேனி சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (05.06.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருமேனி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சகுந்தலாவின் அன்புக் கணவரும் அமரர் சேகர், விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கோகிலமணி, துரைசிங்கம், மனோன்மணி, பவளமணி, துரைராசா, தருமராசா, ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலிங்கம், பாலச்சந்திரன், கருணைராசன், இராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மு. வேம்படி,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம் வடக்கு.

(99211)

தகவல்:
குடும்பத்தினர்

## ஆலயக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கைதடி மேற்கு ஞானவைரவர் ஆலய ப்ரிபாலனசபையின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் இந்து இளைஞர்மன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மரண அறிவித்தல்

### திருமதி செபமாலை மாக்கிறட் (திரேசம்மா)

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபமாலை மாக்கிறட் (திரேசம்மா) 03.06.2010 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலையின் அன்பு மனைவியும், மரியமலர் (நேசமுத்து), றேசா, அந்தோனிப்பிள்ளை (பவுண்), காலஞ்சென்றவர்களான மரியராசா, லூயிஸ்நாயகம் ஆகியோரின் சகோதரியும், அமிர்தநாயகம் (துரைராசா- இத்தாலி), யோன்அல்பிறட் (அரியம் - இத் தாலி), மேரி திரேசா (நேசம் - லண்டன்), ஜோர்ஜ் அன்ரனி (துரை - கனடா), மேரி றெஜீனா (அரியபுஷ்பம்), மேரிஅக்னஸ் (தங்கபுஷ்பம்), ஜெறொமியாஸ் (அழகு - லண்டன்), மரியசீலன் (குமார் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இன்நோசன் யோசப், செலஸ்ரீன், காலஞ்சென்ற எட்மன்புறுனோ மற்றும் டெய்சி, றூபி, றதி, டெலொமிக்கா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மாலினி மற்றும் யாழினி, றொசானி, அமிர்தராஜ் (இத் தாலி), றொமானி, றொய்சலா, றேஞ்சலா, அனுசியா (சுவிஸ்), அனற் யூலியட் (லண்டன்), டோமினிக் சாவியோ (லண்டன்), மேரிஅனஸ்ரி றொசிற்றி (லண்டன்), கிரியாந்தி (கனடா), கிளாறிஸ்ஷா (கனடா), மெரிஸ்ரெலா, யூட்குமார் (லண்டன்), மொடஸ்ரா, றொபேட், அன்ரனற் ஜொபினா, அனற்றெஜீனா, மயூரன், ஜெரால்டின் (கனடா), கெபின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிசானி, நிஷாங்கி, பாதுசன், ஜெவ்றிசன், அக்ஷயா, அஸ்மிதன், அபிலாஷா, அஸ்வினி, றஜிதன் (லண்டன்), சுவாங்கி, சோபி, ஏரோன் செபமாலை, திலைக்ஸ், டிலக்ஷன், பிரவீனா, காலஞ்சென்ற சுஜீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை(07.06.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.

(சி-568147)

தகவல்:
மேரிதிரேசா (மகள்).


DHL WORLDWIDE EXPRESS

யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

உள்நாடு வெளிநாடுகளுக்குக் கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)

46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)

TCN EXPRESS

2B, Nelsan Place, Colombo -06

குடாநாட்டில் முகவர்கள் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் மணல் வளத்தைப் பாதுகாக்க பொறுப்புடன் செயற்பட முனைவது எப்போது?

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து யாழ்.குடாநாடு இயல்பு நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இழக்கப்பட்ட பொருளாதார, வாழ்வாதார கட்டுமானங்களை மீளமைப்பதற்கான முயற்சிகளில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையின் பல நகரங்கள் வானுயர்ந்த கட்டடங்கள், தொழிற்சாலைகள், வண்ணமிகு குடிமனைகளை அமைத்து முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் யாழ். குடாநாடு இடிபாடுகளையும், சேதங்களையும் சந்தித்து அபிவிருத் தியில் பின்னோக்கிக் காணப்படுகிறது.

தற்போது அமைதிச் சூழல் கனிந்திருக்கும் நிலையில் பிற மாவட்ட வளர்ச்சியுடன் ஒத்திசைந்து நிமிர்ந்தெழ வேண்டிய தேவை யாழ்ப்பாணத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு புதிய கட்டடங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், ஆலயங்கள், குளங்கள், வடிகால் அமைப்புக்களை அமைப்பதிலும் சீர் செய்வதிலும் அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

சேதமடைந்த வர்த்தக நிலையங்கள், வீடுகளைப் புனரமைப்பதிலும் புதியவற்றை நிறுவுவதிலும் மக்கள் முனைந்து நிற்கின்றனர்.

இன்னும் பல பாரிய கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் வரையப்பட்டு வருகின்றன. இவற்றுக்கெல்லாம் போதிய மூலவளங்கள் கிடைக்கப் பெறாமையால் முன்னைய காலங்களில் கட்டடத்துறை செயற்பாடுகள் முடங்கிக் காணப்பட்டன.

இப்போது ஏ9 பாதை திறக்கப்பட்டதன் விளைவாக சிமெந்து, கம்பி மற்றும் இதர கட்டடப் பொருள்களை வேண்டிய அளவு பெறக்கூடியதாக உள்ளன.

ஆனால் மணல் வளம் நிறைந்த யாழ். குடாநாட்டில் கட்டடப் பகுதிக்குத் தேவையான மணலைப் பெறுவதில் பல இடர்பாடுகளும், சிக்கல்களும், சிரமங்களும் காணப்படுகின்றன.

கடற்கரையை அண்டிய, மணல் குவிந்துள்ள பிரதேசங்கள் பெரும்பாலும் பாதுகாப்பு வலயங்களுக்குள் சிக்குண்டுபோயுள்ளன. அப்பகுதிகளில் அரசுக்கும், தனியாருக்கும் சொந்தமான மண் திட்டுக்கள் பெருமளவில் காணப்படுகின்றன. அங்கு சென்று வாகனங்களில் மணலை எடுத்துவர முறையான அனுமதி இல்லை.

சில பகுதிகளில் அனுமதியுடன் மணல் வழங்கப்பட்டாலும் அவை இன்றைய தேவைக்கு போதுமானதாகவோ கட்டடப் பகுதியின் அனைத்து வேலைகளுக்கும் பயன் தரக்கூடியதாகவோ இல்லை. நாகர் கோயில் மண் பெருக்கன் தன்மை கொண்டது. பூச்சுவேலை மற்றும் நுட்ப வேலைப்பாடுகளுக்கு யாழ். கடல் நீர் ஏரிப் பகுதிகளில் விளையும் சிறுமணலையே தொழிலாளர்கள் விரும்புகிறார்கள்.

மணல் வியாபாரம் செய்யும் நபர்கள் இவற்றைச் சாதகமாக்கி 'வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடிப்பதுபோல' சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு இன்னொருவர் சொத்தில் தம்மை வளர்த்துக் கொள்கின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வு இன்று நேற்றல்ல இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வயல் நிலங்கள், தனியார் காணிகள், வீதியோரங்கள், இடம் பெயர்ந்த பகுதிகள் என ஒன்றையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை.

### தொடர் கதையாகிவரும் சட்ட விரோத மண் அகழ்வு

வாய்க்கும் இடமெல்லாம் மண் கடத்தல் காரர்களின் கைவரிசை தொடர்கிறது.

கொடிகாமம் வரணிப் பகுதிகளில் கரம்பைக் குறிச்சி, மாசார், கச்சாய் போன்ற இடங்களில் கேட்பாரின்றி இரவு பகலாக மணல் அகழ்வு நடக்கின்றது.

தென்மராட்சி தெற்கு, நாவற்குளி, வேம்பிராய், தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டிப் பகுதிகளிலும் இரவு வேளைகளில் தனியார் காணிகளில் லொறிகள், உழவு இயந்திரங்களில் மணலை நிரப்பி வைக்கோலால் உருமறைப்புச் செய்து கடத்திச் செல்லப்படுகிறது.

அவ்வாறே அரியாலை மணியந் தோட்டம், நாவலடி, நெடுங்குளம் போன்ற பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. காரைநகர்ப் பகுதியும் இதற்கு விதிவிலக்கல்ல.

அதேவேளை அண்மையில் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்ட குடியிருப்புக் காணிகளில் கூட இந்த மணல் திருடர்கள் மிகவும் கச்சிதமாகத் தமது காரியத்தை நிறைவேற்றுகிறார்கள். மணிப்புரியில் மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்துவிட்டு வந்தபின்னர் பொழுது மங்கிய வேளைகளில் மணல் களவுகள் நடைபெறுவதாக மக்கள் கூறுகிறார்கள்.

அப்பகுதிகளுக்குப் பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் அப்போது என்ன செய்கிறார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

இவ்வாறு கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் மணல் அகழ்வு தான்தோன்றித் தனமாக இடம் பெறுவதால் பாரிய குளங்கள் போன்று அப்பிரதேசங்கள் காட்சி தருகின்றன. கடல் நீர் உட்புகுந்து சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்து



விலை கொடுத்தாலும் மணலைப் பெற்றுத் தமது வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தனைக்கும் சட்டமும் ஒழுங்கும் முடுக்கிவிடப்பட்டாலும் அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி சாதுரியமாக பிரதேச வளங்கள் சூறையாடப் படுகின்றன.

பொலிஸார் மணலுடன் வாகனங்களைக் கைப்பற்றுவதும் வழக்குத் தொடர்வதும் குற்றவாளிகள் அபராதம் செலுத்துவதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த மூன்று வாகன சாரதிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும் வாகனங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா பிணையும் அறவிடப் பட்டுள்ளது. இவ்வாறு பல சட்ட நடவடிக்கைகள் நடைபெற்ற போதிலும் முறை

அரியாலை, மண்கும்பான், காரைநகர், நாகர்கோயில் போன்ற கடற்கரைப் பகுதிகளில் தனியாருக்கும், அரசுக்கும் சொந்தமான மணல் பிட்டிகள் காணப்படுகின்றன. இப் பகுதிகளுக்குச் சென்று வரக்கூடிய அனுமதிகளைப் பெற்றுக் காணி உரிமையாளர்களைத் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக மணல் விற்பனையை மேற்கொள்ள முயற்சி எடுக்கலாம்.

கடந்த 80, 90களில் இவ்வாறன நடைமுறையே பின்பற்றப்பட்டு வந்தது. இப்பகுதிகளில் இருந்து விற்பனை செய்யப்பட்ட மணல் குடாநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட யாழ்.குடாக்கடலின் மறு கரையான கல்முனை தொடக்கம் மண்ணித்தலை, கௌதாரிமுனைவரை பாரிய வெண்மணல் மலைகளாகக் குவிந்துள்ளன. சுமார் 35 வருடங்களுக்கு முன்பு பலகாலமாக

## சட்டவிரோத அகழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க அதிகாரிகள் முனையாதிருப்பின் இயற்கைக் கட்டமைப்பைச் சுடும்!

அதிகரிக்கின்றது. பல வயல் நிலங்கள் உவர் நிலமாக மாற்றமடைந்துள்ளன. சில இடங்களில் நில ஆதாரமற்று பனை மரங்கள் வேரோடு சாய்ந்து விடுகின்றன. பனை வளமும் பாழாய்ப் போகின்றது.

மண் அகழ்வோர் கண்ணி வெடிகளில் சிக்கி உயிரிழந்ததும், ஊனமுற்றதும் வாகனங்கள் சேதமடைந்ததும் நடந்தேறியுள்ளன. மண் அகழ்வுப் போட்டி காரணமாக கோஷ்டி மோதல்கள் இடம்பெற்று அநியாய உயிரிழப்புக்களும் நிகழ்ந்துள்ளன.

பொலிஸாரின் வலையில் இருந்து தப்புவதற்காக மண் கடத்தல் காரர்கள் பல யுக்திகளை கையாளுகின்றனர். மணல் கடத்தும் வாகனத்திற்கு முன்னும் பின்னும் மோட்டார் சைக்கிளில் அணிவகுத்து கைத்தொலை பேசியூடான 'லைன் கிளியர்' பார்த்து துணிகரமாகக் கொண்டு செல்கின்றனர்.

### முதலீடு எதுவும் இன்றிக் கொடிகட்டிப் பறக்கும் தொழில்

இத்தனை தடைகளையும் மீறி வெளியில் கொண்டு வரப்படும் மணலை ஒரு 'டிராக்டர் லோட்' ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் விற்று ஏப்பம் விடுகின்றனர். முதலீடு எதுவுமின்றி தொழில் நடைபெறுகிறது. 'கொடுத்தவனுக்கோ வயிற்றெரிச்சல்; எடுத்தவனுக்கு பையில் பணம்'. தமது மணலை இன்னொருவர் அபகரித்து விற்றால் தமது மனம் எவ்வாறு புண்படும் என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். பொதுமக்களோ என்ன

யற்ற மணல் அகழ்வு நீண்டு கொண்டே போகிறது.

திருடனாகப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது உண்மைதானா? இதற்கு முடிவே கிடையாதா? என்ற கேள்வி எழுகிறது.

நகரம் உயர உயர இன்னொரு பகுதி தாழ்ந்து கொண்டு போவது இயல்பு என்றாலும் இதற்கு ஓர் ஒழுங்குபடுத்தல் - நிகழ்ச்சித் திட்டம் தேவை. பலரது சொத்தை, நாட்டு வளங்களை ஒருசில கும்பல் அபகரிப்பது நியாயமா? சுற்றுச் சூழலும் நில அமைப்புகளும் மாறுபட அனுமதிக்கலாமா? இதற்குத் தீர்வு தான் இல்லையா? இவ்வாறான கேள்விகள் பலராலும் எழுப்பப்படுகிறது.

**"ராஜ குரு"**

மக்களின் சமூகப், பொருளாதார, வாழ்வியல் அபிவிருத்திகளுக்கு மணலின் பயன்பாடும் முக்கியமாகும். கட்டடங்கள் உயரும்போது மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். ஆயிரக் கணக்கான மேசன் தொழிலாளரின் குடும்பங்கள் இந்த மணலை நம்பியே வாழ்கின்றன.

எனவே சட்டபூர்வமான முறையில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மணலை விநியோகிக்க மாற்று ஏற்பாடுகளை வகுக்க வேண்டியது அவசியமாகும். இப்போதைய நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் குடிப் பரம்பல் அதிகரிக்கும்போது இப் பிரதேசங்கள் மக்கள் சஞ்சரிக்க முடியாத பள்ளத் தாக்குகளாகிவிடும்.

கொடிகாமம், கச்சாய், பூம்புகார், இப்பகுதியில் இருந்து மணலைக் கொண்டுவந்து கொழும்புத் துறையில் விற்பனை செய்து வந்ததாக அறியமுடிகிறது. பெரிய 'வடக்கன்' மாடுகள் பூட்டிய வண்டில்களில் பல்வேறு இடங்களில் இருந்தும் இங்கு வந்து மண்ணைக் கொள்வனவு செய்து போன காலங்கள் இன்றும் பலருக்குப் பசுமையாக நினைவிருக்கலாம்.

பாரிய பாய்மரக்கப்பல்கள் (வத்தை) மூலம் மணலை எடுத்து வந்து கொழும்புத்துறையில் குவித்து வைத்து விற்பனை செய்தனர் அப்பகுதிக் கடலோடிகள். மீண்டும் இம்முறையானது சாத்தியமானால் இத்தொழிலை ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாக இப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான வழிமுறைகளில் தேவையை நிறைவு செய்யக்கூடிய வகையில் பொருள் கிடைத்தால் சட்டவிரோத சிந்தனை தானாகவே குறைந்துவிடும். எதிர்காலத்தில் மணலின் தேவை அதிகரிக்கும் சாத்தியங்கள் நிறைய இருக்கின்றன.

எனவே சரியான ஒழுங்குபடுத்தலின்கீழ் உரிய இடங்களை இனங்கண்டு சுற்றுச்சூழல் அதிகாரிகளின் ஆலோசனைக் கண்காணிப்பில் மணல் அகழ்வை மேற்கொள்வதே பயன் மிக்கதாகும். சட்ட விரோத மணல் அகழ்வை விரைந்து தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப் போம். மழைக்கும், மனித வாழ்வுக்கும் ஆதாரமான மணல் வளத்தைப் பொறுப்புடன் பாதுகாத்து இயற்கைச் சூழல் கட்டமைப்பைப் பேணுவோம்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## கரைச்சிப் பிரதேச சபை

1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர் அவர்களினால் கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கிராமங்கள் நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (வர்தமானி இல 1644/9 - 2010.03.09)

**கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு**

01) KN/07 பொன்னகர்
02) KN/08 பாரதிபுரம்
03) KN/09 மலையாளபுரம்
04) KN/10 விவேகானந்த நகர்
05) KN/11 கிருஷ்ணபுரம்
06) KN/12 உதயநகர் கிழக்கு
07) KN/13 உதயநகர் மேற்கு
08) KN/14 அம்பாள் குளம்
09) KN/15 செல்வா நகர்
10) KN/16 ஆனந்தபுரம்
11) KN/17 தொண்டமான் நகர்
12) KN/18 கனகாம்பிக்கைக்குளம்
13) KN/21 திருவையாறு மேற்கு
14) KN/22 இரத்தினபுரம்
15) KN/23 கிளிநொச்சி நகரம்
16) KN/24 மருதநகர்
17) KN/25 பன்னங்கண்டி(வடக்கு,மேற்கு)
18) KN/26 கனகபுரம்
19) KN/27 திருநகர் தெற்கு
20) KN/28 திருநகர் வடக்கு
21) KN/29 கணேசபுரம்
22) KN/30 ஜெயந்தி நகர்
23) KN/31 பெரியபரந்தன்
24) KN/32 உருத்திரபுரம் வடக்கு
25) KN/33 உருத்திரபுரம் கிழக்கு
26) KN/35 சிவநகர்
27) KN/36 ஊற்றுப்புலம்
28) KN/37 புதுமுறிப்பு

**கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவு**

01) KN/43 குமரபுரம்
02) KN/44 பரந்தன்
03) KN/48 கோரக்கன்கட்டு (தெற்கு, மேற்கு பகுதி)

எனவே நகர அபிவிருத்திப் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வீடுகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், விடுதிகள், தொழிற்சாலைகள் மற்றும் சகல விதமான வியாபார நடவடிக்கைகளுக்கானதும் தொழில் நடவடிக்கைகளுக்கும் சேவை வழங்குவதற்குமான அபிவிருத்தி சேவைகள் மேற்கொள்வோர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட திட்டங்களுக்கமைய உரிய அபிவிருத்தி வேலைகளைச் செய்யக் கடப்பாடுடையவர்களாவர்.

எனவே மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வோர் கரைச்சிப் பிரதேச சபையில் உரிய அனுமதியினைப் பெற்று சகல வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அவ்வாறு அனுமதிபெறாது அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வோர் சட்டத்திற்கு முரணாகச் செயற்படுபவர்கள் எனக் கருதப்படுவீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏனைய கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் பிரதேச சபை சட்டத்திற்கு அமைய உரிய அனுமதிகள் பெறப்படவேண்டும் என்பதுடன் அவ்வாறு அனுமதிபெறாது அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்பவர்கள் சட்டத்திற்கு முரணாகச் செயற்படுபவர்கள் எனக் கருதப்படுவீர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.


**விற்பனைக்கு**

பலாலி றோட் 3ஆம் கட்டை ஊரெழு அம்மன் கோயில் அயலில் 5¾ பரப்பு தோட்டக்காணியும் 1420 சதுர அடியில் சகல வசதிகளையும் கொண்ட கிணற்றுடன் கூடிய வீடு தற்போதைய நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு 071 8015678 077 7032967

**காணியும் வீடும் விற்பனைக்கு**

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் கோயிலுக்கு முன்பாகச் செல்லும் ஒழுங்கையில் அமைந்துள்ள காணியும் இரண்டு மாடிக் கட்டடத்தில் முதற்தளம் அமைக்கப்பட்டு முற்றுப்பெறாத வீடும் விற்பனைக்கு உண்டு.

(90209) தொடர்பு : 0212226266

**வாகனம் வாடகைக்கு தேவை**

வியாபார நிறுவனம் ஒன்றுக்கு அலுமிய பொடியுடன் கூடிய வாகனம் ஒன்று நாளாந்த/மாதாந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவை. T.P 0773464600

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில BY:ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி,426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை. தொ.பே.0776751649

**English Personal Class**

ஆண்டு 6-O/L வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம் அடிப்படையில் இருந்து தனியாகவோ, குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு 0772487591

**வீடு வாடகைக்குண்டு**

மானிப்பாய், மருதனார்மடம் றோட்டில் (பெந்தே கோஸ்த சபை எதிரில்) சகல வசதிகளுடன் கூடிய கீழ் மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களும் விருப்பத்தக்கது. தொடர்புகளுக்கு : 0779702940 சோமசுந்தரம்

**காணி விற்பனைக்கு**

இராஜவீதி, பொலிஸ் நிலையத்துக்கு அருகில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு தொடர்பு 0771751495

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1980 கார்த்திகை 4ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமில்லாத B.A(Hons), CIMA, ACCA லண்டனில் படித்து உயர் பதவியில் கடமை புரியும் மணமகனுக்கு அழகான 4-7 வயதுக்கு குறைந்த 5'-5'4'' அடி உயரமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு 0213006599

**மரக்கடைச்சல் வேலைக்கு ஆள் தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் மரவேலை செய்யும் தொழில்சாலைக்கு மரக்கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4033
மே/பா உதயன் பணிமனை
யாழ்ப்பாணம்.

**விற்பனை பயிலுநர் தேவை**

யாழ்.நகரில் உள்ள ஆங்கில மருந்தகத்திற்கு ஆண் விற்பனை பயிலுநர் தேவை. இவர் க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியெய்தியவராகவும் 20-25 வயதிற்கு இடைப்பட்டவராகவும் யாழ்.நகரில் இருந்து 5 கிலோமீற்றர் இடைப்பட்ட தூரத்தில் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 4031, உதயன் பத்திரிகை நிறுவனம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**முகாமைத்துவ பயிற்றுவிப்பாளர் பதவி**

கணக்கியல்/மனிதவளங்கள்/ நிர்வாகம், இளநிலை பட்டதாரிகள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக மற்றும் கம்பியூட்டர் அறிவும் மற்றும் நல்ல சோதித்தறியும் திறமைகளோடு விண்ணப்பிக்கவும்.

யுனிடெக் பிளேஸ்மென்ட்ஸ்,
545, ஸ்ரீசங்கராஜ மாவத்தை,
கொழும்பு - 10
இ-மெயில் : penpal@eureka/lk

**வாடகைக்கு**

சீனிவாசகம் வீதி, இரண்டாம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வீடுகள் வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு தொ.பே. 0777283811

**இன்று முதல் வடமராட்சி மண்ணில் உன்னத வைத்திய சேவையில் இணையவுள்ள**

**SHAAM PRIVATE HOSPITAL**

SPH

**ஷாம் தனியார் மருத்துவமனை**

**புலோலி மேற்கு, பருத்தித்துறை. (தம்பசிட்டி பாடசாலை முன்பாக)**

**தரமான வைத்திய சேவையில்........**

**MBBS வைத்தியர்களினால் வழங்கப்படும் 24மணிநேர வெளிநோயாளர் பிரிவு (OPD)**

**கணனிமயப்படுத்தப்பட்ட வரவேற்பறை**

★பிரதம விருந்தினர்:- Dr.S.ரவிராஜ் [பொது சத்திர சிகிச்சைநிபுணர் யாழ் போதனா வைத்தியசாலை]

★ சிறப்பு விருந்தினர் :- திரு.K.பாலசுப்பிரமணியம் [முகாமையாளர், யூனியன் வங்கி, யாழ்ப்பாணம்]

- விசேட வைத்திய நிபுணர்களின் வைத்தியசேவை
- 24 மணிநேர உள்ளக மருத்துவ விடுதி வசதி
- சிறு சத்திர சிகிச்சைகள்
- உள்ளக மருந்தகம்
- நவீன ஆய்வுகூட வசதியுடன் கூடிய சகல இரத்தம், சல பரிசோதனைகள்
- நவீன ஸ்கானிங் (Scanning), ECG வசதிகள்
- கர்ப்பிணிகளுக்கான கிளினிக் வசதி
- சலரோக, உயர் குருதி அழுத்த நோயாளர்களுக்கான கிளினிக் வசதி
- சாரதி அனுமதிப் பத்திர மருத்துவ சான்றிதழ்.



மேற்படி மருத்துவமனையானது தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப்பெருமானதும், வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானதும் திருவருள் துணை கொண்டு சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்த ராஜாக்குருக்கள் அவர்களின் அருளாசியுடனும் மற்றும் பெரியவர்களின் வாழ்த்துக்களுடனும் இன்று (06.06.2010) மாலை 5.21மணியளவில் உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

**அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.**

மருத்துவமனை நிர்வாகமும், ஊழியர்களும்.

T.P.NO:-0217201028

(99126)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்திற்குக் கிடைத்த சந்தர்ப்பம் பாழாக்கப்படும் போக்கின் நோக்கு...?

# கொழும்பு பஸ்ஸில் பயணித்த பெரியவர் கந்தசஷ்டி பாடியதன் பொருள்....!

கொழும்புக்கு அவசரமாகச் செல்லவேண்டிய கட்டாயத்தில் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். பக்கத்து 'சீற்'றில் ஒரு வயதானவர் தூக்கக் கலக்கத்தோடு அமர்ந்திருந்தார். மெதுவாக என்னைப் பார்த்து நட்புடன் சிரித்தார். "தம்பி! எனக்குக் கொஞ்சம் நித்திரை வாற மாதிரிக்கிடக்கு. நொச்சியாகம வந்தவுடனே என்னை எழுப்பி விட முடியுமா" என்று உரிமையோடு கேட்டார். சம்மதம் தெரிவித்துத் தலையசைத்தேன். மூன்று மணித்தியாலங்கள் பஸ் பயணித்திருக்கும். அந்த மூன்று மணித்தியாலத்தில் கிட்டத்தட்ட ஏழு முறையாவது நித்திரையில் இருந்து விடுபட்டு "தம்பி! நொச்சியாகம வந்திட்டுதா?" என்று கேட்டிருப்பார். நானும் எத்தனை தரம்தான் இல்லை என்று சொல்ல முடியும். கொஞ்சம் எரிச்சலாகவும் கிடந்தது. "வந்தால் எழுப்புவன் தானே!" என்று காட்டமாகக் கூறினேன். மறுபடியும் தூங்கத் தொடங்கினார் அவர். நொச்சியாகமவில் மனுசன் இறங்கிவிடும் தானே, அதற்குப்பிறகு இந்தத் தொல்லை இருக்காது. என்று எண்ணிக்கொண்டேன். நெடுநேர பயணத்துக்குப் பின்னர் ஒருவாறு நொச்சியாகம பகுதியை பஸ் நெருங்கியது. தூங்கிக் கொண்டிருந்த வயதானவரை தட்டி எழுப்பினேன். "ஐயா! நொச்சியாகம வந்திட்டுது" என்றேன். அவர் அங்கே



இறங்கப்போகிறார் என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்க அவரோ அதற்கு மாறாக தனது சேட் பொக்கெற்றில் இருந்து சிறு புத்தம் ஒன்றை வெளியே எடுத்து "காக்கக் காக்க கனகவேல் காக்க......" என்று கந்தசஷ்டி கவசத்தை படிக்கத் தொடங்கிவிட்டார். அதற்குப் பிறகுதான் எனக்குப் புரிந்தது, நொச்சியாகம பகுதி பற்றிய பயமே அவரை இவ்வாறு தேவாரம் படிக்க வைத்திருக்கிறது என்பதை. நொச்சியாகம பகுதியில் அப்படியென்ன மர்மம் அல்லது பயங்கரம் காத்திருக்கிறது என்று ஒரு கணம் நீங்கள் சிந்திக்கக் கூடும். காய்த்த மரம் கல்லடிபடும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போது மரங்கள் மட்டுமல்லாது மனிதர்களை ஏற்றிச் செல்கின்ற பஸ்களும் நொச்சியாகமப் பகுதியில் கல்லடி படத் தொடங்கியுள்ளன.

**கல்லெறிக்குச் சமிக்ஞை காட்டியும் உண்டு**

30.05.2010. பல்வேறு அலுவல்களின் நிமிர்த்தம் பயணிப் போரை நிரப்பியவாறு இருளின்



அமைதியை ஊடறுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தது அந்த பஸ். இரவு 7 மணிக்கு டிப்போவில் இருந்து பயணிக்கத் தொடங்கிய அந்த பஸ் விடிவதற்கிடையில் கொழும்பு நகரை அடைந்துவிட வேண்டும் என்ற இலக்குடன் விரைந்துகொண்டிருந்தது. அதிகாலை 12.35க்கு நொச்சியாகம பகுதியை நெருங்கிய போதுதான் ஏழரைச்சனியன் அந்த பஸ்ஸை நெருங்கியது. வீதி ஓரமாக மேலாடையின்றி நின்றிருந்த ஒரு நபர் குறித்த பஸ்ஸை உற்றுப் பார்த்தபடியே நிற்கிறார். அவருடைய பார்வை கொஞ்சம் வித்தியாசமாக இருப்பதை அவதானித்தவாறே அவ்விடத்தில் இருந்து பஸ்ஸை இன்னும் வேகப்படுத்த முனைகின்றார் சாரதி. ஆனாலும் மேலாடையின்றி நின்ற அந்த நபர் எங்கோ ஒரு சமிக்ஞை காட்ட அருகில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து வெவ்வேறு அளவுகளை உடைய கற்கள் பஸ்ஸை நோக்கி பறந்துவரத் தொடங்கின. சடசட எனச் சத்தமிட்டவாறே எல்லாக் கற்களும் பஸ்ஸை முத்தமிட்டபின்னே ஓய்ந்தன. இதனால் பஸ்ஸின் முன் பக்கக் கண்ணாடிகள் நொருங்கி கற்கண்டுத் துகள்கள் போல வீதியெங்கும் விசிறின. ஒரு சில நிமிடங்களுக்கு பஸ்ஸில் பயணித்தவர்களின் இதயங்கள் துடிப்பதை மறந்திருந்தன. கற்களைத் தொடர்ந்து கைகளில் கொலைக்கருவிகளோடு யாராவது வருகிறார்களா? என்ற அச்சமே அவர்கள் மனதில் மேலெழுந்தது. நல்ல வேளையாக அத்தகைய அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை. அத்துடன் கல் வீச்சுக்காரணமாகவும் எவருக்கும் சிறு காயம்கூட ஏற்படாமல் போனதும் அதிசயம்தான். கல்லெறி பட்டவுடனேயே குறித்த இடத்தில் நின்று சடுதியாக பஸ்ஸைக் கிளப்பிக்கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு சென்ற சாரதி அங்கு இச் சம்பவம் தொடர்பாக புகார் ஒன்றையும் செய்துள்ளார்.

**வயதானவர் கந்தஷஷ்டி பாடியதன் அர்த்தம் அதுதான்...!**

இலங்கையின் மிக நீளமான வீதிகளில் ஒன்றான ஏ9 வீதியூடாக பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்குச் செல்லும் பஸ்கள் மீதே இத்தகைய கல்வீச்சுத் தாக்குதல்கள் நிகழத் தொடங்கியுள்ளன. இதற்கு முன்னரும் - ஏப்ரல் 14ஆம் திகதியன்று - இதே நொச்சியாகம பகுதியில் வைத்து, பருத்தித்துறையில் இருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ் இதே போன்று நிகழ்த்தப்பட்ட கல்வீச்சில் தன் முன்பக்கக் கண்ணாடிகளை இழந்திருந்தது. இப்போது இரண்டாம் முறையாகவும் அதே பயணத் தடத்தைக் கொண்டுள்ள பஸ் கற்களால் தாக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பயணிப்போரின் மனதில் ஒருவித பீதி நிலையை உண்டாக்கியிருக்கிறது.

இப்போதெல்லாம் கொழும்புக்குச் செல்வோர் நொச்சியாகம பகுதி வந்தவுடனேயே ஒருவித பதற்ற நிலைக்கு உட்படுகின்றனர். அந்தப் பதற்றத்தின் ஒருவிளைவாகவே என்னுடன் பயணித்த வயதானவர் கந்தஷஷ்டி பாடினார் என்று நினைக்கிறேன்.

**யாழ்.தேவி பல தடவைகள் அழுத பின்னர்தான் இனவாத நெருப்பு கொழுந்துவிட்டது...**

இத்தகைய கல்லெறிச் சம்பவங்களை சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது. ஆரம்பத்தில் சாதாரண கல்லெறியோடு தொடங்குகின்ற செயற்பாடுகள் தான் நாளடைவில் வளர்ந்து, முற்றி மாற்றவே முடியாத அல்லது தீர்க்கவே முடியாத பாரதூரமான பிரச்சினையாக மாறிவிடக்கூடும். கடந்த காலங்களிலும் இதுவே நிகழ்ந்தது. குறிப்பாக யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடுகின்ற யாழ்தேவி ரயில்வண்டி சிங்களப் பிரதேசங்கள் ஊடாகப் பயணிக்கின்ற போது பல தடவை கல்லெறி வாங்கி அழுதிருக்கிறது. இத்தகைய கல்லெறிகள் நாளடைவில் மிரட்டல், வழிப்பறி, தீவைப்பு, என்று பெருகி கடைசியில் சிங்கள - தமிழ் இனங்களுக்குகிடையிலான இனவாத நெருப்பை பெரிதாகக் கொழுந்து விட்டெரியச் செய்யும் ஊக்கியாக மாறியது.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இயல்பு நிலையின் உருவாக்கத்தால் இப்போது மீளவும் சிங்கள - தமிழ் இன நல்லிணக்கம் பலமான முறையில் கட்டியெழுப்பப்படுவதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. ஆனால் அதனைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது இரு இனங்களினதும் பொறுப்பாகும். அத்தகைய பொறுப்பினை உணர்த்துவதும் அதற்குரிய ஏதுநிலைகளை உண்டாக்குவதும் அரசினது கடமையாகும்.

ஆனாலும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் வெண்ணெய்யும் வைக்கின்ற போக்கிலேயே அரசின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இருப்பதாக தமிழ் மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பஸ் மீது கல்லெறி நிகழ்ந்த போதும், அதைப்பற்றி அலட்டிக் கொண்டதாகவோ அல்லது இது போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறாதென்ற உறுதிவார்த்தையை வழங்கியதாகவோ தெரியவில்லை.

**கல்வீச்சு மறுபக்கமாகியிருந்தால் கதையே வேறாகி இருக்கும்**

இத்தகைய கல்வீச்சு தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்களப் பயணிகளின் பஸ்மீது நிகழ்த்தப்பட்டிருந்தால் கதையே வேறு. ஊரே இரண்டு படுமளவுக்கு விசாரணை, கைது என்று அமர்க்களங்கள் நடந்திருக்கும். ஆனால் தமிழ் மக்கள் பயணிக்கும் பஸ் மீது தானே இப்போது கல்லெறி நடந்திருக்கிறது. அதனால் கிணற்றில் போட்ட கல்போல இதுபற்றிய விசார்ணைகள் அமுங்கிப் போய்விட்டன என்று ஆதங்கப் படுகின்றார் அடிக்கடி கொழும்பு சென்று வரும் பயணி ஒருவர்.

அவர் சொல்வதும் சரிபோலவே படுகின்றது. ஏ9 வீதி 2006ஆம் ஆண்டு மீண்டும் போர் தொடங்கியவுடன் இறுக மூடப்பட்ட போது குடாநாட்டு மக்களுக்கான ஒரே ஒரு பயணமார்க்கமாக கப்பல் போக்குவரத்தே இருந்தது. இதற்கென ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் யாழ்.ரயில் நிலையத்தில் கூடி நின்று, 'டோக்கன்' எடுத்த பின்னரே காங்கேசன்துறை ஊடாக பயணிக்க முடிந்தது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோரே பயணிக்க அனுமதிக்கப்பட்டதால் 'டோக்கனைப்' பெறுவதற்காக நாலைந்து நாள்களுக்கு முன்னரே ரயில் நிலையத்துக்கு வந்து காத்திருப்போர் எண்ணிக்கையே அதிகம். இந்த நாள்களில் அவர்கள் தம்முடைய இயற்கைக் கடன்களைக் கழிக்க பட்ட பாடு கொஞ்ச நெஞ்சமல்ல. ஏனெனில் ஒழுங்கான ஒரு மலசலகூடம் கூட அங்கிருக்கவில்லை. ஏறக்குறைய மூன்று வருடங்களாக இந்த நிலையே நீடித்தது. ஆனால் வெசாக் பண்டிகையை முன்னிட்டு துரையப்பா விளையாட்டரங்கில் இது நாள் வரையும் தங்க அனுமதிக்கப்பட்ட தென்னிலங்கைப் பயணிகள் சில நாள்களுக்கு - வெசாக் கொண்டாட்டங்கள் முடியும் வரை - ரயில் நிலையப் பகுதியில் தங்க வைக்கப்பட்டனர். வெறும் நாலைந்து நாள்களே தங்க வைக்கப்பட்ட இந்தப் பயணிகளுக்காக அவசர கதியில் நாலைந்து கழிப்பறைகள் அமைக்கப்பட்டன. கழிப்பறைகளை அமைப்பதில்கூட பாரபட்சம் காட்டுகிறது அரசு. ஆகவே இன்னமும் தமிழர்களுக்கு ஒருவித நீதியும், பெரும்பான்மையினருக்கு இன்னொரு வகையான நீதியையுமே அரசு வழங்குவதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

**ஔண்யன்**

இத்தகைய ஆதங்கங்களைக் களைந்து எல்லா இனத்தவரையும் சமமாக - உண்மையாகவே - நடத்தும் எண்ணம் ஆள்பவர்களுக்கு வர வேண்டும். அதுவே என்றுமே நிரந்தரமான மகிழ்வினை இந்தச் சிறிய நாட்டில் உற்பத்திசெய்யக் கூடியது. உரியவர்களின் காதுகளில் இது ஏறுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்னால் சேர்ச் வீதியில் (பழைய நீதிமன்றத்துக்கு முன்னால்) 4 பரப்பு 2குளி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: யாழ்.ரெக்ஸ், சாவகச்சேரி.

தொ.பே: 077 727 9691, 021 222 9951

# மரண அறிவித்தல்கள்

## வடிவேல் இராசமணி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேல் இராசமணி நேற்று (05.06.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா வடிவேல் அவர்களின் அன்புத் துணைவியும் பன்னீர்செல்வம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தினி மற்றும் மாலினி ஆகியோரின் தாயாரும் நிருபாகரன் (தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் பாசமிகு மாமியாரும் மணிமாறன் (ஸ்கொட்லாண்ட்), ஜெயசுதா (ஸ்கொட்லாண்ட்), சுபேஸ் (ஸ்கொட்லாண்ட்), சதீஸ் (பிரான்ஸ்), அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் டினோசனின் (ஸ்கொட்லாண்ட்) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:* பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.

*தற்காலிக முகவரி:* சிவன் கோயில் வீதி, சுன்னாகம்.

தகவல்: நிருபாகரன் (மருமகன்) தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்).

(99136)

## தம்பு சுப்பிரமணியம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சுப்பிரமணியம் 04.06.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புளோரன்ஸின் அன்புக் கணவரும், நளினி, ரோகிணி, நளின், றொஷாணி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் ஜெவ்றி (கனடா), சுரேக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் பூமணியின் அன்புச் சகோதரனும் கலாமோகன் (லண்டன்), ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷிரோமி, கிஷோர், டிலுக்ஷி, ஷெருணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்துக்கட்டி வீதி, நவாலி. (99125)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## உடன் விற்பனை

வவுனியா, கோயில்குளம் மகாவித்தியாலயத்தின் முன்புறமாக அமைந்துள்ள சுற்று மதிலுடன் கூடிய 3½ பரப்பு 9குளி அளவான காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொ.பே: 021-4904616, 077-9103637

## கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள 3ஸ்ரீ ஒஸ்டின் கேம்ரிஜ் [புலோபோர்ட் கியர் வசதி உடைய] கறுப்பு நிற கார் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்க முடியும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.இல: 0332289477

கையடக்கத் தொ.பே:0718303309

## வீடு விற்பனைக்கு

மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஏழாலை மேற்கில் 2 பரப்பு காணியுடனான வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு 071 4398922

## மணமகள் தேவை

யாழ். இந்து 1985 ஆம் ஆண்டு திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்த லண்டனில் Engineer ஆகத் தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு, இலங்கையில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கும் அழகிய மணமகள் தேவை. படிப்பு லண்டனில் தொடர்வதற்கு வேண்டிய வசதி செய்து தரப்படும்.

தொடர்பு 0777 561346

## German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது)

தொடர்புகளுக்கு - 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை யாழ்ப்பாணம், 90 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு Roshan 071 1279228, +44 78616 96871

e-mail: julianrosh@yahoo.co.lk

## தேவை

4 பேர் கொண்ட டாக்டர் வீட்டில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் உடன் தேவை சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு 077-6936745

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும், கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கும் ஈச்சமோட்டைச் சந்தைக்கும் இடையில் 1 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்ப னைக்குண்டு.

தொடர்பு: S.S.நாதன்,

16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே: 0776146434

# மரண அறிவித்தல்

## செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் விஜேயசுந்தர்

(மென்பந்தாட்டத் தலைவர், 1973ஆம் ஆண்டு புனித சம்பத்திரிசியார் கல்லூரி)



23/1, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் விஜெயசுந்தர் 31.05.2010 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை (விதானையார்)- மேரியக்சொபா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்லையா மைக்கேல் மற்றும் மேரிதிரேசா தம்பதியரின் மருமகனும் மரியஸ்ரெல்லாவின் பாசமிகு கணவரும் பிரியாந்தி, விஜயாந்தி, மைக்வினோத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கண்ணனின் அன்பு மாமனாரும் திருமதி கலாவதி-கொலட், திருமதி கலாநிதி-பஸ்ரியாம்பிள்ளை, திருமதி சந்திரா-குமரகுருபரன், திருமதி ஜெயதேவி-அன்ரன், திருமதி யசிந்தா- கிறிஸ்ரி, திருமதி எறின்-ஹென்றி, மனோகரன் டேமியன், சுரேஸ்திமதி, யூட்மோகன் ஆகியோரின் அன்புத் சகோதரனும், மரியரெட்ணம் சந்திரா, அல்பேட் நிர்மலா, சாள்ஸ் ரவிந்திரன், அன்ரன் சுரேந்திரன், ஜோய் இசபெல்லா, ராஜேஸ்வரன் அமலா, இம்மானுவேல் வனிதா, கென்றி வில்சன், மத்தியூஸ் கெனடி, யோண் நெல்சன், பேர்னாட் யோண்சன், ரூபன் சியாமளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (05.06.2010) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

Mrs.Stella Wijayasundar, 2-30 Sandhurst Cir, Scarborough ON M1S 3N7 T.P: 0014166099563

மைக்கல் மேரி திரேசா 23/1, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே: 0213205771

[99141]


## ARRUL GLOBAL EXPRESS
### INTERNATIONAL COURIER & CARGO SERVICES

உலகின் முதற்தர கூரியர் சேவை நிறுவனத்தினூடாக 260ற்கு மேற்பட்ட நாடுகளுக்கு அதி விரைவு சேவை

- வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் மற்றும் ஆவணங்கள் 48 – 72 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்.
- இலங்கையின் சகல பாகங்களுக்குமான கடிதங்கள் பொதிகள் என்பன 24 மணித்தியாலயத்தில் ஒப்படைக்கப்படும்.
- 05 Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30 % விஷேட சலுகை.

இல 1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம் T.P: 0212226113 Email :- arrulgex@gmail.com


## எந்த ஒரு நாட்டிற்கும் சென்றுவர எங்கும் கிடைக்காத குறைந்த விமானக் கட்டணம் பெற நாடுங்கள் AIR COM TRAVELS & TOURS

### இந்தியப்பயணம் - கொழும்பு/ சென்னை/ கொழும்பு.

- சிறீலங்கன் எயலைன்ஸ் (UL) -15, 200/=
- இந்தியன் எயலைன்ஸ் (IC) -14, 800/=
- ஜெற் எயர் வேய்ஸ் (9W) ---
- KINGFISHER (IT) ---
- ஜெற் லைற் (S2) -12, 800/=
- எயர் இந்தியா எக்பிரஸ்(IX) -12, 500/=
- கொழும்பு, திருச்சி, கொழும்பு MIHIN AIR -14, 500/=
- கொழும்பு, திருவனந்தபுரம், கொழும்பு - UL -24, 000/=
- கொழும்பு, பெங்களூர், கொழும்பு UL
  - ஒரு மாதம் -25,000/=
  - ஆறு மாதங்கள் -33,000/=
  - ஒரு வருடம் -39,300/=

### ஆசிய நாடுகளுக்கு

- கொழும்பு, சிங்கப்பூர், கொழும்பு - UL
  - ஒரு மாதம் -35, 500/=
  - SQ மூன்று மாதங்கள் -39, 000/=
  - CX -29, 500/=
- கொழும்பு, கோலாலம்பூர், கொழும்பு UL -37,000/=
  - MH (ஒரு மாதம்) -29, 950/=
  - AIR ASIA -23, 500/=
- கொழும்பு, பாங்கொக், கொழும்பு
  - UL 14 நாள்கள் -30, 500/=
  - ஒரு மாதம் -32, 510/=
  - TG ஒரு மாதம் -31, 535/=
  - CX ஒரு மாதம் -30, 500/=

### ஐரோப்பிய நாடுகளுக்கு

- கொழும்பு, லண்டன், கொழும்பு - UL
  - நான்கு மாதங்கள் -103,000/=
  - ஆறு மாதங்கள் -111,925/=
  - QR நான்கு மாதங்கள் -77,600/=
- கொழும்பு, லண்டன் - (ஒருவழி)
  - UL -57,660/=
  - QR -60,500/=
- கொழும்பு, பிராங்போட் கொழும்பு - UL
  - நான்கு மாதங்கள் -94,670/=
  - ஆறு மாதங்கள் -104,120/=
  - QR நான்கு மாதங்கள் -92,823/=
- கொழும்பு, பிராங்போட் (ஒருவழி)
  - UL -54,760/=
  - QR -57, 100/=
- கொழும்பு, பரிஸ் கொழும்பு - UL
  - நான்கு மாதங்கள் -95,770/=
  - QR நான்கு மாதங்கள் -93,850/=
- கொழும்பு, பரிஸ் (ஒருவழி) -
  - UL - - 55,710/=
  - QR - - 57,100/=
- கொழும்பு, ரோம், கொழும்பு - UL
  - மூன்று மாதங்கள் - 65,820/=
  - ஒரு வழி - 42,460/=
- கொழும்பு,மிலன், கொழும்பு ---
- கொழும்பு, றோம், பலர்மோ -UL
  - ஆறுமாதங்கள் - 108,750/=

### மத்திய கிழக்கு நாடுகளுக்கு

- கொழும்பு, டுபாய், கொழும்பு
  - MIHIN AIR -40,500/=
- கொழும்பு, டுபாய் (ஒருவழி) - 16,000/=
- கொழும்பு, டோகா - 25,000/=

டோகா *INSURANCE* *- 10,000/=*

மேலே கூறப்பட்ட கட்டண விவரங்கள் முன்னறிவித்தல் இன்றி எந்நேரமும் மாற்றப்படலாம்.

### எங்களின் விசேட சேவைகள்

- எல்லா நாடுகளுக்குமான காப்புறுதி
- மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்பவர்களுக்கான காப்புறுதி.
- இந்தியாவுக்கான விசா பெறல்.
- தூதரகத்திற்கு வேண்டிய பிரயாண வழிகாட்டி கடிதம்.
- வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றம்
- விமான நிலையம் செல்ல வாகன சேவை.

2A, றட்ணம் றோட், கொழும்பு-13.
Tel . 011 4617109 / 011- 75388635
FAX . 0094 - 11 7538635, HOTLINE. 0777310414

## வேலை வாய்ப்பு

*மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் கிளை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும். வேலை வாய்ப்பு பெறவிரும்புபவர்கள் (ஆண், பெண்) இருபாலாரும். திங்கட்கிழமை 07.06.2010 காலை 9-12 மணிக் குள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்,*

**உதயன் கேட்போர் கூடம்**

'உதயன்' பத்திரிகை நிறுவனம்
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு: 0777310414

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் அரசுக்கு ஆதரவளித்த சர்வதேச சமூகம்
# அதன் பின்னரான அரசின் செயற்பாடுகளில் அதிருப்தியுற்றது

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நீடித்திருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது. அந்த ஓராண்டு காலத்துள் இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் எவ்விதம் கொண்டு செல்லப் பட்டிருக்க வேண்டியிருந்தது என்பதையும் எதிர்காலத்தில் அதன் பயணம் எவ்விதம் அமைய வேண்டியுள்ளது என்பதையும் ஆய்வு செய்கிறது இக்கட்டுரை.

பிரபல அரசியல் ஆய்வாளரும் தேசிய சமாதானச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ''ஜெஹான் பெரேரா'' எழுதிய இக்கட்டுரை கடந்த மே மாதம் 23ஆம் திகதிய ''இருதின'' பத்திரிகையில் வெளியாகியது.

அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

**யுத்தத்தோடு** சம்பந்தப்படும் பிரச்சினையானது இந்த நாட்டின் இனங்களோடு சம்பந்தப்படுவதாகும். யுத்தம் முடிந்தது என்ற காரணி, இந்த நாட்டில் வாழும் பல்வேறு இனங்களுக்கிடையில் மாறுபட்ட விதத்திலான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, இதனூடாக இந் நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்குப் பெரும் நன்மை கிட்டியுள்ளதாகக் கொள்ள முடியும். மேலும் இவர்கள் நாட்டின் தேசியப் பிரச்சினையை ஜனநாயகவாதம் தொடர்பானதாகவோ, மனித உரிமைகளுக்காகக் கொண்டு செல்லப்படும் போராட்டமொன்றாகவோ

வந்ததன் மூலம் அரசுக்கும் கூட விசாலமான லாபங்கள் கிட்டியுள்ளன. விசேடமாக, அரசு யுத்தவெற்றியைப் பயன்படுத்திக் கொண்டதோடு, விசாலமானதொரு நற்கருமத்தை அரசு நாட்டுக்கு ஆற்றியுள்ளது என்பதை ஏற்றுக் கொண்ட மக்கள் அண்மைய தேர்தல்களில் மிகப்பெரும் வெற்றியை அரசுக்கு வழங்கினர்.

யுத்தம் நிகழ்ந்த கால கட்டத்தை நாம் நோக்கும்போது, பெருமளவு சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகம் அரசுக்கே உதவிகளை வழங்கி வந்துள்ளது. ஆனாலும் யுத்தம் நிகழ்ந்த இறுதி மாதத்தில் சாதாரண குடிமக்கள் உயிரிழக்கும் பேரழிவு ஏற்படுவதற்கு இடமிருந்துள்ளதைக் கவனத்தில் கொண்ட சர்வதேச சமூகத்தின் சில

அவ்விதமானதொரு பிரதிபலிப்பு தென்படவில்லை. அது தொடர்பாக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது, யுத்தத்தின் பின்னர் அரசு நடந்து கொண்டுள்ள விதமேயாகும்.

சர்வதேச சமூகத்தைக் குறித்து நோக்கும் போது, சர்வதேச சமூகத்தின் பெருமளவு நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்ட அனுபவம் கொண்ட நாடுகளேயாகும். தமக்குள்ளேயே மோதல்களைச் சந்தித்துக் கொண்ட நாடுகளாகும்.

அதன் காரணமாகவே, யுத்தத்தின் தன்மை, அதன் சுபாவம் எத்தகையதுஎன்பதை அவர்கள் மிக நன்றாகவே தெரிந்து வைத்துள்ளனர். யுத்த மோதல்களின் போது பல்லாயிரக் கணக்கில் சாதாரண பொதுமக்கள் மாண்டு போகிறார்கள் என்பதும் அவர்கள் நன்கறிந்து கொண்டுள்ள காரணியொன்றாகும். எனவே இலங்கையரசு யுத்தம் புரியும்போது நிலவும் நிலைப்பாட்டையும் கூட அவர்கள் அவ்விதமே தெளிந்துணர்ந்து கொண்டுள்ளனர். இன்று அவர்கள் முகச்சுளிப்பைக் காட்டி நிற்பதற்கு யுத்தத்தின் பின்னர் அரசு சீரிய பண்பைக் காட்டாதிருந்தமையே காரணமாகியுள்ளது. யுத்தத்தின் பின்னரும் கூட மூன்று லட்சம் வரையிலான மக்களை முட்கம்பி

## யுத்தத்தின் பின்னரும் அரசின் இனவாதச் சுபாவம் மாறவில்லை
## அரசின் இப்போதைய ௨ஆவது கட்டப்போர் சர்வதேசத்துடன்....

காணவில்லை. மாறாக அதைப் பயங்கரவாதமாகவே நோக்கினர். அதன் காரணமாக பயங்கரவாதத்தை ஒழித்து விடுவதால் சிங்களச் சிப்பாய்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழக்காத நிலை, குண்டு வெடிப்புக்களினால் அழிவுகள் என்ற நிலைப்பாடுகள் ஏற்படாமை மற்றும் பொருளாதாரம் மேம்படுவதற்கு வாய்ப்புக்கள் கிட்டும் என்றவாறான எண்ணக் கருக்களின் காரணமாக சிங்கள மக்களுக்குப் பெரும் ஆறுதல் கிட்டியுள்ளது.

ஆனாலும் தேசியப் பிரச்சினையின் சுபாவம் என்ற ரீதியில் உருவான யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதன் ஊடாக நாடு வேறு பல அனுபவங்களுக்கும் முகங்கொடுக்கவேண்டி நேர்ந்துள்ளது.

யுத்தம் முடிந்து போனதன் ஆறுதலை தமிழர்களும் உய்த்துணர வேண்டியிருந்தாலும் கூட, அது தொடர்பான அவகாசமொன்று அவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை - ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அதற்கு இரண்டு காரணிகள் உள்ளன. ஒன்று விடுதலைப் புலிகள் கோரி நின்று போராடிய உரிமைகள் மற்றும் தமிழ் மக்களுக்கான பலம் என்ற எதுவொன்றும் தமிழ் மக்களுக்குக் கிட்டாது போயுள்ளதோடு, அவ்விதம் கிட்டக் கூடுமென்ற எதிர்பார்ப்பும் தென்படவில்லை. அரசின் மூலமாக - அதிகாரம் பகிரப்படும் - தமிழ் மக்களுக்கு அதிகாரபலம் கிட்டும் செயற்திட்டமொன்று தொடர்பாக எந்தவொரு சாதகமான நிலைப்பாடும் தென்படுவதாக இல்லை.

இரண்டாவது -

யுத்தத்தால் பாதிப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு எந்தவொரு நலனும் கிட்டியிருக்கவில்லை. அவர்களது நிலைப்பாடு யுத்தம் நிலவியவேளையை விடச் சற்று வரவேற்பானதே என்றாலும் கூட அவர்கள் எதிர்பார்த்திருந்த முன்னேற்றம் கிட்டாது போயுள்ளது.

பொதுவாக நோக்குமிடத்து, யுத்தம் முடிவுற்று ஓராண்டு கழியும் இன்றைய நிலையில் மக்களிடையே ஏதோவொரு மலர்ச்சி தென்படுவதோடு, குறிப்பாக தமிழ் மக்களுக்கும் கூட பிரதானமாக அவர்கள் எதிர்பார்த்த உயிர்ப்பாதுகாப்பு அவர்களுக்குக் கிட்டியுள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு

தரப்புக்கள் யுத்தம் மூலமாக அல்லாது பேச்சுவார்த்தைகள் மூலம் இந்த விவகாரத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு அரசுக்குக் கோரிக்கை விடுத்து நின்றன.

அந்த இறுதிக் கட்டத்தில் மட்டும் தான் அவை அவ்விதம் கோரிக்கை விடுத்து நின்றன. எஞ்சிய கால கட்டங்கள் முழுவதிலும் அவை விடுதலைப் புலிகள் அமைப்பை நிர்மூலமாக்கிவிடுவது தொடர்பாக அரசுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கி வந்தன. அந்த வகையில், விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தடை விதித்தல், அவர்களுக்கு உரிய சொத்துக்கள், நிதி வளங்கள் தொடர்பாகத் தடைகளை ஏற்படுத்திவிடல், விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேசத் தலைவர்களைக் கைது செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலமாக சர்வதேச சமூகம் இலங்கையரசுக்கு லாபகரமான விதத்திலேயே செயற்பட்டது. இங்கு, யுத்தம் தீவிரம் பெற்ற அந்த இறுதி மாதத்தில் சாதாரணக் குடிமக்களுக்காக சர்வதேச சமூகம் குரலெழுப்பி நின்றதைக் காரணமாக்கி, சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளுக்கு ஒத்தாசை வழங்கி நின்றதாகவும், பலம் பொருந்தியதொரு அரசாகச் செயற்பட்டு தாம் யுத்தத்தில் வெற்றியீட்டிக் கொண்டதாகவும் விளம்பரப்படுத்திக் கொண்டு, இலங்கையரசு சர்வதேச சமூகத்தின் மீது குற்றம் சுமத்த ஆரம்பித்தது. ஆனால் அது உண்மையான காரணியல்ல. உண்மையில் யுத்தம் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட அந்த இறுதி மாதத்தில் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் மாண்டு போயினர். ஆனாலும் இது தொடர்பான மிகச் சரியான புள்ளி விவரங்களை எவரும் அறிந்திருக்கவில்லை. சில தரப்பினர் அவ்விதம் மாண்டு போனோரின் எண்ணிக்கைப் பிரமாணம் ஏழாயிரம் வரையில் இருக்கலாமென்பதாகவும், வேறு சில தரப்பினர் அது, நாற்பதாயிரம் வரையிலோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவும் இருக்கக்கூடும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

சாதாரணமான கண்ணோட்டத்தில் நோக்கும் போது, யுத்தத்தில் வெற்றியீட்டிக் கொள்வது தொடர்பாக இலங்கை அரசுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கி நின்ற சர்வதேச சமூகமானது, இலங்கையரசின் யுத்த வெற்றி தொடர்பாகப் பெருமிதமடைய வேண்டியிருந்[illegible] அதனிடம் [illegible]

வேலிகளுக்குள் சிறை செய்து வைத்தமையானது மனச்சாட்சியுள்ள மனிதர்கள் என்ற ரீதியில் நிராகரிக்கப்பட வேண்டியதாகும். அந்த மூன்று லட்சம் மக்களும் விடுதலைப்புலிகள் என்றவாறே அரசினால் கருதப்பட்டது. இருந்த போதிலும், பச்சிளம் பாலகர்களும் உள்ளடங்கியிருந்த அந்தப் பொதுமக்களைச் சிறைப்படுத்தி வைத்ததன் மூலம் இலங்கை அரசு இதயமற்ற அரசு என்ற தகவல் உலக மட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனூடாக அரசு பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியது.

முக்கியமாக விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், அந்த மக்களை அரசு கருணைக் கண்களுடன் நோக்கிச் செயற்பட்டிருக்குமானால், சர்வதேச சமூகம் அரசுக்கு இத்தகைய பிரதிபலிப்பைக் காட்டி நிற்க மாட்டாது. இத்தகைய நடைமுறைகளே போர்க்குற்றங்கள் போன்ற குற்றச்சாட்டுக்கள் அரசின் மீது சுமத்தப்படுவதற்குக் காரணமாகின்றன. ஜெனரல் சரத் பொன்சேகாவும் கூட ஒரு விதத்தில் இதற்குப் பங்காளியாகிறார். இராணுவத்துக்கு இன்னமும் ஒரு லட்சம் பேர் வரையில் சேர்க்கப்பட வேண்டியுள்ளதென்ற அவரது கருத்து வெளிப்பாடு மற்றும் வடபுலத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் இராணுவ முகாம்கள் அமைய வேண்டுமென்ற அவரது கருத்து வெளிப்பாட்டின் ஊடாகவும் அவரும் இதில் பங்காளியாகிறார். எவ்வாறோ, ராணுவத்திற்கு ஒரு லட்சம் துருப்புக்கள் சேர்த்துக் கொள்ளப்படாத போதிலும், தற்போதுள்ள ராணுவத்தினரைப் பயன்படுத்தி இன்று அந்த இராணுவ முகாம்களை அரசு நிறுவி வருகிறது. அத்தோடு, மக்களின் கண்களுக்குப் புலப்படாத பெருமளவு கருமங்களும் கூட வடக்கில் நிகழ்ந்துள்ளன.

பதினோராயிரம் வரையிலான விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ள போதிலும், அவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதை எவரும் அறியார். அதுமட்டுமல்லாது குறைந்த பட்சமாக செஞ்சிலுவைச் சங்கத்தால் கூட அவர்களைச் சந்திக்க இயலாது. அரசால் தூரநோக்குத் தன்மையொன்று பேணப்படாததன் காரணமாக அரசின் யுத்த வெற்றி தொடர்பாக சர்வதேச சமூகத்தின் தெளிவு இல்லை - காத்திரம்



இல்லை.

அந்த வகையில், சர்வதேச சமூகமானது தெற்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைவிட இவ்விதமாக வடக்கில் வாழும் மக்களின் பிரச்சினைகளையே காத்திரம்மிக்கதாக நோக்கி வருகிறது.

எனது கண்ணோட்டத்துக்கு அமைய எதிர்பார்த்திருந்த பெருமளவு விடயங்கள் யுத்தத்தினாலும் கூட நிறைவேறவில்லை. குறிப்பாக யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், அரசின் இனவாதச் சுபாவம், உணர்வுகள் மற்றும் அது கருத்து வெளியிடும் தோரணை தணிந்து குறைந்து போகலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இன்னமும் அரசு இனவாதத்தை உச்சப்படுத்தியே நிற்கிறது. யுத்தம் முடிந்து போனதன் பின்னரும் இனவாதத்தை உச்சப்படுத்தி நிற்பது அவசியமற்றதாகும் - அர்த்தமற்றதாகும். ஏனெனில் தொடர்ந்தும் மோதிக் கொள்வதற்கு எதிரியென்று எவரும் இங்கில்லை.

ஆனாலும் புதுமை என்னவென்றால் இன்னமும் யுத்தம் முடிந்து விடவில்லையென்பது தெரியத்தக்கதாகப் புலப்படுவதேயாகும். அதாவது அதற்குப் பதிலாக யுத்தத்தின் இரண்டாம் கட்டம் என்றவாறு சர்வதேசத்துடன் மோதிக் கொள்ளும் யுத்தமொன்று அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ''சர்வதேச சமூகம் புலம்பெயர் தமிழர் தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உயிர்ப்பிக்கின்றது'' என்றவாறு யுத்தத்தை சர்வதேச மட்டத்துக்கு இட்டுச்செல்ல அரசு எத்தனித்து வருகிறது. நாம் அரசைக் குறை கூறினால் - சர்வதேசத்துக்கு நாட்டின் தவறுகளை எடுத்துரைத்தால், நாம் துரோகிகளாகிவிடுகிறோம். அரசுக்காகக் குரல் கொடுக்காதிருப்போர் துரோகிகளாக முத்திரை குத்தப்படுகிறார்கள். இதனூடாக யுத்தம் இன்னமும் முடிந்து விடவில்லையென்பது புலப்படுகிறது.

மேலும், இனவாதம் இன்னமும் முடிவுக்கு வரவில்லையென்பதோடு அது மென்மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அதனோடு

**தமிழில்: சரா**

இணைந்ததாக அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற யுத்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங் களும் விதிகளும் தற்போதும் கூட நடைமுறையில் உள்ளன. அந்தவகையில் யுத்தம் முடிந்துள்ள போதிலும் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை. அது மட்டுமல்ல நாமறிந்த வகையில் வடக்குக் கிழக்கில் வாழும் மனிதர்கள் மீளவும் காணாமல் போவதாகத் தகவல்கள் கிட்டுகின்றன. இலங்கையென்பது சிறியதொரு தீவாகும். இத்தகைய பயங்கரங்கள் அங்கு நிகழுமானால், அது தெற்கிலும் கூட நிகழக்கூடும். அதனூடாக மீளவும் எம்மிடையே நிச்சயமாகப் பீதியும், சந்தேகமும் தலைதூக்கலாம்.

(மிகுதி நாளை வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

- ★ 3-6 மாதங்களில் சகல விதமான நோய்களையும் பக்க விளைவுகளற்ற இயற்கை இணை உணவுக் குளிகைகள் மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம்.
- ★ உடற்பருமனை 30 நாள்களில் 5-10 கிலோ வரை குறைக்கலாம்.
- ★ நீண்ட காலமாகக் குழந்தைப் பேறு இல்லாதவர்கள், உடற்பலவீனம், தலைமுடி பாதுகாத்தல் என்பவற்றுக்கு விசேட சிகிச்சை.
- ★ உடற்பருமனைக் குறைத்தல் உட்பட அநேக நோய்களைக் குணப்படுத்தும் இயந்திரம் எம்மிடம் உண்டு. ஒரு தடவை பாவனைக்கு ரூபா.50/= மட்டுமே.

**Tiens Health and Wealth Centre**
54,சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778449890



வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வென்னி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பாற்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.




**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(சி/555208)



**Bachelor of Social Work (BSW)**
**Bachelor of Project Management (BPM)**
**Diploma in Project Management Project (Dip.PM)**
(குறுகிய காலப்பயிற்சி நெறிகள்)

CIPM-UK நிறுவனத்துடன் இணைந்து எமது நிறுவனத்தினால் தொலைக்கல்வி முறையில் (Distance learning Method) நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட குறுகிய கால பட்டமாணி மற்றும் டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணமாக ரூபா.100 பெறுமதியான காசுக் கட்டளையை பின்வரும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பயிற்சி நெறியின் பெயர், உங்கள் பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துக்கான காசுக் கட்டளை பின்வரும் ஒழுங்கில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

பணம் செலுத்தும் தபாற்கந்தோர்: Kandy
பணம் பெறுபவர்: Executive Director, Mecwin Resource

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
**Programme Coordinator,**
**Mecwin Resource,**
**P.O.Box 206, Kandy.**


### ஹொக்கிப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரியில்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன், யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு, பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே.எப்.ஏ. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (86)

### அரையிறுதி ஆட்டங்கள்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி ஆட்டத்தின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி களமிறங்குகிறது. நண்பகல் ஒருமணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி களமிறங்குகின்றது. (6-56)


## கடைகள் வாடகைக்கு உண்டு

இல.70, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியிலுள்ள கடைத்தொகுதிக் கடைகள் (தனியாகவும்) கொடுக்கப்படும்.
தொடர்பு: அம்பாள் மரக்காலை
261, வீரமாகாளி அம்மன் கோயிலடி.
தொ.பே: 021-492 1012
மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

## தேவை

குருநகர் கடற்கரை வீதியில் இயங்கும் பனிக்கட்டித் தொழிற்சாலைக்கு ஆண் உதவியாளர் தேவை. வயது-18-30
தொடர்பு:
புறமோட்டேர்ஸ் என்ஜினியறிங்,
கம்பனி லிமிட்டட்,
33,நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.


## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கும், மானிப்பாய் M.P.C.Sஇற்கும் இடையில் பிரதான வீதியில் 3½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. வியாபார ஸ்தலத்துக்கு உகந்தது.
தொடர்பு - 00447904254490,
0777105609.

## காணி தேவை

கிளிநொச்சி நகரம் பிரதான வீதி அருகில் நிறுவனம் ஒன்று அமைப்பதற்குக் காணி அல்லது கடை தேவை.
தொடர்பு:
0779110666 (சுரேஸ்)






**Union Assurance** is a leading corporate citizen backed by the strength and stability of one of Sri Lanka's largest conglomerates–John Keells Holdings PLC. Standing on a cornerstone of trust for more than 20 years we have gone onto win the hearts of our customers and employees alike with our integrity and professionalism. Our corporate transparency has garnered us numerous local & international accolades – Union Assurance is one of the most respected corporate entities in Sri Lanka today. Having begun the new decade with a spring in our step we invite you to join the elite force in the chain of trust.

We are in the process of expanding our distribution channels and at present working with some of the reputed banks operating island-wide to offer financial solutions for their customers.

**The Job**
As a Bancassurance Assistant you will be stationed at a branch location belonging to a leading bank. You will be responsible to promote our life insurance products to banking customers on recommendation of the respective bank manager and service those customers on their insurance needs.

**Locations**
Candidates who are residing in following geographical areas are invited to apply for the above post:
**Jaffna, Vavuniya, Mannar, Trincomalee, Batticaloa, Kilinochchi**

**Eligibility**
To be successful you will need to have passed G.C.E. Advance Level and should possess:
- A credit pass for English language at G.C.E. Ordinary Level.
- Motor bike riding license.

Candidates below 25 years of age are encouraged to apply.

The selected candidates will be recruited on fixed term contract basis and high performers can look forward to a rewarding career with a clear path towards personal and professional success coupled with advanced training opportunities and an attractive remuneration package.

Applicants are advised to indicate the position and geographical location applied for on top left corner of the envelope or subject bar of the e-mail and send their CVs along with names of two non-related referees within 10 days of this advertisement to;

Manager, Human Resource Services
Union Assurance PLC
No. 20, St. Michael's Road,
Colombo 03.
E-mail: careers@ualink.lk

union assurance
*Trust in your tomorrow, today.*

5th Elephant



# Correspondents from North & East

Sri Lanka's leading English language weekly 'The Sunday Times' is set to increase its influence in the North and East at the earliest.

Towards this end we are looking for correspondents based in those areas to join our editorial team.

If you are not a clock watcher, could preferably write in English, stick to dead lines and prepared to work as a team, then we are interested in meeting you.

Experience in photography will be useful.

**Please forward your details on or before June 15, 2010 to**

Editor
The Sunday Times
No 8,
Hunupitiya Cross Road,
Colombo 02

email:
editor@sundaytimes.wnl.lk

the SUNDAY TIMES



# Voyages Lanka Plc

**இலங்கையின் தென்பகுதிக்குச் சுற்றுலா செல்லுங்கள்**

கண்டி, சிகிரியா, கதிர்காமம், தம்புள்ள, நுவரெலியா போன்ற இடங்களுக்குச் சுற்றுலாச் செல்லுங்கள்.

**4 நாள்கள் 3 இரவு**

- ★ யாழ்ப்பாணத்திலிருந்து JUNE 11ஆம் திகதி காலை புறப்பட்டு 14ஆம் திகதி மாலை திரும்பிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ★ HOTEL இல் தங்குமிட வசதிகள் காலை மற்றும் இரவு உணவும் வழங்கப்படும்.
- ★ குளிரூட்டப்பட்ட வாகனத்தில் போக்குவரத்து வசதிகள்.
- ★ இவையனைத்துக்குமான தனிநபர் கட்டணம் 17800 மட்டுமே.

**2 நாள்கள் 1 இரவு**

அநுராதபுரம், சிகிரியா, கபறண, தம்புள்ள போன்ற இடங்களுக்கு

- ★ யாழ்ப்பாணத்திலிருந்து JUNE 12ஆம் திகதி காலை புறப்பட்டு 13ஆம் திகதி மாலை திரும்பிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ★ HOTEL இல் தங்குமிட வசதிகள் காலை மற்றும் இரவு உணவும் வழங்கப்படும்.
- ★ குளிரூட்டப்பட்ட வாகனத்தில் போக்குவரத்து வசதிகள், வழிகாட்டி ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.
- ★ இவையனைத்துக்குமான தனிநபர் கட்டணம் 7990 மட்டுமே.

எம்முடைய சேவைகள்:
- ★ கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான உதவிகள்.
- ★ உலகின் எந்த நாட்டிற்கும் செல்வதற்கான விசா (Student, Visit Visa)
- ★ உலகின் எந்த நாட்டிற்கும் விமானப் பயணச்சீட்டுக்கள் பெற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**வொயஜெஸ் லங்கா**
137, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-7200404, 021-7200405


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியத்தின் வட பகுதி உறுப்பினர்களது பிரச்சினைகளுக்கு நேரடித் தீர்வு கண்டு உதவிய நடமாடும் சேவை

**கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாக, யாழ்.குடாநாட்டில் தனியார் துறைகளில் பணிபுரியும் மற்றும் அரச ஒய்வூதியத் திட்டத்தில் உள்வாங்கப்படாத கூட்டுத்தாபன மற்றும் சபைகளில் கடமை யாற்றும் ஊழியர்களினது ஊழியர் சேமலாப நிதி செலுத்துதல் மற்றும் மீளப்பெறுதல் நடவடிக்கை களில் நிலவிய பின்னடைவுகள் காரணமாகக் குறிப்பிட்ட ஊழியர் தரப்பினர் பல சிரமங்களை யும் கஷ்டங்களையும் எதிர்நோக்க வேண்டியிருந் தது. இவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கில் கடந்த மாதத்தில் குறிப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத் தால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையில் இடம்பெற்ற நடவடிக்கைகள் குறித்து விவரிக்கும் தொகுப்பு இது.**

தனியார் துறையைச் சேர்ந்த பணியாளர்களினதும் அரச ஒய்வூதியத் திட்டங்களில் உள்வாங்கப்படாத அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளைச் சேர்ந்த பணியாளர்களினதும் எதிர்கால வாழ்க்கைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலை நோக்காகக் கொண்டு ஊழியர் சேம லாப நிதியம் 1958ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல்கள் காரண மாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பணிபுரிந்த மேற்குறித்த பிரிவுள் அடங்கும் பணியாளர்களுக்கு நீண்ட காலமாக இந்த நிதியத்தின் மூலமான பலன்களைப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

அதாவது, பணிகொள்வோர், பணியாற்றுவோர், மாவட்டத் தொழில் திணைக்களம், இலங்கை மத்திய


டது. அத்துடன் குழுக் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

இதன் மூலம் பணிகொள்வோர், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான தெளிவான விளக்கங்களைப் பெற்று தமது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை உணர்ந்து செயற் படக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டதாகக் கருதமுடிந்தது.

யாழ்.மாவட்டத்திலுள்ள தொழில் தருநர்கள் தமது ஊழியர்கள் தொடர்பாக நியாயமாக நடந்த கொள்பவர் களாகவும், தொழில் முயற்சியில் ஊக்கம் உடையவர்களாக வும் செயற்படுவதனை அவதானிக்க முடிந்ததாக மத்திய

வத்தை உறுதிப்படுத்தல், விண்ணப்பங்களைப் பரிசீலித் தல் உள்ளிட்ட நிர்வாகச் செயற்பாடுகளை யாழ்.தொழில் திணைக்களமும், ஊழியர் சேமலாப நிதியக் கணக்கைப் பேணுதல், அதனை மீளளித்தல் உள்ளிட்ட அனைத்து நிதி தொடர்பான செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கி யின் பிரிவும் இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்தன.

இவை இரண்டும் இணைந்து நடமாடும் சேவையை நடத்தியதன் மூலம் நிர்வாகம், நிதி ஆகிய இரண்டு செயல் முறைகளையும் ஒரே இடத்தில் மேற் கொள்ள முடிந்தது. இதனால் இதுவரை காலமும் இழிபறி யிலிருந்த, கிடப்பில்





வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் மேலதிக கண்காணிப்பாளர் திருமதி செனவிரட்ண தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத் தொழில் திணைக்களத்

போடப்பட்ட அங்கத்தவர்களது தேவைகளுக்குத் துரித கதியில் தீர்வு காணமுடிந்தது.

இதேவேளை கடந்த மாதம் 21 ஆம் 22 ஆம்

## சேமலாப நிதியுடன் தொடர்புடைய 2500 இற்கு மேற்பட்டோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு ஆகிய நான்கு முக்கிய தரப்புகளுடன் தொடர்புடையது இந்த ஊழியர் சேமலாப நிதியம். இந்த நான்கு தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாக மாத்திரமே இந் நிதியத்தால் திருப்தியான சேவையை வழங்க முடியும்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக இலங்கை மத்திய வங்கிக் கும் மாவட்ட தொழில் திணைக்களங்களுக்குமிடையில் நேரடி உறவுகள் மேற்கொள்ள முடியாத நிலை நீண்ட காலமாக நிலவி வந்தது. தொலைபேசி மூலமாகவும், தபாற் சேவை மூலமாகவும் மட்டுமே பரிமாற்றங் களைப் பேணமுடிந்தது.

இதேவேளை பணிகொள்வோரைப் பதிவு செய்தல், அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட செயல்முறை களை மாவட்ட தொழில் திணைக்களங்களால் உரிய முறையில் மேற்கொள்ள முடியாதநிலை நிலவியது.

மேற்குறிப்பிட்ட நிலை காரணமாக நான்கு தரப்பு களும் ஒன்றிணைந்து செயற்படமுடியாத நிலைமை நிலவியது. இதனால் ஒய்வூதியத்திட்டத்தில் உள்வாங் கப்படாத பணியாளர்களது நலன்கள் முறைப்படி பேணப் பட முடியாத பின்னடைவு நிலை நிலவிவந்தது.

இந்த நிலையில், அண்மையில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமநல நிதிப்பிரிவும், யாழ். மாவட் டத் தொழில் திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்து நடத்திய இரண்டு நாள்கள் நடமாடும் சேவை மூலம் யாழ். குடாநாட்டில் தனியார் துறைகளில் கடமை புரியும் - ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் வகிக்கும் ஊழி யர்கள் அதிகளவில் நன்மை பெறக் கூடியதாக இருந்தது.

யாழ்.தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அதன் உதவித் தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரன் தலைமையில் கடந்த மே மாதம் 19ஆம், 20 ஆம் திகதி களில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இந்த இருநாள் நடமாடும் சேவை இடம்பெற்றது.

குறிப்பிட்ட இந்த நடமாடும் சேவை தொழில் திணைக்கள வரலாற்றில் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றிருக்கிறது. இதன் மூலம் நீண்டகாலமாகத் தமது சேமலாப நிதி செலுத்துதல் தொடர்பான சிக்கல்களுடன் காத்திருந்த இரண்டா யிரத்து ஐந்நூற்றுக்கும் அதிகமான தனியார் தொழில் துறைசார் தரப்பினர் பயனடைந்துள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் மேலதிக கண்காணிப்பாளர் திருமதி செனவிரட்ண, பதில் கண்காணிப்பாளர் வடிவேல் பாஸ்கரன் உள்ளிட்ட 14 பேர் கொண்ட உயரதிகாரிகள் குழுவொன்று இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்ளவென யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

நடமாடும் சேவையில் முதல் நாள் இடம்பெற்ற ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வில் கலந்துகொள்ளவென யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பணி கொள்வோர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இதன் காரண மாக நிகழ்வு இடம்பெற்ற யாழ். வீரசிங்கம் மண்டபம் நிறைந்திருந்தது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாகச் செயற்பாடு கள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள், அங்கத்துவ அனுகூலங்கள், சேவைகள், இலத்திரனியல்முறை ஊடாகத் தகவல்களைச் சேகரித்தல், அதன் பிரயோகம் என்பவை தொடர்பாக மத்திய வங்கியின் பிரதிநிதிகளாக வருகை தந்த வளவாளர்கள் மிகத் தெளிவாக விளக்கமளித்தனர்.

முக்கியமாகப் பணிகொள்வோருக்குரிய பொறுப்பு களும் கடமைகளும் மற்றும் அவற்றை அவர்கள் மீறும் போது வழங்கப்படத்தக்க தண்டனைகள் என்பன குறித் தும் இச் செயலமர்வில் மிகவும் அழுத்திக் குறிப்பிடப்பட்

தில் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களின் குறை, நிறைகள் மற்றும் சிரமங்கள் குறித்து கேட்டறியப்பட்டுள்ள துடன் அவர்களின் பிரச்சினைகளுக்கும் துரிதமாகத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு விவரங்களை எவ்வாறு அறிவது, நிதியத்திலிருந்து வினைத்திறனான சேவையை எவ்வாறு பெற்றுக்கொள்வது, பெயர் மற்றும் கணக்கு விவரங்களில் மாறு பாடுகள் இருப்பின் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பவை குறித்தும் அங்கத்துவ மீள்பதிவுத் திட்டம், நிதியத்தின் நன்மைகள், அங்கத்தவர் களுக்கான வீடமைப்புக் கடன் உள்ளிட்ட விடயங்கள் தொடர் பாகவும் விரிவான விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் அவை தொடர்பாகச் சேவை பெறவந்த அங்கத்தவர்களுடைய தேவை கள் துரிதமாக நிறை வேற்றிக் கொடுக்கப்பட்டன.

இவ்விதம் இந்த இரு நாள்கள் நடமாடும் சேவை மூலமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் தமது கணக்குத் தொடர்பாக அறிய விரும்பிய விவரங்களை அறிந்துகொண்டனர். 250 இற் கும் மேற்பட்ட தவறான கணக்கு இலக்கங்கள் இனங் காணப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் புதிய கணக்கு இலக் கங்கள் வழங்கப்பட்டன. மேலும் 250 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுக்குப் பெயர் மாற்றங்களும் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் அங்கத்தவர்கள் 150 பேரின் மீளளிப் புக்களுக்கான நடவடிக்கைகள் துரிதமாக்கப்பட்டன.

இவை மட்டுமன்றி, அங்கத்துவ விண்ணப்பப் படிவ மான 'பி' படிவம் 25 பேருக்கும் நிதி மீளளிப்பதற்கான 'கே' படிவம் 55 பேருக்கும் வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக இதுவரை காலமும் நிலவிவந்த நடைமுறைப் பிரச்சினைகளுக் கும் உரியமுறையில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

அதாவது பணிகொள்வோரைப் பதிதல், அங்கத்து

**தொகுப்பு - உமா -**

திகதிகளில் மேலும் இருநாள்கள் நடமாடும் சேவை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை மீளளிப்பது தொடர்பான இந்த இரு நாள்கள் நடமாடும் சேவையினைக் கொழும் பிலுள்ள தலைமையகமும் தொழில் திணைக் கள யாழ். மாவட்டத் தொழில் திணைக்களமும் இணைந்து நடத்தின.

சேமலாப நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக மீளளிப்புப் படிவமான 'கே' படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பியவர்களில் 350 இற்கும் மேற்பட்டவர் களின் விண்ணப்பங்களில் இருந்த குறைபாடுகள் இனங் காணப்பட்டிருந்தன. எனவே அவற் றைச் சரிசெய்து மீளளிப்பைத் துரிதப்படுத்தும் நோக்கி லேயே இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதில் 300 இற்கும் அதிகமான அங்கத்தவர்கள் பங்கேற்றனர்.

இதற்கென திருமதி டி.ஆர்.பெரேரா, திருமதி வசந்திகடயஸ், கே.வசந்தன் ஆகிய மூன்று உதவித் தொழில் ஆணையாளர்களின் தலைமையிலான பத்து பேர் அடங்கிய குழுவொன்று கொழும்பு தலைமையகத் திலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தது.

ஊழியர் சேமலாப நிதி மிளளிப்பு இதுவரை காலமும் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தால், மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்.தொழில் திணைக்களம் ஊடாக மீளளிப்பை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நான்கு தினங்களாக இடம்பெற்ற நடமாடும் சேவை மூலம் யாழ்.மாவட்டத்திலுள்ள ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் பெருமளவில் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை மறுக்க இயலாது.

நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள பொதுமக்களது தேவைகளை நிறைவேற்ற இவ்வாறான நடமாடும் சேவைகள் அனைத்துத் துறைகளிலும் இடம்பெற வேண் டும். அதுவே அனைவரது எதிர்பார்ப்புமாகும். ****

# தண்டனைத் தீர்ப்பு இல்லை

கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவருடைய சொத்துக்கு ஒருவர் உரிமையாளர் என்றால் கிறிஸ்துவே அவர் பக்கமாய் நின்று பரம தந்தைக்கு முன்னால் நின்று அவருக்காகப் பரிந்து பேசுகின்றார்.

கடவுளை நாம் சார்ந்திருக்கும் பொழுது நம்மை எதிர்த்து நிற்பது யார்? எவ்வளவுதான் ஒருவர் பாவியாய் இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் வாழும் பொழுது கிறிஸ்துவே அவருக்காக வக்கீலாகப் பரம தந்தையிடம் வாதாடுகின்றார்.

ஒருநாள் பாவத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை பரிசேயர்கள் இயேசுவுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள். (யோவா 8: 1 - 11) இவள் விபச்சாரத்தில் பிடிபட்டவள் என்றும் சட்டத்தின் படி கல்லால் எறிந்து கொல்லவேண்டும் என்றும் அந்தப் பெரியவர்கள் பாவிப் பெண்ணைப் பற்றி திரும்பத் திரும்ப பரிசேயர் அந்தப் பெண்மேல் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இயேசு சிறிது நேரத்திற்கு பிறகு " உங்களில் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல்லெறியட்டும்" என்று கூறிவிட்டு பேசாதிருந்தார். குற்றம் சாட்டியவர்கள் அந்த இடத்தை விட்டு நழுவி விட்டனர். அந்தப் பெண் மட்டும் நிற்பதைப் பார்த்து " பெண்ணே எங்கே அவர்கள்? உனக்குத் தீர்ப்பிட வில்லையா"? என்று கேட் டார். "ஒருவரும் தீர்ப்பிடவில்லை" என்று அவள் சொன்னாள். "நானும் தீர்ப்பிடேன்' என்று சொல்லி அவளை ஆறுதல் படுத்தினார். இதில் நமக்கு பெரிய உண்மை வெளியாகின்றது. இயேசு மிகுந்த இரக்கம் உள்ளவர். எத்தனையோ பேர் அந்தப் பெண்ணுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்களைக் கொண்டு வந்தபோதும் அந்தப் பெண்ணின் பக்கமாக இயேசுபரிந்து பேசுகின்றார். குற்றம் சாட்டியவர்கள் எல்லோரும் தோற்கடிக்கப்பட்டவர்கள். கடவுளுக்கு முன் அந்தப் பெண் ஏற்றுக் கொள்ளப்படுகின்றாள். அவளுடைய குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன. இயேசுவே அவள் சார்பில் நின்று விரோதிகளை முறியடித்து விடுகின்றார்." கிறிஸ்துவுக்குள்" என்று சொன்னால் இதுதான் அர்த்தம். எத்தனை பாவியாக இருந்தாலும் அவளுக்காகக் கிறிஸ்து இயேசு கடவுளிடம் பரிந்து பேசி [illegible] கிறிஸ்துவுக்குள் ஒருவர் வாழுகின்றார் என்றால் அவர் கடவுளின் [illegible] ஆகின்றார். - க.அருள்நேசன், பரி.புதுமை மாதா ஆலயம், குருநகர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

1. Account Clerk
2. தாதி
3. தாதி பயிற்சிபெற விரும்புபவர்கள்
4. ஆங்கில மருந்தில் அனுபவமுள்ளவர்கள்.

07 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.
**சம்பந்தர் மெடிகேர் கிளினிக்,**
08, இராமையார் செட்டியார் வீதி,
(நாதன் தியேட்டர் அருகே), யாழ்ப்பாணம்.

## நெற்காணி விற்பனைக்குண்டு

நல்ல விளைச்சல் தரக்கூடிய நெற்காணி 55பரப்பு (வண்ணா ஏணி) மறவன்புலோவில் கேரதீவு வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு:- **செ.சுப்பிரமணியம்**
(S.K.ஆறுமுகம் வீடு), கைதடி நாவற்குழி,
தொலைபேசி:- 077 0505776, 021 3008374
(99081)

## யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

## கவிதை, கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள்

**கவிதை, கட்டுரைக்கான தலைப்புக்கள்:**
* ''ஊனம் என்பது வாழ்வின் முடிவல்ல''
* ''மாற்றுவலு கொண்டும் வாழலாம்''
* ''மாற்றுவலுவுடையோருக்கு இயல்பு வாழ்வு அளித்தலில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பங்கும் பணியும்''

**கட்டுரை**
கட்டுரை 300 சொற்களுக்குக் குறையாமலும் 400 சொற்களுக்கு மேற்படாமலும் A4 தாள் ஒவ்வொன்றிலும் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படவேண்டும்.

**கவிதை**
கவிதை 4 அல்லது 5 அடிகளைக் கொண்டதாகவும் ஒவ்வொரு அடியும் 4 அல்லது 5 வரிகளைக் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.

**சுவரொட்டிக்கான தலைப்பு**
''ஊனம் என்பது வாழ்க்கையின் முடிவல்ல''

**போட்டிக்கான விதிகள்:**
- தரம் 9 தொடக்கம் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள்.
- மாற்றுவலுவுடையோர் மற்றும் எமது நிறுவனத்தின் பயனாளிகள்.
- ஏனைய பொதுமக்கள்.

ஆகியோர் மேற்படி போட்டிகளில் பங்குபற்றலாம்.

**போட்டிக்கான நிபந்தனைகள்:**
* மாணவர்களின் ஆக்கங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
* கட்டுரை, கவிதை, ஆக்கங்கள் தெளிவாக எழுதப்படுவதோடு, முழுப்பெயர், முகவரி, பால், வயது, பாடசாலையின் பெயர் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும்.
* ஒருவர் ஒரு ஆக்கம் மாத்திரமே அனுப்பலாம்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
* போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.
* மேற்படி போட்டிகளில் எமது நிறுவன ஊழியர்கள், அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பங்குபற்ற முடியாது.
* ஆக்கங்கள் 25.06.2010ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
**யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,**
இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2574

## மக்கள் வங்கியின் அழைப்பு

நாளை 07.06.2010 திங்கட்கிழமை
மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகள்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
**திரு.அஜித் நிவாட் கப்ரால்** அவர்களால்
திறந்து வைக்கப்படவுள்ளன.

இவ் விழாவில் மக்கள் வங்கியின் தலைவர்
**திரு.டபிள்யூ.கருணஜீவ** அவர்களும்
பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான
**திரு.பி.வி.பத்திரன** அவர்களும்
மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களும்
கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | - பரந்தன் கிளை | - முற்பகல் 10.15 மணி |
| மக்கள் வங்கி | - கிளிநொச்சி கிளை | - முற்பகல் 11.30 மணி |
| மக்கள் வங்கி | - மாங்குளம் கிளை | - பிற்பகல் 3.45 மணி |

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளரும் பணியாளர்களும்,
மக்கள் வங்கி
பரந்தன், கிளிநொச்சி,
மாங்குளம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
மக்கள் வங்கி
வடவலயம்.
04.06.2010

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

## FREE INTERNATIONAL SCHOLARSHIP

USA, ENGLAND, CANADA,
EUROPE, SWITZERLAND, AUSTRALIA,
NEWZEALAND, JAPAN, RUSSIA மற்றும் INDIA.

உங்களுக்குள்ள கல்வித் தகைமையுடன் அல்லது வங்கித்துறை, கணனித்துறை, தாதியியல், சுகாதார மற்றும் மருத்துவத்துறை, ஹோட்டல், சுற்றுலாத்துறை, திரைப்படத்துறை, விவசாயத்துறை போன்ற துறைகளில் தொழில்சார் அனுபவத்துடன் நீங்கள் முறையானதொரு விண்ணப்பதாரியாக இருந்தால் ஒரு இளமாணிப் பட்டத்தைப் பெறமுடியும் என்பதை அறிவீர்களா? அதுவும் ஒரு FREE SCHOLARSHIP உடன்.

USA, ENGLAND, EUROPE, RUSSIA, INDIA மற்றும் பல்வேறு நாடுகளில் வெளிவிவகாரச் செயற்பாடுகள், தொடர்புகளில் எனது 32 வருடகால அனுபவத்துடன் அனைத்துச் சர்வதேச விடயங்களிலும் உங்களுக்கு ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் உதவிகளை வழங்கி ஒரு FREE SCHOLARSHIP ஐப் பெற்றுத்தர முடியும்.

**முதலில் நீங்கள் அதற்கான சரியான தகைமையுள்ள விண்ணப்பதாரியா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.**

சந்திப்புக்கான முன் அனுமதி மற்றும் ஆலோசனை சம்பந்தமாக தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப. 9.00க்கும் பி.ப. 5.00 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

**உடன் அழைப்பு: 0777809516**

## CAVAAN INTERNATIONAL



No. 59/10, Police Park Lane,
Mirihana Road,
Nugegoda.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

07.06.2010 திங்கட்கிழமை

பிறப்பு 26 . 07 . 1975
இறப்பு 24 . 04 . 2010



**அமரர் சரவணபவானந்தவேல் ஜயந்தன் (செல்லன்)**

வல்வைதனில் வந்துதித்து வளமுடனே உன்னை வளர்த்து
வல்லவன் என்ற பெயரெடுத்த எங்கள் காண்டு செல்லனே!
வந்தவினை தீருமுன்னே சொந்த உறவுகள் மறந்து
நீ சென்ற இடம்தான் எங்கே? எங்கள் காண்டு! செல்லன்!
அன்பு உள்ளம் கொண்ட உந்தன்
சொந்த உறவுகள், நண்பர்கள் அனைவரும்
ஆறாத் துயரில் உள்ளோம் காண்டு!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாளை திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வெட்டித்துறை.
தாய் மற்றும் குடும்பத்தினர்.
(96629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1960களில் எழுத்துத் துறையில் காலடி வைத்த நவாலியூர் நடேசன், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சங்க யாழ்ப்பாணப் பிரிவில் இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றவர். பத்திரிகைத்துறை - நாடகத் துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். 'கூட்டுறவு', 'ஐக்கியதீபம்' பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர். 'கூட்டுறவு' இதழ்களில் அவர் 'கபிலர்' என்ற புனைபெயரில் 'நீட்டோலை' என்ற பத்தி எழுத்தினை எழுதிவந்தவர்.

1968 இல் வெளிவந்த 'நிர்மலா' ஈழத் திரைப்படத்துக்குக் கதை வசனம் எழுதியவர். இவர் தாம் ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகைகளிலும், சிரித்திரன், மல்லிகை, விவேகி, வீரகேசரி போன்ற இதழ்களிலும் கவிதை, கலை இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவர் மிகச் சில சிறுகதைகளையே எழுதியுள்ளார். ஈடுநாடு இதழில் வெளிவந்த இவரது 'விநாயகர் உகந்தது' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# விநாயகர் உகந்தது



சிறுகதை

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 152

சதை போட்டு மதர்த்த சரீரமுடைய ஒருவன் கொலுகொலுக் கிழவனாகித் தசையும் தோலும் முறுக்கிழந்து, மடிப்பு விழுந்து காணப்படுவதுபோல் அந்தக் கிழட்டுப்புளி நின்றது. நிலத்திற்குள் சுழியோடும் அதன் முரட்டு வேர்கள் அடிமரத்தில் நிலத்திற்கு மேலே மிதந்து தெரிவதால், அவை அதற்குப் பாதங்கள் அமைத் தாற்போல் தோன்றின. கிளைத்துப் பிரிந்து போகும் இரு பெரும் வேர்களின் நடுவே ஒரு கல். அக்கல் மீது குப்பையையும், குருவிகளின் எச்சங்களையும் சுமந்து கொண்டு விநாயகப் பெருமானின் பழைமையான சிலை ஒன்று இருக்கிறது. ஐங்கரனான அவரின் ஒரு கரம் உடைந்து போய்விட்டது. கவனிப்பாற்று இருந்த அக் கணபதிக்குப் புளியமரம் ஒதுக்கிடம் கொடுப்பதுடன் தனது பழுத்த இலைகளையும் பூக்களையும் ஓயாது அவர் மேலே சொரிந்து தன்னைப் பெருமையுடன் நோக்கி நின்றது.

இதனால் அங்கு குப்பை மண்டிக் கிடந்தது.

கிராமத்தை அடுத்த நெடும் பனங்காடொன்றுக்கு அப்பால் தொலைவாகத் தட்டத் தனியே அந்த மூப்படைந்த புளி கம்பீரமாகக் காட்சி அளித்தது. முறுக்கேறிய தனது கிளைகளைப் பரக்க விரித்துக் கொண்டு நின்ற அப்புளியமரம் தூரப் பார்வைக்கு, முரட்டுத் தேகமுடைய பரட்டைத் தலையன் ஒருவன் வெறிகொண்ட நிலையில் யாரையோ வஞ்சந் தீர்ப்பதற்கு அசையாத நிலையில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

வேளா வேளைக்குப் பூஜை, திதிகள் தவறாமல் திருவிழா முதலிய வைபவங்கள் நடைபெறும் பெரிய ஆலயங்களுக்குப் பக்தர்கள் சென்று தங்கள் அன்பு வழிபாட்டைச் செலுத்தி உருகி நின்றார்கள். ஆனால் அந்தப் புளியடிப் பிள்ளையாரை ஒரு பக்தனாவது கவனிக்கவில்லை.

சில நாள்களில், ஒரு பிச்சைக்காரி தனது பத்து வயதிற்குட்பட்ட இரண்டு பெண் குழந்தைகளுடன் பிச்சையெடுக்க நகரத்திற்குப் போவதற்குக் குறுக்குப் பாதை பிடித்து பிள்ளையார் இருக்கும் புளியடியால் போகத் தொடங்கினாள். ஏகாங்தியாக மழை வெயிலெல்லாவற்றையும் அனுபவித்து அமைதியுடன் தன்னைப் போல வறுமைக் கோலத்தில் இருக்கும் பிள்ளையார், கலங்கிய அநாதரவான தனது வேண்டுதலைச் செவிமடுப்பார் என்று அவளுக்கொரு நிம்மதியான நம்பிக்கை பிறக்க, தன் பிச்சைக் கோலத்தை நீக்கி நல்ல வாழ்வைத் தரவேண்டுமென்று பல நாள்களாக அழுது புலம்பித் தொழுது வந்தாள். பிள்ளையாரும் அப்படியே மௌனமாக இருந்து வந்தார். அவளுக்கும் நல்ல காலம் பிறக்கவில்லை.

அவளுக்கு முப்பந்தைந்து வயதிருக்கும். உழைத்து உணவு போட்ட கணவன் சடுதியாக இறந்துவிட, உற்றார் பெற்றாரற்ற அவளும் பிள்ளைகளும் தனித்துவிட்டனர். சாதுவான கணவனைத் தான் நினைத்தபடி ஆட்டிவைத்து, வேளா வேளைக்கு ருசியான கறிகளுடன் சமைத்து ஊதாரித்தனமாகக் கொட்டிக் குதறிச் சாப்பிட்டு, வருவோர் போவோர்க்குக் கொடுத்துச் சாப்பிட்டதே மிச்சம்மென்று கண்ட அவள், இரவல் காணியிலே ஒரு குடிசையில் வசித்தாள். அவளிடம் சாப்பிட்டுத் தங்கள் பணத்தை மிச்சம் பிடித்த 'பணக்காரர்' கூட அவளை இப்போது ஓரக் கண்ணாலும் பார்ப்பதில்லை. கணவன் உழைத் துப் போடச் சொகுசாக இருந்து சாப்பிட்டு வந்த அவளுக்கு வெயிலில் காய்ந்து கஷ்டப்பட்டு ஏதாவது வேலை செய்து சம்பாதித் துப் பழக்கமில்லை. இனியாவது அதை அவள் பழக்கத்திற்குக் கொண்டு வர எண்ணமில்லை. வயிற்றுப் பாட்டைப் பார்க்கப் பிச்சை யெடுக்கும் தொழிலையே பிள்ளை களுடன் மேற்கொண்டாள்.

கணவன் இருக்கும்போது வாழ்ந்த வாழ்வையும் இப்போதைய இரப்பு நிலையையும் புளியடிப் பிள்ளையாரிடம் தொடர்ந்து முறையிட்டு வந்த அவள், ஒரு நாள் பிச்சைக்குப் போனவிடத்தே தன்னை ஒரு வீட்டிலே பொய் வேடம் பூண்ட திருடியென்று அவமதித்துத் தூஷித்த சோகமிகுதியால் பிள்ளையார் முன்பு போய் ஒப்பாரி வைத்து அழுதே விட்டாள்!

(18 ஆம் பக்கம் பார்க்க....)

# நின் திறத்தேன் அல்லேன் நம்பீ

நீராடக் கண்ணனை அழைக்கும் பெரியாழ்வார் தன் வயதையும் எண்ணிச் செயற்படுவதைப் பாடலால் உணரமுடிகிறது.



கண்ணனோ சிறுவன். விரைவாக ஓடியாடும் பருவத்தன். தாயாகப் பெரியாழ்வார் கூப்பிடுகிறார். அவனோ அவருடைய அழைப்புக்குச் செவி சாய்க்காமல் ஓடியாடித் திரிகின்றான். இதைக் கண்ணுற்ற பெரியாழ்வாருக்கு அவனுடைய தெய்வீகத் திருவிளையாடல்கள் நினைவுக்கு வருகின்றன. மேய்ச்சலுக்குத் தாய்ப்பசுவோடு சென்ற கன்றுகளின் வாலை ஒன்றோடொன்று கட்டிவிட்ட குறும்பு நினைவுக்கு வருகிறது. பழமரங்களிலே ஏறிக் கனிகளை உதிர்ந்துவிழ எறிந்து பின் தொடர்ந்தோடும் காட்சி கண்ணில் தெரிகிறது. ஒரு பாம்பைப்பிடித்து ஆட்டிய துணிவான செயல் பற்றிக் குறிப்பிடுகிறார். ''இவ்வளவும் செய்யும் ஆற்றல் எனக்கில்லை. உன்பின்னே என்னால் ஓடிமுடியாது. எனவே நீயே நீராட இங்கு வா' என அழைக்கிறார்.

இலக்கியக் காட்சி 44

சிறப்பாக நீராட அழைப்பதற்குச் சிறப்பான ஒரு காரணமும் உண்டு. கண்ணனுடைய பிறந்த திருநாள் ஆதலால் கட்டாயம் நீராட வேண்டும். 'நன்று நீ நீராட வேண்டும் என்று வேண்டுதல் செய்துள்ளார்.' இவர் அவனை அழைக்க அவன் ஓடுகின்றான். 'நாரணா ஓடாதே' என நயமாகக் கேட்கிறார். அவனோ வரவில்லை. பாடலில் அவர் தன்னுடைய நிலையை நன்கு விளக்கியுள்ளார்.

"கன்றினை வாலோலை கட்டிக்
கனிகள் உதிர எறிந்து
பின் தொடர்ந் தோடிஓர் பாம்பைப்
பிடித்துக்கொண் டாட்டினாய் போலும்
நின்திறந்தேன் அல்லேன் நம்பீ
நீபிறந் ததிரு நன்னாள்
நன்று நீ நீராட வேண்டும்
நாரணா ஓடாதே வாராய்"

'நின் திறந்தேன் அல்லேன்' என்ற தொடர் தாயாகிய பெரியாழ்வாரின் முதுமை நிலையைச் சுட்டுவதாக உள்ளது. கண்ணன் பின் ஓடியோடிக் களைப்புற்ற தாயாகத் தன்னைப் பாவனை செய்து பாடுகிறார். கண்ணனுடைய குழவிப்பருவத்திலே அவன் கிடக்கின்ற தொட்டில்கிழிய உதைப்பதையும், எடுத்துக்கொண்டால் இடுப்பை நெரிப்பதையும், புல்கினால் உதரத்தே பாய்வதையும் சொல்லி மிடுக்கிலாமையால் தான் மெலிந்துவிட்டதாகப் பெரியாழ்வார் பாடியுள்ளார். இப்பாடலில் சிறுவனைப் போல் கண்ணனுடன் தன்னால் ஓடித்திரிய முடியவில்லையென வருந்துகிறார். அதனால் அவனை ஓடித்திரியாமல் தன்னிலை கண்டு அருள் செய்யும்படி வேண்டுகிறார்.

கண்ணனின் பிறந்த நாளன்று அவனை மஞ்சனமாடச் செய்து நல்லாடை புனைவித்து அலங்காரம் செய்ய வேண்டுமெனப் பெரியாழ்வார் விரும்புகிறார். குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடும் மரபு அக்காலத்தில் நடைமுறையில் இருந்ததையும் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

நம்பீ, நாரணா என்னும் விளிச்சொற்கள் சிறப்பாக இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. நம்பி என்ற சொல் வளர்ந்தவரைக் குறிப்பது. நாரணா என்பது கண்ணனுக்கு வழங்கும் பிறிதொரு பெயராகும். பெரியாழ்வார் பாவனை செய்து பாடிய போதும் அருட் செயல்களையும் இறைவனின் அற்புதமான நிலையையும் மறக்காமல் இணைத்துள்ளார். நாரணா என்னும் நாமம் சொன்னால் அது எல்லாவற்றையும் தரும். இறை வழிபாட்டில் நாமம் செப்புவது பற்றிப் பல அடியார்கள் பாடியுள்ளனர். திருமங்கையாழ்வார் நாராயண நாமம் தரும் நன்மைகளை வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"குலம் தரும் செல்வந்தந்திடும் அடியார்
படுத்துய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்"

பெரியாழ்வரும் நாமத்தைச் சொல்லி வழிபடவே விழைகிறார். ஆனால் புதிய பக்தி நிலையிலே நாமத்தைச் சொல்கிறார். திருக்கோயிலிலே சென்று கண்ணன் நாமத்தைச் சொல்லி வழிபடும் மரபிலிருந்து வேறுபட்டு செவிலித்தாயாக நின்று அவன் நாமத்தைச் சொல்லி அழைத்து வழிபடுகிறார். கண்ணனைக் குழந்தையாக அவர் பாவனை செய்து தன்னைத் தாயாக மாற்ற முயன்றாலும் இடையிலே பழைய வழிபாட்டு மரபிலிருந்து விடுபட முடியாதவராகவும் இருக்கிறார். இந்நிலை அவருடைய தனித்துவமான பக்தியனுபவமாகப் பாடல்களிலே காணப்படுகிறது.

*****
******



கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# CAUSEWAY PAINTS

MOBILE PHONE அதிர்ஷ்டம்

அதிஷ்டத்தில் வெற்றி பெற்ற அனைவருக்கும் மற்றும் பங்குபற்றிய சகலருக்கும்

# எமது நல்வாழ்த்துக்கள்

1. **Ms. M.M.F. Naleefa**
Colombo Hw - Kattankudy - 03
2. **Ms. Nimasha Ashwini**
Rohana Hw - Delgoda
3. **Mr. M.N.M. Anas**
Saleem Hw & Paint Shop-Kadugannawa
4. **Mr. Samarapala Rathnaweera**
Lanka Hw - Dickwella
5. **Mr. A.F.M. Mukjith**
New Pradeepa P/C- Colombo - 10
6. **Mr. A.M.K. Atapattu**
Nilan T/C - Chilaw
7. **Ms. H. Vineetha De Silva**
Eliyas Trading & Co - Gonapinuwala
8. **Mr. C. Nadesan**
Savoy P/C - Wellawatta
9. **Mr. N.R.P. Jayasooriya**
A.S.G. Enterprises - Malabe
10. **Mr. M.G. Janaka Ariyarathne**
New Sakthi P/C - Matale
11. **Ms. J.M. Seetha Kumuduni**
United Hw - Siyambalagaskotuwa
12. **Mr. R.P.W.Upali**
Royal Paint - Warakapola
13. **Mr. H.Nimal Wicramasiri**
K.B. Stores - Puwakpitiya
14. **Mr. J. Ramesh Kumar**
Spray P/H - Trincomalee
15. **Mr. S. Kokilan**
New Kamaal - Jaffna
16. **Mr. W. Nadeesh Madusanka**
Mahanama P/C - Kottawa
17. **Mr. T.D. Wijesinghe**
Lakshmi Steels- Passara
18. **Mr.T.D. Deshapriya De Silva**
Rathna Hw -Waskaduwa
19. **Ms. A. P. Karunarathne**
Ishara Hw - Dewalapola
20. **Mr. R.D.A. Lakshman**
United P/C - Kandana
21. **Mr. A. Sivakumaran**
Aashaa Merchants -Thirunelvely
22. **M/S Chandrasiri Motors**
Supun P/C - Malabe
23. **Mr. Gamini Sumitrasoma**
New Colour Centre - Anuradhapura
24. **Ms. T. Thevamanie**
Sarmila Hw - Halgranoya
25. **Mr. N. Hasshan**
Rashi Trade Centre - Pottuvil
26. **Mr. I. P. A. Thilak Pathirana**
2K P/C - Kaduruwela
27. **Ms. Rasilda Jencey**
Emmanuel Traders - Colombo -13
28. **Ms. S.M. Maduwela**
Prime Colours - Attidiya
29. **Mr. G. Sunil Shantha**
S.P. Enterprises - Matara
30. **Mr. M.S. Mohamed Muneer**
Majestic Paints - Eheliyagoda
31. **Mr. M.N.B. Refai**
City Hw - Wellampitiya
32. **Mr. A. Shantha Jayaweera**
Nadeera P/C - Katugastota
33. **Mr. A.J.F.Walter**
Ishaya P/H - Gampaha
34. **Ms. L.V. Anusha Sanjeewani**
New Lucky Hw & Ele. Welipenna
35. **Mr. Suresh Kaushalya**
Mahanama P/C - Homagama
36. **Mr. Rukmal Indika**
Gayas Ali Stores - Negombo
37. **Mr. Jagath Sri Aruna**
Lanka Hw - Galle
38. **Mr. N.G.D. Sumith Bertram**
Wijitha P/C - Veyangoda
39. **Mr. Anura Bandara**
Naveen Ceramic - Bandarawela
40. **Mr. K.L.A. Pius Fransalin**
Kuliyapitiya P/C - Kuliyapitiya
41. **Mr. Senathiraja Ravishangar**
New Central Hw - Vavuniya
42. **Mr. S.L. Jameel**
Hameediva T/C - Sainthamaruthu
43. **Mr. A.W. Jinendra**
Pabora P/C - Ragama
44. **Ms. Anula Samarasinghe**
Mahanama Paints - Embilipitiya
45. **Mr. E.A. Premakumara Rathnasiri**
Maya Paint House - Yakkala
46. **Mr. K.Sivapragasam**
Ahila Hw - Batticaloa
47. **Mr. D.M.U.S.P. Dissanayaka**
New City Hw - Weligama
48. **Mr. A. Mohamed**
Sri Ranga Hw - Agarapatana
49. **Ms. L.A.Indrani**
Lanka Hw - Moratuwa
50. **Mr. M.M. Wilson Peiris**
Janatha Stores - Kaduwela
51. **Mr. M.A. Sunil Prasanna**
Colour Shop - Katuneriya
52. **Mr. Udaya Thalawathugoda**
Kahadawala P/C - Angoda
53. **Mr. N.S.A. Wasantha Nanayakkara**
Flash Color Centre - Colombo - 10
54. **Mr.H.I.S. Siriwardana**
Autocoatings - Piliyandala
55. **Mr. Ranjith Srilal**
Ambathenna P/C - Ambathenna
56. **Mr. A.P.A. Weerasinghe**
Colombo P/C - Kurunegala
57. **Mr. Thilak Halambage**
Sisara Colour Lab - Elpitiya
58. **Mr. P. Prakash**
Aashaa Merchants - Thirunelvely
59. **Mr. J.A.M. Asoob**
Bandarawela P/C - Bandarawela
60. **Mr. H.M. Nilantha Kumara**
City Hw Stores - Mathugama
61. **Mr. D.M. Asanka Udaya Kumara**
Chaamin Hw - Mahiyanganaya
62. **Ms. K.A. Meginona**
Dhulshani Hw - Nuwara Eliya
63. **M/S Rajasinghe Motors**
Malisha Auto - Weliweriya
64. **Ms. G.Thadsaljini**
New Kamaal - Jaffna
65. **Mr. W.M. Ranjith**
Amila Colour House - Nittambuwa
66. **Mr. W.A.W.Haripriya**
Mohamed & Mahuthoom - Colombo 02
67. **Mr. K.M.R. Premalal**
Mahanama P/C - Kalubowila,
68. **Mr. Niroshan**
Rock P/C - Kandy
69. **Mr. M.B.Sugath**
Sureshan P/C - Dankotuwa
70. **Mr. B.P.G. Gamini Dayananda**
Achini Hw - Elahara
71. **Ms. Sachini Poornima**
Dedunu Auto P/C - Hingurakgoda
72. **Mr. A.S.A. Danapala**
New Wickrama Hw - Deiyandara
73. **Mr. S.M.A. Senevirathna**
Shakeeb Colour House - Puttalam
74. **Mr. Rupert Henri Gammanpila**
Excellent Paint - Kalutara South
75. **Mr. T.A.Wimalasekera**
Sudath P/C - Maharagama
76. **Mr. M. Irshard Sheriffdeen**
The Paint House - Balangoda
77. **Ms. J.K.D.C. Jayanthi**
Colour House - Gampaha
78. **Ms. K. Devika Sudarshani**
Shan Enterprises - Horana
79. **Ms. G.K. Malani Perera**
Omeka Industries - Athurugiriya
80. **Mr. Ranjan Upali Ginige**
Nandana Paint House - Ambalangoda
81. **Mr. D.M. Rasika Saman Bandara**
Ranola Paint Branch - Gampola
82. **Mr. Lingam Yogeshwaran**
New Kamaal - Jaffna
83. **Mr.N. Nimalraj**
New Kamaal - Jaffna
84. **Mr. J. Manjula Wasantha**
Ranvindu P/C - Kesbawa
85. **Mr. G. Pragnaratne**
City Enterprises - Rathnapura
86. **Mr. M. Hamza Shariff**
St. Francis Xavier Hw - Raddolugama
87. **Ms. D.M. Shanthi Kamala**
Genuine P/C - Colombo 14
88. **Ms. T. Puspareka**
Razeen Brothers - Akkaraipattu
89. **Mr. M.U. Sahul Hameed**
New Hazeena Hw - Oddamavadi
90. **Mr. K.L. Sunil**
Wickramarathne Hw - Kananke Bazaar
91. **Mr. T.Shrishankar**
Sri Hardware - Badulla
92. **Mr. K. Samarasinghe**
S.M.A. Trading Co. - Kekirawa
93. **Ms. H.P.M.A.I.K. Wijerathnamenike**
Weerasaman Hw - Rikillagaskada
94. **Mr.K. Sarath Weerasiri**
Millennium Enteprises - Dhargatown
95. **Mr. M.A. Sumanarathna**
Isara Paints & Hw - Mahawewa
96. **Mr.G. Asanka**
Mihiri Paints & Electricals - Kiribathgoda
97. **Ms. R.D.Kusum Latha**
Rangiri Hw - Dambulla
98. **Mr. A.A. Piyadasa**
City Colour House - Nittambuwa
99. **Mr. N.T.Wijewardana**
Kishan Enterprises - Panadura
100. **Mr. D.H. Manju Rejinold**
Ruhunu P/C - Hambantota
101. **Ms. Wasanthi Weerathunge**
M.M. Noohu Marikar & Sons - Welimada
102. **Mr. J. Thilakasiri**
Yasohodya P/C - Thalangama South
103. **Mr. Mark Lushan Abeynayake**
W.S.Perera & Sons - Battaramulla
104. **Ms. A.M. Leelawathi**
Mahajana Paint - Narammala
105. **Ms. R.S.P. Padma Wijayaratne**
Daya Hardware Stores - Marandagahamula
106. **Mr. G.G.S. Senadeera**
Colour House - Gampaha
107. **Mr. A.Suntharalingam**
Nazeem Brother's - Maruthamunai
108. **Mr. U.H. Somapala**
Deen Hardware Stores - Matara
109. **Mr. Mahinda Widanapathirana**
Hansagiri Agencies - Baddegama
110. **Mr. Asanga Sanjeewa**
Prime Colours - Attidiya
111. **Ms. Indrani Dissanayake**
Nipuna Hardware - Talawa
112. **Mr. David Mogan Bonipas**
V.K.V.& Sons - Batticaloa
113. **Ms. Shiromi Pavitra Warshakoon**
Liberty Hardware - Gelioya
114. **Mr. Sisira Karandana**
Miriswatta Hardware - Demanhandiya
115. **Mr. H.M.D. Ariyarathne**
Royal Paint House - Matale
116. **Mr. M. Somadasa**
Samudurie Enterprises - Padukka
117. **Mr. Sheirly Athula De Silva**
Damitha P/C - Homagama
118. **Ms. M.P.S. Kaushallya**
Sanganala Paint Centre - Kelaniya
119. **Mr. B.D. Jayarathna**
P/C - Aluthgama
120. **Mr. Safra Hassen**
Sisila Paint Stores - Colombo




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி நாளைமுதல் வருடத்தில்
ஒவ்வொரு நாளும் யாழ் நகரில் சேவைபுரிய காத்திருக்கின்றது...

யாழ் வாழ் மக்கள் அனைவரும் சர்வதேச ரீதியிலான வங்கிச்சேவைகளை நாளைமுதல் வருடத்தில் 365 நாட்களும் பெற்றுக்கொள்ளலாம். எமது புதிய யாழ்ப்பாணக் கிளைக்கு சமூகமளித்து எமது பரந்த சேவைகளான சேமிப்பு மற்றும் நடைமுறைக்கணக்கு, நிலையான வைப்புகள், முதலீடுகள், சிறுவர் சேமிப்புத் திட்டங்கள், அடகுச் சேவைகள், கடன் வசதிகள், லீசிங் வசதிகள், வணிக வங்கி முறைமையுடன் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டை அங்கத்துவம் போன்ற வசதிகளாவன உங்களை மேலும் திருப்திப்படுத்தும்.

சமூகமளியுங்கள்: 35, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். அழையுங்கள்:

Nations TrustBank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலம் பேணும் கல்வி

கல்வி உடலை உறுதியாக்கி, இதய நோய்கள் வரும் வாய்ப்பைக் குறைத்து உடலை இளமையாக வைத்திருக்கிறது என்று சிலிர்ப்பூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.




கல்வியினால் உடலிலுள்ள அத்தனை நரம்புகளும், அணுக்களும் புத்துணர்ச்சி பெறுகின்றன என்றும், புற்று நோய் வரும் வாய்ப்பைக் கூட கல்வி குறைக்கிறது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.



கல்வியின் உச்சத்தில் வெளியாகும் எண்டோர்பன் செரிமானத்துக்கும், உடலிலுள்ள சுருக்கங்களை விலக்கி தோல் இளமையடையவும் உதவுகிறது எனவும் அதிக கலோரிகளை கல்வி கரைக்கிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மருத்துவர்கள் இதை மறுக்கின்றனர். அறிவியல் பூர்வமாக இவை நிரூபிக்கப்படவில்லை என்ற அவர்களுடைய மறுப்புகளையெல்லாம் நிராகரித்துவிட்டது. இவை நிரூபிக்கப்பட்ட உண்மைகளே என தனது தரப்பு வாதத்தை அது முன்வைக்கிறது.

இது மட்டுமன்றி கல்வியினால் உடலில் ஜலதோஷம், உடல்வலி போன்ற சிறு சிறு பலவீனங்கள் வரும் வாய்ப்பும் குறைகின்றது. எலும்புகளுக்கும், தசைகளுக்கும் கூட கல்வி வலுவூட்டுகின்றது.

நமது பழங்கால பஞ்சாங்கங்கள் சொல்வதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★




## தூதுவளையின் மகத்துவம்

தூதுவளை என்பது கொடி இனமாகும். இலை முழுக்க சிறிய முட்களைக் கொண்டிருக்கும். இந்தக் கொடியில் பூக்கும் பூ மித ஊதா நிறத்தில் இருக்கும். பழம் சிவப்பு நிறத்தில் இருக்கும்.

தூதுவளைக் கொடியை பந்தல் போட்டும்,



வேலியில் படரவிட்டும் வளர்க்கலாம். கொடியில் இருக்கும் முட்களின் காரணமாக எந்த கால்நடைகளும் இதனை சாப்பிடாது. எனவே பாதுகாக்க வேண்டிய அவசியமே இல்லை.

தூதுவளைக் கொடியின் வேர் முதல் பழம் வரை எல்லாமே மருத்துவக் குணம் கொண்டவை.


இதன் இலையும், பூவும் கோழையை அகற்றவும், உடலைப் பலப்படுத்தவும் செய்கின்றது. இதன் காய், பழம் பசியைத் தூண்டும், மலச்சிக்கலைப் போக்கவும் பயன்படும்.

எமது நாட்டில் இந்த கொடியினம் பல்வேறு இடங்களில் சாதாரணமாகவே வளரும் தன்மை கொண்டது. ★★★★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்தேன். வீணாகக் கஷ்டப்பட்டு எனது பணம் முழுவதையும் இழந்தேன்."

சத்தூர். வயது 28
வெளிநாட்டில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.



ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சத்தூர் தனது வாழ்நாள் சேமிப்புக்கள் அனைத்தையும் செலவிட்டதுடன் கடனும் வாங்கினார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழி நிறைவேறவில்லை. மற்றொரு நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தூர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போழுது, சத்தூர் எல்லாவற்றையும் இழந்துள்ளார்.' தன்னையும், தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாதுள்ளது. முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும் துன்பங்களையும் எதிர்கொண்டு, தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப் போகின்றீர்கள்?

---

**இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியுள்ளது.**

---

உங்கள் பணத்தை பயனற்ற பயணத்திற்கு வீணாக்க வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## வடக்கின் திசையில் புத்தொளி பரப்பிட...

# மாங்குளம், கிளிநொச்சி மற்றும் பரந்தன்

ஆகிய இடங்களில் மக்கள் வங்கிக் கிளைகள்
புதுப் பொலிவுடன் மீள் ஸ்தாபிக்கப்படுகின்றன



மூன்று தசாப்த கால யுத்தச் சூழ்நிலையின் பின்னர் வடக்கில் சமாதானக் கதிர்கள் பரவி, ஒளிமயமான எதிர்காலம் உருவாகிவரும் இவ் வேளையில் இப் பிரதேச மக்களுக்கு சிறந்த வங்கிச் சேவையினை தொழில்நுட்ப வசதிகளுடன் வழங்கிட மாங்குளம், கிளிநொச்சி மற்றும் பரந்தன் ஆகிய இடங்களில் மக்கள் வங்கிக் கிளைகள்,

2010 ஜுன் 07ஆம் திகதியன்று மக்கள் வங்கியின் தலைவர் திரு. டபிள்யூ. கருணாஜீவ அவர்களினதும் மற்றும் பிரதான நிறைவேற்றதிகாரி/பொது முகாமையாளர்
திரு. பி.வி. பத்திரன அவர்களினதும் அழைப்பினையேற்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால் அவர்களினால் சுபவேளையில் மீள்திறக்கப்படவுள்ளதை பெருமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

AA Brand Finance Rating, A(lka) Fitch Rating

2009 2009

www.peoplesbank.lk

மக்கள் வங்கி

# இயற்கையின் செழுமை உங்கள் முகங்களுக்கு...

## REEBONN HERBAL FACE WASH






இதோ!
யாழ்ப்பாணம்,
வவுனியா, மன்னார்,
மட்டக்களப்பு, அம்பாறை
மற்றும் திருகோணமலை
வாசிகளுக்கு ஓர் அரிய
சந்தர்ப்பம்




**Win A Round Trip To CHENNAI**

எந்தவொரு ReeBonn அழகு சாதன உற்பத்தியின் அட்டைப்பெட்டிகள் அல்லது உறைகளை இணைத்து உங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு எமக்கு அனுப்பி, சென்னைக்கு 3 நாட்கள் சுற்றுப்பயணம் சென்று வருவதற்கான அரிய வாய்ப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி விமான சீட்டினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ளுங்கள்.

வாரம் ஒன்றுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாதமொன்றுக்கு நான்கு அதிஷ்டசாலிகள் சீட்டிழுப்பின் போது தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி
ReeBonn Cosmetics (Pvt) Ltd., P.O.Box 777, Mabola, Wattala



**Lucky Winner for 16th May 2010 !**

Mrs. R. Deivendra
110, Thirugnanasambanthar Street, Trincomalee.

"சென்னைக்கு சுற்றுலா செல்ல வழிவகுத்த ReeBonn Cosmetics நிறுவனத்திற்கு எனது முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களும் என்னை போல் இப்போட்டியில் இணைந்து வெற்றிபெறுங்கள்."

ReeBonn Products are available at all Super Markets, Fancy Shops, Cosmetic Shops, Pharmacies & General Groceries

எங்களது ஏனைய கேசப்பராமரிப்பு உற்பத்திகள்
Shampoo | Conditioner | Black Henna

மேலதிக விபரங்களுக்கு
தொடர்புகொள்ளவும்: 011-5344422, 0773-710171

ReeBonn
Naturally Cosmetics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்தங்களிலிருந்து விடுபட மனித குலத்துக்குக் கால அவகாசம் அவசியமாகிறது

# அதற்கான நிகழ்தகவும் விகிதாசாரமும் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன

மனம் என்பது இவ் உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒழுங்குபடுத்தி அவற்றை செவ்வனே வழிநடத்துகின்ற ஓர் அடிப்படை அமைப்பு. இந்த மனம் என்பது என்ன? எங்கு இருக்கிறது? எவ்வாறு எம்மை இயக்குகின்றது? என்ற கேள்வி எம்மில் பலரிடம் எழுகின்றது. எனவே இது பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

கி.மு விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த காலங்களில் முதன் முதலில் கிரேக்க நாட்டவர்களே இன்றைய நவீன விஞ்ஞானமும், மருத்துவமும் தோற்றம் பெற அடிப்படைத் தத்துவங்களை உருவாக்கினார்கள். இக்காலகட்டத்தில் வாழ்ந்த தத்துவஞானிகள் மனம் என்பது மனித உடலின் நெஞ்சறையில் அமைந்த இதயம் எனவும், இதுவே உடலுக்கு உயிர்ப்பாக இரத்தத்தை உடல்முழுவதும் பரவச் செய்து உடலை உயிர்ப்பாகவும், அசைவுகளுக்கும் இயக்கங்களுக்கும் வழிவகுக்கும் அடிப்படை அமைப்பு என்ற தமது கருத்தை முன்வைத்தார்கள். மேலும் இவ் இதயத்தில் இருந்தே எண்ணங்கள் உருவாகி இரத்த ஓட்டம் மூலம் உடலின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு ஏனைய உடல் உறுப்புக்களின் ஊடாக அசைவுகளாகவும், சைகைகளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்ற கருத்தையும் முன்வைத்தார்கள். பண்டைய கிரேக்க இலக்கியங்களில் கூட காதலர்கள் தமது மனத்தைப் பறிகொடுத்ததை தமது இதயங்களைப் பரிமாறிக் கொண்டதாக இயம்பி இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு படிப்படியாக விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகால கட்டத்தில் இந்த மனம் என்பது ஜீவராசிகளின் மண்டை ஓட்டினுள் அமைந்த மூளையிலேயே உறைந்துள்ளது எனவும் இந்த மூளையே உயிரினங்களின் அக, புற செயற்பாடுகளை ஒழுங்படுத்திக் கட்டுப்படுத்துகின்ற மையம் எனவும் அறியப்பட்டது. இந்த மூளையே உயிர்

**மன அழுத்தங்களும் அதன் இயலாமையைத் தூண்டும் எண்ணங்களும் 1**

அங்கிகளை நிர்வகிக்கின்ற அந்த மனம் எனத் தெளிவுபடுத்தப்பட்டது.


தற்கால நவீன மருத்துவ உலகில் மனம் என்றால் என்ன? என்பதைத் தெளிவுபடுத்திப் பார்ப்போமானால், அனைத்து உயிரினங்களையும் அதன் அக, புறச் செயற்பாடுகளை நிர்வகித்துக் கட்டுப்படுத்தும் அடிப்படை அலகுகளாக நரம்புத் தொகுதியும் (Neuro system) அதனோடு அண்டிய ஓமோன்களின் செயற்பாடுகளும் (Hormonal system) முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றில் இருந்து உருவாக்கப்படும் தூண்டல்கள் (Signals) நரம்பு மண்டலத்தில் நிகழும் அயன் பரிமாற்றங்கள் ஊடாகவும், ஓமோன் சுரப்புகளின் இரசாயன மாற்றங்களின் ஊடாகவும் உடலின் உரிய பகுதிகளில் துலங்கல்கள், விளைவுகளாகி வெளிக்காட்டப்படுகின்றது. (Effects) நரம்பு மண்டலத்தின் முக்கிய பகுதிகளாகி மூளையும், முண்ணாணும் இயக்கங்களையும்அசைவுகளையும் நிர்வகிக்கின்றன.

மூளையில் இருந்து உருவாகும் எண்ணக் கருக்கள் படிப்படியாக சிந்தனைக் கோப்புக்களாகி, படிப்படியாக செயல்வடிவம் பெறுகின்றன. இதையே நம் மனத்தின் எண்ணங்களாகவும் எமது அன்றாட செயற்பாடுகளாக அக,புறச் சூழலில் வெளிக்காட்டுகிறோம்.

**அழுத்தம் என்றால் என்ன?**

பொதுவாக ஐந்தறிவுடைய ஜீவராசிகளுக்கு மன அழுத்தம் ஏற்படுவது அரிது. அப்படி ஏற்பட்டாலும் கூட, அதிலிருந்து சொற்ப நேரத்தில் மீண்டுவிடும் ஆற்றல் அவைகளுக்கு உண்டு. அது என்னமோ தெரியவில்லை; இந்த ஆறு அறிவு படைந்த மனித குலத்துக்கு மட்டும் அடிக்கடி மன அழுத்தம் ஏற்படுகின்றது. பொதுவாகப் பெரும்பாலானவர்கள் அதில் இருந்து படிப்படியாக மீண்டுவிடுகின்றனர். ஒரு சிலருக்கு மட்டும் மன அழுத்தம் படிப்படியாக அதிகரித்து, இறுதியில் ஒரு மனநோயாளியாகியோ அல்லது இயலாமை எனும் ஓர் எண்ணம் அவர்களுக் குள்ளே தூண்டப்பட்டோ இறுதியில் தற்கொலை செய்துகொள்ளும் வரை சென்று விடுகிறது.


ஒரு சிறிய உதாரணத்தைச் சூழலில் நாம் அவதானித்தால், அதாவது ஓர் அணில் தனது செல்லக் குஞ்சு ஒன்றைப் பூனையிடம் காவு கொடுத்து விடுகின்றது. அதன் வேதனை தாங்காது அங்கும் இங்கும் ஓடி பூனையைப் பார்த்து மரத்தில் இருந்து அலறித்துடிக்கின்றது. இந்தச் செயற்பாடு தொடர்ச்சியாக ஒரு 15-20 நிமிடம் ஆரவாரமாக நிகழுகின்றது. பின்னர் பூனை சம்பவ இடத்தில் இருந்து அகலுகின்றது. இதனைத் தொடர்ந்து தாய் அணிலும் படிப்படியாக தனது சோகத்தில் இருந்து மீண்டு அவ்விடத்தைவிட்டு அகலும் போது, அது மீண்டும் தனது அன்றாட பழைய வாழ்க்கைக்கு மீண்டு விடுகின்றது. ஒருசில மணிநேரத்தில் அது தனது அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளில் உற்சாகமாக



இயங்குவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இச் சம்பவத்தை நான் இங்கு விளக்கியதன் நோக்கம், ஐந்தறிவு படைத்த ஜீவராசிகள் அதிகம் சிந்திக்கும் ஆற்றல் அற்றவை. எனவே அவை இலகுவாக அழுத்தங்களில் இருந்து (Stress) மீண்டு விடுகின்றன. (Recover). ஆழமாகச் சிந்திக்கும் மனித குலத்திற்கு மட்டும் அழுத்தங்களில் இருந்து விடுபட கால அவகாசம் தேவைப்படுவதோடு, ஆளுக்கு ஆள் மீளுவதற்குரிய நிகழ்தகவும் அதன் விகிதாசாரமும்(%) வேறுபடுகின்றன. சதா ஒன்றைப்பற்றியோ அல்லது நிகழ்ந்தேறிய அந்த துன்பகரமான நிகழ்வு பற்றியோ தொடர்ச்சியாகச் சிந்திப்போர் மன அழுத்தங்களில் இருந்து மீளமுடியாமல், மாறாகப் படிப்படியாக முழுமையாக ஒரு மனநோயாளியாக சூழல் அவர்களை விரும்பியோ, விரும்பாமலோ மாற்றிவிடுகிறது. ஒருசிலர் தமக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டதாகத் தவறாக தமக்குள்ளே ஒரு சிந்தனையை உருவகித்து, தம்மைத் தாமே மாய்த்துக் கொள்ளும் அந்தக் கொடிய முடிவுகளையும் எடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

மேம்படுத்தி வெற்றியடைய வழிகோலுகின்றது. மாறாக அது ஒரு பய உணர்வாகவோ அல்லது கஷ்ட உணர்வாகவோ பார்க்கப்படும்போது மனித மனம் அழுத்தத்துக்கு (Stress) உட்பட ஆரம்பிக்கின்றது.

பிரபல மனோதத்துவ நிபுணர் Hansons என்பவர் இதை கீழ்க்காணும் வரைபு மூலம் விளக்குகிறார்.




வரைபின் முற்பகுதியில் கூறப்பட்ட அழுத்தம் பொதுவாக மனிதனில் பெரிய தாக்கத்தை மனதளவில் ஏற்படுத்துவதில்லை. மாறாக இது ஒரு சவாலாகவே உணரப்பட்டு வெற்றியும் கொள்ளப்படுகின்றது. ஆனால் இவ்வாறான அழுத்தம் தொடர்ச்சியாக உணரப்படும்போது அது மனதில் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. இதுவே இவ்வரைபடத்தின் இறுதிப்பகுதியான Distress ஆக விளங்குகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்ற ஆன்றோர் கருத்தே இவ்விடத்தில் பொருந்தும்.

ஒரு சாதாரண சுகதேகி மனிதன் (Healthy Human) சூழலின் வெவ்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து படிப்படியாக அழுத்தங்களுக்கு உட்பட்டு மன அழுத்தம் படிப்படியாக அதிகரித்து எல்லையைத் தாண்டும் போது, அந்த மனிதன் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறான். இது மனநோயின் ஓர் ஆரம்ப அத்தியாயம். இதுவே பின்னாளில் உரிய மருத்துவ ஆலோசனை பெறத்தவறின் சூழலில் - நாளாந்தம் நடைமுறைச் செயற்பாட்டில் - இருந்து அவனை மனதளவில் படிப்படியாக விலகச் செய்து இறுதியில் அவன் ஒரு முழு மன நோயாளியாக சமூகச் சூழலால் இனங்காட்டப்படுகிறான். தனக்கே உரிய சிறப்பியல்பான பல வரையறைகளை வரையறுத்து அதனுள் மனித குலத்தை உள்வாங்கிச் சிறப்பான வாழ்க்கையை வாழ வழிசமைத்துக் கொடுப்பதே ஒரு நல்ல சமூகத்தின் தலையாய கடமை. வெவ்வேறு சமூகங்கள் தமக்கான சிறப்பியல்புகளை வரையறுத்து வாழ்ந்த போதும், அவர்களின் இறுதி இலக்கு (Ultimate goal) ஒரே தன்மையைக் கொண்டதாகவே உள்ளது.

மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனின்

# அழுத்தங்களைச் சவால்களாகக் கருதினால் அவற்றினின்றும் விடுபடலாம்

# அச்சமாகவும் கஷ்டமாகவும் உணர்ந்தால் அழுத்தத்தினின்றும் விடுபடுதல் சிரமமே

மன அழுத்தத்தை தாங்கும் அளவு (Buffer) மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றது. மன அழுத்த உச்சமட்டம் (Threshold level) ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. ஒருசிலர் சிறிய சிறிய இன்னல்கள், இடர்பாடுகளைக் கூட வாழ்க்கை ஓட்டத்தில் தாங்கமுடியாதுள்ளனர். இவர்கள் இலகுவாக இதன் பாதிப்புக்குட்படுகின்றனர்.

இன்றைய நவீன அவசர உலக வாழ்க்கையில் போட்டியும், அவசரமும் நாம் அன்றாடம் எதிர்நோக்கும் ஒரு வாழ்க்கைப் போராட்டம். இவ்வாறான சூழலில் தம்மை நிலை நிறுத்தக் கூடிய மனிதர்கள் வாழ்க்கையில் வெற்றியடைகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்தப் பிரச்சினைக்ளையும் சவால்களாக எடுத்து எதிர்நீச்சல் போட்டு வெற்றியடையும் அறிவுபடைத்தவர்கள். சாள்ஸ் டாவினின் கூர்ப்புக் கொள்கையில் சொல்லப்பட்டது போல, சூழலுக்குச் சாதகமாகத் தம்மை மாற்றி அமைத்து வெற்றியடையும் அங்கிகள் தக்கனப் பிழைத்தலும், சூழலுடன் தன்னை இணைத்து எதிர் நீச்சல் போடாத அங்கிகள் தகாதன மடிதலுக்கும் உட்படுகின்றன. இவ்வாறு பலவீனமான சூழலுடன் சேர்ந்து தன்னை மாற்றி வெற்றியடைய முடியாதவை தன்னிச்சையாகவே சூழலில் இருந்து அகற்றப்படுகின்றன.

மன அழுத்தம் என்பது, இவ்வாறு சூழலில் நாளாந்தம் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள், இடர்பாடுகள், கவலைகள், ஏற்ற இறக்கங்கங்களுக்கு மனித மனம் உட்படும்போது, உடலின் அக, புற செயற்பாடுகளில் ஏற்படும் அல்லது வெளிக்காட் டப்படும் மாறுதல்கள்

நிகழ்வு (Event) - வெளிப்பாடுகள் (Interpretation) என்றாகின்றன.

இவ்வாறு சூழலியல் அழுத்தங்களை மனித மனம் சவால்களாகக் கருதும்போது, அது வாழ்க்கையை

அக, புறச் செயற்பாடுகள் வேறுபடும்போது அவன் சமூகத்தில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கப் படுகின்றான். இதனால் சமூகத்துடன் இணைந்த இயல்புகளைக் கொண்டிராத ஒரு மனநோயாளியாகச் சுட்டிக்காட்டப்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு அவன் ஆளாக வேண்டி வருகின்றது.

மன அழுத்தம் அதிகரிக்கும் போது Stress distress ஆக மறுக்கிறது.

* மன அழுத்தத்தின் (Mental stress) அறிகுறிகள் (Symptoms) உள்ளம் சார்ந்த உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் (Feelings) வருமாறு -

1. **பய உணர்வு:- (Fear)** மனதில் தொடர்ச்சியான ஒரு பய உணர்வு. இதில் சின்னஞ் சிறிய விடயங்களுக்கும் பய உணர்வு ஏற்படும்.
2. **மன உழைச்சல்: - (Irritability)** தொடர்ச்சியான உளைச்சல் அடையும் சிந்தனைகளும் மன எண்ண ஓட்டங்களும்.
3. **மனக்குழப்பம்:- (Moodiness)** தெளிவற்ற சிந்தனைகளும் மனக்குழப்பங்களும்
4. **தடுமாற்ற நிலை:- (Embarrassment)** மனம் அடிக்கடி தளம்பலும், குழப்பமுமாக உறுதி அற்றுக் காணப்படுதல்.
5. **மனக்கவலை:- (Anxiety)** தொடர்ச்சியாக மனம் கவலை களால் சூழப்படுதல்.

*(வளரும்)*



**ஆ. சிவானந்தம்,**
*(முதுகலைமாணி, சமூகவிஞ்ஞானம் மற்றும் உளவியல் துறை)*
*மாவட்ட அலுவலர், ஐ.நா.உணவு விவசாய நிறுவனம், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 116

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | 11 |
| 12 | | | 13 | | | 14 | |
| | | 15 | | | | 16 | |
| | 17 | | | | 18 | | |
| 19 | | | | 20 | | | |
| 21 | | | 22 | | | | 23 |

அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:..............................................................

..............................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

1. ஒருவரின் அல்லது ஒன்றின் சார்பாக வருபவர்.
5. வீட்டில் வளர்க்கும் பறவை.
6. சூரியன்.
8. சேறு.
10. முற்கால ஆயுதம்.
12. தீர்வை.
13. பக்கத்து வீட்டுக்காரன்/ பக்கத்தில் வசிப்பவன்.
15. வரையப்பட்டிருக்கும் ஒன்றின் தோற்றம்.
17. இல்லாது அழி.
18. நெருப்பு.
19. இப் பிறப்பு முடிந்து பெறும் பேறு.
21. தர்க்கம் / விவாதம்.
22. களவெடு.
23. பாடல்/ நெசவுக்கருவி.

### மேலிருந்து கீழ்

1. பிறப்பு நிகழ்வு.
2. தினசரி மாறுவது.
3. பணம்/ பொன்/ ஆபரணம்.
4. பொக்கிஷம்/ பொருள்.
5. அரசன்.
7. இயலுமான/ செய்ய முடிந்த/ இயன்ற.
9. எரிந்தபின் மிஞ்சுவது.
11. கிரௌஞ்சப் பறவை.
13. மிக நெருக்கமாக/ திணிவுக்கும் கனவளவுக்கும் உள்ள வீதம்.
14. முகம்.
15. கூற.
17. தங்களுடையது.
18. ஒரு கால் எட்டில் நடக்கும் தூரம். காலை விரித்தால் இடைப்பட்ட தூரம்.
19. ஆசைப்பெருக்கு.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 114 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)ஹமாஸ். (4) சம்பாதி. (7)வான்பயிர். (8)ரதி. (9) வகுதி. (10) வாசகம். (12) யாது. (14) குடம்பி. (15)கோர்வை. (16) வில். (17) லவன். (19) நன்றி. (20) சத. (21) புழுதி. (22) தும்மல்.

**மேலிருந்து கீழ்**

(1) ஹவாய். (2)மான். (3) ஸ்பரிசம். (4) சர்வம். (5) பாரதியார். (6) திதி. (10) வாடல். (11) கபிலன். (13) துவைத்தல். (14) குவிப்பு. (15) கோன். (18) வறிது. (19) நதி. (20) சம.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 114 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** கு-துயாமினி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

**2 ஆம் பரிசு** ஆ- விமல்ராஜ்,
நந்தாவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**3 ஆம் பரிசு** செல்வி அ-இராதா,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு** சி-முருகானந்தம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

**5 ஆம் பரிசு** திருமதி தி-சிதம்பரநாதன்,
டச் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி.சரஸ்வதி,
கமலாலயம், அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

(2) ச.ஏகலி,
மாதகல் வடக்கு, மாதகல்.

(3) ந.ஜெயகணேசன்,
தரம் 12, யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 116**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 16.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.116 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.06.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# விநாயகர் உகந்தது

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

அன்றிரவு அவள் கனவிலே நந்தியின் மைந்தனான துங்கக்கரிமுகத்து தூமணி, மின்னெறி சடாமுடியுடன் திருமேனியில் பால்வெண்ணீறு திரிபுண்டரமாகப் பள பளக்க, அரையில் கட்டிய கலிங்கம் தங்க நிறத்தில் ஜொலிக்க, மெல்லிய கருநீல உத்தரியத்தைப் பவளமேனியிலே போர்த்தி, ஒரு கையை இடுப்பிலே கொடுத்தபடி தோன்றினார். ஆகா! அந்தப் புளியமரத்துப் பிள்ளையாரா இவ்வளவு அழகுக் கோலத்துடன் காட்சி கொடுக்கிறார். நிலை கெட்டுப் போனவள், நெஞ்சம் உருக உடல் நெக்குருகிப் போனாள்.

பிள்ளையார் கொவ்வைச் செவ்வாய் திறந்து பேசத் தொடங்கினார்.''குழந்தாய், உனக்கு நல்ல காலம் வந்து ஆனந்தமாகக் குறைவின்றி வாழவேண்டும் என்று உன் நன்மைக்காக மட்டும் நீ என்னை வணங்குகின்றாய். குப்பையும் குருவிகளின் எச்சமும் எனக்கு மேலே குவிந்து மூடிவிடப் புளியடியில் இருந்து நான் அவலப்படுவதை நீ உணரவில்லையே. முதலில் நான் இருக்கும் புளியடியைத் துப்புரவு செய்து என் வேதனையைப் போக்கு'' என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார்.

திடுக்குற்று விழித்த அவளுக்கு ரோமம் சிலிர்த்தது. அந்த ஒளி வடிவத்தின் ரமணீயநாதம் அவளின் செவியை விட்டகலாத மனப் பிரமையிலே குமைந்திருந்தாள்!

அன்று காலை பிச்சைக்குப் போக முன்பு புளியடியில் தேங்கி மக்கிக் கிடந்த குப்பை எல்லாவற்றையும் பெரிய விளக்குமாறு கொண்டு போய்க் கூட்டிக் குவித்து, கூட்டிய இடத்துக்குத் தண்ணீரும் தெளித்தாள். குவித்த புளியஞ் சருகு ஒருபுறம் குவியலாகக் கிடந்தது. அதை அங்கே விட்டால் பின்பும் அசுத்தமாகிவிடுமென்று சமீபத்தில் உள்ள தன் வீட்டிலேயே கொண்ட போய்க் கொட்டினாள். இப்படியே ஒரு மாதத்திற்கு மேலாக ஒவ்வொருநாளும் செய்துவர, புளியஞ் சருகு வீட்டிலே பெரும் குவியலாக வளர்ந்துவிட்டது.

ஒருநாள் கமக்காரன் வயலுக்கு நல்ல பசளையென்று இருபது ரூபா கொடுத்து வாங்கினான். பிச்சையெடுத்த அவளுக்குக் கூட்டி ஒதுக்கிய குப்பை கை நிறையப் பணத்தைக் கொடுத்ததும், அவள் உள்ளக் குளிர்ச்சியுடன் கொஞ்ச நாள்களுக்குப் பிச்சைக்குப் போகாமலிருந்து அதை வைத்துச் சாப்பிடலாமென்று நினைத்தவளாய் அன்று இரண்டு மூன்று கறிகளுடன் சமையல் செய்து பிள்ளைகளுடன் வயிறு குளிரச் சாப்பிட்டாள்.

ஆனால் அன்றிரவோ புளியடிப் பிள்ளையார் கோபாவேசத்துடன் சொர்ப்பனத்தில் தோன்றி ''அற்ப குணமுள்ளவளே! பாதகி! வஞ்சகி! உனக்கு எப்படித்தான் நல்ல காலம் வரும்? எனது புளியஞ் சருகை உன்னுடையது போல் விற்று நீ மட்டும் சாப்பிட்டாயே, அந்தப் பணத்தில் எனக்கு ஏதாவது தர நினைத்தாயா? நன்றிகெட்டவளே, நினைத்துக் கொள். நாளை மறுதினம் விடியும் முன்பாக இருபத்தைந்து பால் அப்பம் சுட்டுக் கொணர்ந்து எனக்கு நீ படைக்க வேண்டும். இவ்வாறு படைப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது. என் சொல்லை மீறினால்.....!'' என்று உறுக்கிச் சொல்லியபடியே தன் கையிலுள்ள துறட்டையை உயர்த்தி ஆட்டிக்கொண்டு துதிக்கையைத் தூக்கி யானைப் பிளிறல் பிளிற... அந்தர்த்தியானமானார்.

....படுக்கையிலிருந்து கூச்சலிட்டுக்கொண்டு விழித்தெழுந்தாள் பிச்சைக்காரி. அங்கு அந்தத் தரித்திரக் குடிசையும் எண்ணெய் வரண்டதால் கருகிய கைவிளக்கும் சூனியத்தில் குழைந்திருந்தன. பிள்ளையாரே, பிள்ளையாரே என்று விநாயகரின் நாமாவளியைப் பதற்றத்துடன் உச்சரித்துக் கொண்டிருந்தாள். மோதகத்தை விரும்பும் பிள்ளையார் அப்பத்தைக் கேட்டது அவளுக்கு அச்சத்துடன் வியப்பையும் கொடுத்தது.

குப்பை விற்ற பணத்தில் செலவானது போக எஞ்சிய பணத்தில் பிள்ளையார் குறிப்பிட்ட நாளன்று விடியப்புறமாக அப்பத்தைச் சுட்டுக் கொண்டுபோய் படைத்து விட்டு, படைத்த அப்பத்தைத் திரும்ப அவள் பெட்டியில் வைத்து எடுத்துச் செல்லும் போது நன்றாக விடிந்துவிட்டது. வயது முதிர்ந்த கனவான் ஒருவர் தன் வீட்டுப்படலையில் நின்று பெட்டியில் அவள் கொண்டு போவது என்னவென விசாரித்தார். விற்பதற்கு அப்பம் சுட்டுக் கொண்டு போவதாக எடுத்தாற்போல் ஒரு பொய்யைச் சொல்லி வைத்தாள். உடனே அவர் தனக்கு ஐந்து அப்பம் தரும்படி காசு கொடுத்து வாங்கியதோடு ஒவ்வொருநாளும் வாடிக்கையாகத் தனக்கு அப்பம் தரும்படி முற்பணமும் கொடுத்தார். அங்கு கூடிய வேறு ஆட்களும் அவளிடம் தங்களுக்கும் வாடிக்கையாக அப்பம் தரும்படி சொல்லி வைத்தார்கள். அப்பம் அனைத்தும் அந்த இடத்திலேயே விலைப்பட்டுவிட, அவள் கையிலே சேர்ந்த காசு அவளைப் பார்த்துச் சிரித்தது. ஒருவரிடம் போய் கையேந்திப் பிச்சை கேட்டு அவமானப்படாமல் கௌரவமாகக் கை நிறையப் பணம் கொடுத்த அந்த எதிர்பாராத அப்ப வியாபாரத்தில் அவளுக்கொரு பற்றுப் பிறந்தது.

அவள் அப்ப வியாபாரம் தொடங்கப் புத்துணர்வு நிறைந்த ஊக்கத்துடன் துணிந்து முடிவு செய்து கொண்டாள்!

அன்றிரவு பிள்ளையார் அவள் கனவில் மீண்டும் காட்சி கொடுத்தார். இளம் பிறைபோன்ற தந்தங்கள் பிரகாசிக்க குமிண் சிரிப்பு கடைவாயில் முகிழ்க்க, சுடர் வீசும் தனது ஞானக் கண்களால் அவளைப் பார்த்துத் தலையை ஆட்டியபடியே ஓங்கார ரூபியானவர் தோன்றி மறைந்தார். அவளுடைய உண்மையாலும் உழைப்பாலும் பிரணவப் பொருளானவரின் மனம் மலர்ந்து விட்டதுபோலும்! அவளும் அச்சம் அகன்று தொழுதுவந்தாள்.

அதன்பின் இப்போது அவளிருந்த இரவல் காணி அவளுக்குச் சொந்தமாகிவிட்டது. அங்கே சிறிய குடிசை இருந்தவீட்டில் அடக்கமாக ஒரு நல்ல வீட்டை இன்று பார்க்கலாம். புளியடியிலும் ஒரு சிறிய ஆலயம் மிளிர்கின்றது. அங்கிருக்கும் பிள்ளையார் சிலை சரித்திரப் பெருமை வாய்ந்ததென்று விழிப்படைந்த ஆராய்ச்சியாளர்கள் பக்கம் பக்கமாக எழுதியவண்ணமிருக்கிறார்கள்.

★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## குளிரூட்டப்பட்ட உணவு இன்றைய உலகுக்கு ஓர் வரப்பிரசாதம்



குளிரூட்டப்பட்ட உணவு எமது இன்றைய நவீன வாழ்க்கைமுறையில் முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும். கடலில் பிடிக்கப்படும் மீன் வகைகளை நீண்ட காலம் பழுதடையாது வைக்கவும், அதே சமயம் சுவை கெடாது பாதுகாக்கவும் வழிசெய்தது இக்குளிரூட்டல் முறையே ஆகும். இக் குளிரூட்டல் முறையைக் கண்டுபிடித்தவர் 'கிளாரன்ஸ் பார்ட்ஸ்' என்ற அமெரிக்க நாட்டவர் ஆவார். அமெரிக்க அரசுக்காக 1910 களில் வனவிலங்குகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட வேளையிலேயே இவரால் இத் தொழில்நுட்பமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

'லெப்ரோடரு' என்ற இடத்தில் வாழும் மக்கள், குளிர்காலத்தில் மீன் பிடிக்கும் போது தண்ணீரிலிருந்து மீன்களை வெளியில் எடுத்ததும் அவை குளிரால் கல்போல இறுகி விடுவதை அவதானித்த அவருக்குத் தோன்றிய புதிய யோசனையொன்றே இக்குளிரூட்டல் முறைக்கு வழி சமைத்தது.

இந்த வழியில் காய்கறிகள், பழ வகைகளையும் பழுதடையாது நீண்ட நாள்களுக்குப் பாதுகாக்க முடியும் என்பதனைக் கண்டறிந்து செயற்படுத்திக் காட்டினார். 1924 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் 'பர்சி' என்ற பகுதியில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட உணவு தயாரிக்கும் தொழிற்சாலை இவரைப் பெரும் தனவந்தராக்கியது. இன்றும் 'பார்ட்ஸ் அய்' என்ற அவரது பெயரால் முத்திரையிடப் பட்ட குளிரூட்டப்பட்ட உணவு வகைகள் உலகம் முழுவதிலும் விற்பனையாகின்றன.

1930 ஆம் ஆண்டிலேயே முதல் முதலாகப் பொதி செய்யப்பட்ட காய்கறிவகைகள், மீன், இறைச்சி போன்றவை குளிரூட்டபட்ட நிலையில் விற்பனைக்கு வந்தன. இவை குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

1939 ஆம் ஆண்டில் சமைத்த குளிரூட்டப்பட்ட உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றை நன்றாகச் சூடு காட்டிய பின் உணவாகப் பயன்படுத்த முடியும்.

அன்று 'பார்ட்ஸ் அய்'யினால் அறிமுகப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட உணவுமுறை இன்று உலக மக்களுக்குப் பல விதங்களில் உதவுவதாக அமைந்து விட்டுள்ளது.★★★

- ரஜனி, கொக்குவில்.





## அதிசயப் பிராணி - எறும்புண்ணி



எறும்புகளையும் கறையான்களையும் மட்டுமே உண்டு வாழும் பிராணி ஒன்றுண்டு. எறும்புண்ணி என்பது இதனது பெயர். ஏறத்தாழ ஒன்றரை மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் வரை உயரமும் இது வளர்கின்றது. வேறெதனையும் உண்ண இயலாத வகையில் நீண்டு ஒடுங்கிய வாய் அமைப்பைக் கொண்டது இது.

நிலத்தில் வாழ்பவை, மரங்களில் வாழ்பவை என இவற்றில் இரு வகைகள் உள்ளன.

நிலத்தில் வாழ்பவை உருவத்தில் பெரியன. அதனால் இவை பெரும் எறும்புண்ணி எனப்படுகின்றன. குழாய் போன்று அமைந்துள்ள இதன் வாய்ப்பகுதியின் நுனியில் ஒருசிறு துவாரம் உள்ளது. வாயை ஒட்டினாற்போல இரு சிறிய மூக்குத் துவாரங்களுள்ளன. வாயிலுள்ள நீளமான நூல் போன்ற நாக்கின் மேற்பாகத்தில் எப்போதும் பசை போன்ற நீர் சுரந்தபடி இருக்கும். புற்றுக்களை உடைத்து அதிலுள்ள எறும்புகளையும், முட்டை, லாவா போன்றவற்றையும் நாக்கால் ஒற்றி எடுத்து உண்ணும். இதன் கண்கள் சிறியவை, சிறிய காதுகள் வட்ட வடிவானவை. உடலில் உரோமங்கள் அடர்த்தியாகக் காணப்படும். தனது முன்னங்கால்களில் உள்ள கூர்மையான நகங்களால் எறும்புப் புற்றுகளை எளிதில் தகர்த்துக் கொள்ளும்.

இவை இரவில் மட்டுமே இரை தேடுகின்றன. பகலில் தம் உடலைப் பந்து போல் சுருட்டிக் கொண்டு உறங்குகின்றன. இவை தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு தடவைக்கு ஒரு குட்டியையே ஈனும். நடமாடும் பழக்கம் வரும் வரை குட்டி தாயின் முதுகிலேறிச் சவாரி செய்யும்.

இயற்கையில் இவை சாதுவானவை. ஆனால் எதிரியிடமிருந்து தப்பி ஓட இயலாவிட்டால் எதிரியை எதிர்த்துச் சண்டையிடவும் இவை பின் நிற்பதில்லை.


மரம் வாழ் எறும்புண்ணிகள் உருவத்தில் சிறியவை. மரத்தில் ஏறுவதற்குத் தமது வாலை ஐந்தாவது காலாகப் பயன்படுத்துகின்றன. ஒரு வகையில் எறும்பு இனங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விலங்கினமாக எறும்புண்ணிகள் உள்ளதாகக் கொள்ள இயலும்.★

- எஸ்.ரவி, ஆனைக்கோட்டை.

பாலை நிலங்களின் பசுஞ்சோலைகளில் வளர்ந்து பயன்தரும் பேரீச்ச மரங்கள், நமது நாட்டின் வரட்சியான பிரதேசங்களில் வளரக் கூடிய சாத்தியம் உண்டெனக் கூறப்படுகின்றது. கடும் வரட்சி இல்லாவிடினும் ஓரளவு வரட்சி நிலவும் பிரதேசங்களில் வளர்ந்து பயன்தரக்கூடிய பேரீஞ்சு இனங்கள் ஆய்வுகள் மூலம் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. அத்தகைய புதிய இனங்களை மன்னார். பூநகரி, குடாநாட்டின் தீவுப்பகுதிகள் போன்ற இடங்களில் பயிரிட இயலும் எனவும் கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அராபிய நாடுகளில் வாழும் மக்களின் முக்கிய உணவு வகையொன்றாகப் பேரீச்சம் பழம் விளங்குகின்றது. தற்போது கலிபோர்ணியா மற்றும் மெக்சிக்கோ போன்ற அமெரிக்க மாநிலங்களிலும் பேரீந்து பயிராகி வருகின்றது.

பேரீஞ்சு பனைக் குடும்பத்தைச் சேர்ந்தது.



ஏறக்குறைய 30 மீற்றர் உயரம் வரை வளரும். மரத்தின் உச்சியில் தென்னங்கீற்றுக்கள் போன்று முப்பது வரையிலான மட்டைகள் இருக்கும். காலத்துக்குக் காலம் அவற்றால் பேரீச்சம் காய்கள் குலை குலையாகக் காய்க்கும். காய்கள் முற்றிப் பதமடைந்ததும் அவை சேகரிக்கப்பட்டுப் பதப்படுத்தப்படும். சவுதி அரேபியா, ஈராக் போன்ற நாடுகளிலிருந்து பேரீச்சம்பழம் பெருமளவில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

பேரீச்சம் ஓலையின் மட்டையிலிருந்து நார் உரித்துக் கயிறாகவும் திரிக்கலாம்.

பேரீச்சம் பழம் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் உகந்த தொன்றாகக் கருதப்படுகிறது.★

- எஸ்.ஜெயாசசி, யாழ்ப்பாணம்.

## தம் கையே தமக்குதவி



பறவைகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். என்பது ஒரு பாடல்வரி. இந்தப் பறவைகள் எத்தனை விதமான அற்புதக் கூடுகளைக் கட்டுகின்றன!

காகங்கள் காய்ந்த சுள்ளிகளைக் கொண்டு பாதுகாப்பான மரக்கிளைகளில் கூடுகட்டி, முட்டையிடுகின்றன. சிட்டுக் குருவிகள் சிறு துரும்பு, வைக்கோல், புல் ஆகியவற்றைக் கொண்டு கூடு கட்டுகின்றன. தூக்கணாங் குருவி நார்களால் பின்னிக் கூடு கட்டும். அக் கூடு பெரியதொரு போத்தல் போன்றிருக்கும். தையற்காரக் குருவிகள் பெரிய இலைகளின் விளிம்புகளைச் சேர்த்துத் தைத்துக் கூடு கட்டுகின்றன. கழுகு, பருந்து என்பன உயர்ந்த மலைச்சரிவுகளிலும், உயர்ந்த மர உச்சிகளிலும் கூடுகள் கட்டிக் கொள்கின்றன. கிளிகள் மரப்பொந்துகளில் கூடு கட்டுகின்றன. ஆந்தைகள் இருண்ட பாறைக்குழிகளிலும் மரப்பொந்துகளிலும் கூடு கட்டுகின்றன.

கூடுகளின் உள்ளே இறகுகள், பஞ்சு, புல் என்பவற்றை இட்டு மிருதுவாக்கும் தொழில் நுட்பத்தை இந்தப் பறவையினங்கள் கற்றுக் கொண்டிருப்பது விந்தையல்லவா? இவை குஞ்சுகளுக்குக் கதகதப்பான சூழலை உருவாக்கிக் கொடுக்கின்றன.

பறவைகள் பெரும்பாலும் தமது கூடுகளைத் தாங்களே அமைத்துக் கொள்கின்றன. ஆனால் கூடு கட்டத் தெரியாத பறவை எது தெரியுமா? குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. அது காகத்தின் கூட்டில் முட்டைகளை இடும்.

அந்த வகையில் வெளவால்களும் இதற்கு விதிவிலக்கே. ஒரு வகையில் பார்த்தால், பறவைகள் அனைத்துக்கும் வாழக் கூடுகளுள்ளன. ஆனால் [illegible] வாழ வீடுகள் இல்லை. இது இயற்கையின் விந்தையல்லவா?★

## எழுத்தின் பழைமை



இராமாயண காலத்தில் அணிகலன்களிலும் ஆயுதங்களிலும் எழுத்துக்களைப் பொறித்து வந்தது உண்டு. வாலி, தன் மார்பிலே தைத்த அம்பிலே இராமரின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு எய்தவரை அறிந்தான். அசோக வனத்தில் இருந்த சீதை தன்னிடம் அனுமன் அளித்த கணையாழியில் ராம நாமத்தைக் கண்டு பூரித்துப் போனாள். இராமாயண காலத்திலேயே எழுத்துக்கள் இருந்தமைக்கு இந்த இரு சான்றுகள் போதும்! ★

- சு.ரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



லயன் சீமாட்டி
திருமதி தவமணி பாலசிங்கம்

மலர்வு
29★05★1921

உதிர்வு
06★06★2007

எங்களைப் பெற்று வளர்த்து மேன்மையுற வைத்த
எம் அம்மாவே உமது நினைவில்.......

'தவநிசவாசா'
அரசடி வீதி,வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

[99115]

# அறிவித்தல்

இலக்கம் 17, கனகசபை வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி சரநாதனும் (பொறியியலாளர்) பெண் ராஜினியும் தற்போது இலக்கம்5.MILBURN COURT அவுஸ்திரேலியாவில் வதியும் நாங்கள் 20.06.2007இல் எமக்குச் சொந்தமான ''கள்ளி வெளியும் நாயன்தோட்டமும் பொக்கனோடையும்'' என்னும் ஆதனப் பெயர் கொண்டதும் நிலப்பரப்பு 3 குளி 3½யும் கல்வீடும் கொண்ட ஆதனத்தை (17, கனகசபை வீதி, மானிப்பாய் தெற்கு) பராமரிக்கவும் விற்பனை செய்யவும் எங்கள் உறவினராகிய சின்னத்தம்பி பத்மநாதன் அவர்களுக்கு அற்றோணித்தத்துவம் கொடுத்திருந்தோம். தற்போது அவர் தமது கடமைகளைச் செய்ய இயலாதவாறு சுகவீனமுற்று இருப்பதின் காரணமாக அவரின் பரிபூரண சம்மதத்துடன் விக்ரோரியா, அவுஸ்திரேலியாவில் சட்டத் தொழில் புரியும் திருமதி நிமாலினி அம்பிகைபாலன் பரீஸ்ரரும் நொத்தாரிஸும் ஆகியவரால் அத்தாட்சிப்படுத்திய தத்துவப் பத்திரத்தை நாம் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி பயனற்றதாக்கி விட்டோம். எனவே இன்றிலிருந்து குறித்த தத்துவப் பத்திர மூலம் செய்யப்படும் எத்தகைய விற்பனைகளும் ஆதன மாற்றங்களும் யாவும் வலுவற்றதும் வெற்றும் வெறிதும் ஆகியனவாகும் என இத்தால் நாம் இவ்அறிவித்தலைத் தருகின்றோம். மேற்குறித்த தத்துவப் பத்திரத்தினைப் பயன்படுத்தி இன்றைய திகதி வரை எத்தகைய கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லையென்றும் இத்திகதியின் பின்னர் செய்யும் எச்செய்கையும் வலுவற்றன என இவ்வறிவித்தல் தரப்படுகின்றது.

கந்தசாமி சரநாதனும்
பெண் ராஜினியும்.

05.06.2010 இல.17, கனகசபை வீதி, மானிப்பாய்.

[99079]

# மணமக்கள் தேவை

★யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978இல் பிறந்த, கேட்டை நட்சத்திரம், கிரகபாவம் 41, 2இல் செவ்வாய், உயரம் 5' 6" உடைய அரசாங்க வேலை பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர்.

★யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980இல் பிறந்த கேட்டை நட்சத்திரம், கிரகபாவம் 82, லக்கினத்தில் செவ்வாய், உயரம் 5' 1" உடைய மெல்லிய, அழகிய பொது நிறமுடைய பட்டதாரி மணமகளுக்குத் தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

★உள்ளூரில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
★தொடர்புகளுக்கு-0779674081

# காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, உடுவிலில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.

தொடர்புக்கு:-
0714102174/0771622770

# BILL CLERK தேவை

இரும்புப் பொருள்கள் விற்பனையில் முன் அனுபவமும், கணனி அறிவும் உள்ள ஒருவர் தேவை. [ஆண்கள் மட்டும்].

விண்ணப்பங்களை 10.06.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

விளம்பர இல: 4030 C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சேவை

குறைந்த செலவில் குறுகிய காலத்தில், உயர்ந்த தரத்தில், நினைவு மலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம்,
நல்லூர்.

# பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனை

| | | |
|---|---|---|
| கார் | | |
| 1. புரோடன் வீரா | HQ-7914 | 2000 |
| வான் | | |
| 2. டோயோடா ஹயிஏஸ் | 30-0296 | 1980 |
| 3. டோயோடா எல்எச் 20 | 40-3881 | 1981 |
| 4. இசுகு எல்ப் ரூட் | 61-2025 | 1986 |
| லொறி / ட்ரக் / டிப்பர் | | |
| 5. ஹயிஉன்டாயி ட்ரக் | LC-5917 | 2002 |
| 6. டாடா 1210 லொறி | 26-6117 | 1979 |
| 7. இசுகு புல்பொடி லொறி | 27-5332 | 1980 |
| 8. அசோக் லெலன்ட் லொறி | 26-1332 | 1978 |
| 9. மஸ்டா புல்பொடி லொறி | 227-1035 | 1993 |
| 10.இசுகு லொறி | 27-2817 | 1976 |
| 11.இசுகு 14 1/2 ட்ரக் | 41- 5264 | 1981 |
| 12.நிசான் கெரவன் ட்ரக் | 29-4626 | 1980 |
| 13.இசுகு 10 1/2 | 28-6505 | 1978 |
| பஸ் | | |
| 14.இசுசு ஜர்னி கே | 61-0333 | 1983 |
| 15.இசுசு டீ ஆர் பி | 60-1304 | 1981 |
| 16.டிமோ | 61-8550 | 1993 |
| த்ரீவீலர் | | |
| 17.சன்மோ | QG-5973 | 2006 |
| 18.எல்பா | QC-2328 | 2005 |
| 19.எல்பா | QC-9381 | 2005 |
| மோட்டர் பயிக் | | |
| 20.யமஹா | TW-4304 | 2007 |

ஞாயிறு தவிர்ந்த தினமும் காலை 9மணி முதல் மாலை 5மணி வரை பார்வையிடலாம்

ஏசியன் பினான்ஸ் லிமிட்டட் (குருணாகல் வாகனப் பிரிவு)
186. புத்தளம் வீதி. குருணாகல்.

0722-352883, 0722-352860, 0722-352854

# 31 ஆம் நாள் நினைவலைகளில்...



தோற்றம்
29★04★1967

மறைவு
09★05★2010

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி ச.தேவரஜனா அவர்களின் அன்புக் கணவர் அமரர் சத்திவேற்பிள்ளை சத்தியநாதன் அவர்களின் 31ஆம் நாள் நினைவலைகள் நீள்கின்ற இந்நாளில் அவரின் ஆன்மா சாந்தி நிலைபெற, குடும்பத்தினர் மன அமைதி பெற அஞ்சலி செய்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/கனகபுரம் ம.வி.,கிளிநொச்சி.

# நினைவலைகள்

20ஆம் ஆண்டு நினைவு 6ஆம் மாத நினைவு



அமரர் அல்வின்
பற்றிமாம்பிள்ளை
பிறப்பு: 04.07.1920
இறப்பு: 06.06.1989

அல்வின்
ஞானம்மா
பிறப்பு: 17.09.1920
இறப்பு: 10.01.2010

''சீவியத்தில் எம்மை நேசித்தோர்
மரணத்திலும் எம்மை மறவாதீர்''

கவலையில்லாச் சிரிப்பும் கபடம் இல்லா மனமும்
அன்புடன் அரவணைக்கும் அன்பு அப்பா, அம்மா
உங்கள் நினைவில் துயருறும் பிள்ளைகள்.

வேலணை கிழக்கு,
முதலாம் வட்டாரம், வேலணை.

பிள்ளைகள்.

(99061)

## 'கோரியன் அக்குபஞ்சர்' விசேட சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 6

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையில் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் 'கொரியன் அக்குபஞ்சர்' விசேட சிகிச்சை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சையைப் பெற விரும்புபவர்கள் குறிப்பிட்ட தினங்களில் வருகை தந்து பயன் பெற முடியுமென்று வைத்தியப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஒ)


தலைநகரில் தலைசிறந்த
ஸ்தாபனம்....
குமரன் சில்க்ஸ்

ஆண்களுக்கான...
★ சேட்டிங்
★ சூட்டிங் ★ கோட்சூட்
★ குருத்தா ★ டெனிம்
★ ரி.சேட்ஸ்
★ சேட்வகைகள்

பெண்களுக்கான...
★ திருமண சாறிவகைகள்
★ சல்வார் வகைகள்
★ திருமணப் பட்டுச்சாறிகள், புடைவைகள்
★ சீக்குன்ஸ் சாறிவகைகள்
★ கொட்டன் சாறி வகைகள்
★ பிறின்ட் சாறிவகைகள்
★ சல்வார் வகைகள் ★சோலி கிட்

சிறுவர்களுக்கான..
நவீன டிசைன்களில்
உடுபுடைவைகள்

இவை அனைத்தையும்
எண்ணம்போல் தெரிவுசெய்து
மகிழ்வுடன் அள்ளிச்செல்ல



K.S
குமரன் சில்க்ஸ்
இல.291,
பிரதான வீதி,
கொழும்பு-11.

T.P:
0114717574
[illegible]
Fax:
0112441702



மெகா ஹொட்டல்

தம் புரியாணி,பிறைட்றைஸ், நூடில்ஸ், டேவல் வகைகள், சூப் வகைகள், காளான் கறி மற்றும் இந்தியன், சைனீஸ், சிறிலங்கன் உணவு வகைகளும் ஐஸ்கிறீம் உண்டு மகிழ்ந்து கொண்டு செல்ல 1L, 1/2 L, சிறிய CUP வகைகளும் உண்டு.

ஒரு சில நாள்களில் பீசா, நாண்றொட்டி, சாப்பாடு என்பன ஹோம் டிலிவெரி (Home Delivery) செய்து தரப்படும்.

குறிப்பு: விழாக்களிற்கான உணவு, இடம் என்பன ஒழுங்குசெய்து தரப்படும்.



தொடர்பு:
மெகா ஹொட்டல்
[illegible], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212229942


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரியின் புத்தி

அழகவர் எனும் சிற்றூரிலே கந்தையா எனும் வியாபாரி வசித்து வந்தார். அவர் பக்கத்திலே இருக்கும் ஊரிற்குப் பொருள்களைக் கொண்டுசென்று பணம் பெறுவதும் அயலூரிலிருக்கும் பொருள்களை தன்னூரிற்குக் கொண்டுவந்து பணம் பெறுவதுமாக வாழ்க்கையைக் கழித்துவந்தார்.



அவர் செல்லும் பாதை ஒரு காட்டைக் கடந்து செல்கிறது. அவர் ஒரு நாள் காட்டுவழியே சென்று கொண்டிருக்கும்போது அருகிலிருந்த கிணற்றிலிருந்து "என்னை தயவு செய்து காப்பாற்றுங்கள், நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என்று சத்தம் கேட்டது.

வியாபாரி கிணற்றினுள் பார்த்தபோது யாரையும் காணவில்லை. பின்பு "நீயார்?" என்று கேட்டார். "நான் ஒரு வரம் கொடுக்கும் பூதம் என்றும் நீங்கள் என்னைக் காப்பாற்றினால் நான் உங்களிற்கு 2 வரம் தருவேன் என்றது. வியாபாரி அந்தப் பூதத்தைக் காப்பாற்றினார்.

அந்தப் பூதம் " உங்களுக்கு நான் தரவேண்டிய முதலாவது வரம் என்ன" என்று கேட்டது. அதற்கு வியாபாரி "எனது வண்டி முழுவதும் பொன்னால் மூடப்பட்டிருக்க வேண்டும்" என்றார். பின்னர் அவ்வழியால் சில திருடர் கும்பல் வருவதைக் கண்ட அவர் " இரண்டாவது வரமாக நீ இந்தப் பொன்னை என் கண்களுக்கு மாத்திரம் தெரிய வை என்றார். பூதமும் அப்படியே செய்தது.

அவர் கிராமத்தில் வந்து கடைக்காரரிடம் " இந்தப் பொன்னை விற்கிறேன் வாங்குகின்றீர்களா" என்று கேட்டார். அப்பொழுது கடைக்காரர் " பொன்னா?, உன் வண்டியிலே காணவில்லையே" என்றார். அப்பொழுதுதான் அவர் பூதத்திடம் கேட்ட இரண்டாவது வரம் ஞாபகத்திற்கு வந்தது.

**ஜெ.பிரணவன்**, தரம் 7, யா/ இந்துக் கல்லூரி.

# நட்பு



நாள்கள் நகர்ந்து வருடங்கள் கடக்கும்
நம் வாழ்க்கைப் பாதையில்
என்றென்றும் நிழலாய்த் தொடரும்
நம் நட்பின் பெருமையை கண்
சிமிட்டி ஓரப் பார்வை பார்க்கும்
விண்மீன் கூட்டம் கதை கதையாய்
சொல்லும் அதன் காலம் முடியும்வரை
சிறுபிள்ளை சண்டையாய் சில சமயம்
சினந்து கொண்டோம் அன்பென்னும்
கவசத்தால் காத்துக் கொண்டோம்
நம் நட்பினை ஒரே பிரசவத்தில் எண்ணற்ற
மலர்களைத் தந்த கல்லூரித் தாயை
நினைத்தாலே இனிக்கும் நம் நட்பின்
தூரம் அந்த அடிவானம் செல்லும்.

**ச.நயந்தன்**, தரம் 9, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 59

01. இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவர் யார்?
02. சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் தலைவர் யார்?
03. இந்தியாவில் அண்மையில் பலரைப் பலிகொண்ட விமான விபத்து எந்த விமான நிலையத்தில் நிகழ்ந்தது?
04. இலங்கையின் பிரதமர் யார்?
05. 'ஒதெல்லோ' நாடகத்தை எழுதியவர் யார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 13.06.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? - 57 இற்கான சரியான விடைகள்**

01. இங்கிலாந்து. 02. லைலா.
03. 14.05.1796. 04. ஹெகலிய ரம்புக்வெல
05. செ. அற்புதன்.

### பரிசுபெறுவோர் விவரம்

01. **ரா.உஷாந்தினி**, தரம் - 7 M, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.
02. **ப.கர்ஷா**, தரம் - 8 C, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
03. **ஜெ.ஜெயவர்மன்**, தரம் - 10 A, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
04. **சூ.விமலேசன்**, தரம் - 10 A, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
05. **சி.நிரோஜன்**, தரம் - 5 B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை.

## நீங்களும் எழுதலாம்

**(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)**

மாணவர்களே!


'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................................
தரம் :-..........................................................
பாடசாலை :-..........................................................
..........................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.




**சி.சாரிதா**, தரம் -4 C,
யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



**ந.டிலக்ஷா**, தரம் -6 B,
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.



**உ.சுவஸ்திகா**, தரம் -2 B,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.




**சு.துஷாந்தன்**, தரம் -7 A,
யாழ்.மத்திய கல்லூரி.




**ஸ்ரீ.மிதுசன்**, தரம் -6 A,
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.



**சி. சுபநிதா**, தரம் -4,
யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.



**[illegible]தன்**, தரம் -8 A,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



**ச.விதுஷா**, தரம் -8 B,
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Study in UK Without IELTS

**UK** அரசாங்கத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் **UK Visa** நடை முறை தொடர்பான இலவச கருத்தரங்கும் **UK**யில் பிரபல முன்னணி கல்லூரி ***The City College*** க்கான உடனடி அனுமதிகளும் வழங்கப்படும்.



| காலம் | 09.06.2010 - 12.30pm onwards |
|---|---|
| இடம் | தலைமை காரியாலயம் (Exponet) Colombo |



**வழங்குபவர்**

**Mr.J.C.Sandy Lloyd** (Principal of The City College,London)

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**பதிவுகளுக்கு**

**Colombo - 0117 555514 Jaffna - 021 7538395 Hotline - 0714150995**

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

September/February மாதங்களுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**Free IELTS Class**

பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிய எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்

**EXPONET**
Overseas Consultants

**Head office -**
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

**Jaffna Branch -**
102 2/2, Navalar Road,
Jaffna.

www.expogroup.lk

**Hotlines:**
**071 415 0995,**
**011 755 5511/12,13,14**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தரத்தில் வீரர்களை உருவாக்க அனைத்து தரப்பினரது பங்களிப்பும் அவசியம்

நினைத்ததைச் சாதித்து முடிக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காக சாதனைகளைப் படைக்க உயிரையே பணயம் வைத்துச் சாதித்து முடிப்பவர்கள் ஏராளமானோர் வாழ்கின்றனர்.

அதுபோன்று சாதனைகள் படைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் அதற்காகக் கஷ்டப்படாமல் சாதனைகள் படைக்க வேண்டும் என வாழ்பவர்களும் உள்ளனர்.

இந்த இரு விடயங்களுக்கும் தன்னம்பிக்கை, ஊக்கம்



என்பவற்றுடன் அதற்கான வளமும் அவசியம். இவை கிடைத்தால் மட்டும் சாதனைகளைப் படைத்து விடலாம்.

எனினும் இது அனைத்துத் துறைகளுக்கும் சாத்தியமானதா? என்ற கேள்வி அனைவரிடமும் உண்டு. அதிலும் குறிப்பாக விளையாட்டுத் துறையில் வீரர்களுக்குக் கிடைக்கும் வளங்களே அவர்களின் சாதனையைத் தீர்மானிக்கின்றன.

எனினும் எந்த வளமும் இல்லாதவர்களும் சாதனைகள் படைத்துள்ளனரே என நீங்கள் எண்ணலாம். அதனையும் நாம் மறுப்பதற்கோ, மறைப்பதற்கோ தயாராகவில்லை. ஆனாலும் இந்தச் சாதனைகள் சர்வதேச மட்டத்தில் நிகழ்த்தப்பட வேண்டும். அவ்வாறு நிகழும் போது அவர்களால் படைக்கப்பட்ட சாதனைகளை விடவும் அதிக சாதனைகளைப் படைத்திருப்பர் - படைப்பர்.

சரி இதெல்லாம் எதற்காகக் கூறுகின்றோம் என நீங்கள் முணுமுணுப்பது எமக்கு விளங்குகின்றது.

சரி விடயத்துக்கு வருவோம்.

போரின் பிடியில் யாழ்ப்பாணம் சிக்கிச் சின்னாபின்னமாகியது அனைவருக்கும் தெரிந்த விடயம். அப்போதுகூட விளையாட்டுத்துறையில் சிறந்த வீரர்களை இந்த மண் உருவாக்கியது.

யுத்தம் ஆரம்பமாகும் முன்னர்கூட இந்த மண்ணின் வீரர்கள் சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் ஒலிக்கக் காரணமாக இருந்தவர்கள்



உதாரணமாக நாகலிங்கம் எதிர்வீர சிங்கம், ஆழிக்குமரன் ஆனந்தன் போன்றவர்கள் சர்வதேச ரீதியில் சாதனைகளைப் படைத்தவர்கள். அதன் பின்னர் இன்றுவரை வேறு எவராலும் இத்தகைய சாதனைகளைப் பதிவு செய்ய முடியாமல் போனது ஏன் என்ற கேள்வி அனைவரது மனதிலும் உண்டு.

அன்று யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத்துறையில் எந்த அளவுக்கு வளங்கள் காணப்பட்டனவோ அதே அளவான வளங்களே இன்றும் உள்ளன என்பதே வேதனைக்குரிய உண்மையாகும்.

அண்மைக்காலமாகத் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர்கள், விளையாட்டுத்துறை உயர் அதிகாரிகள் எனப்பலரும் வருகின்றனர். கூடவே தமது நிறுவனங்களின் கிளைகளைத் திறந்து இலாபம் ஈட்டி விட வேண்டும் என்ற நினைப்புடன் வரும் நிறுவனங்களும் விளம்பர யுக்தியாக விளையாட்டுப் போட்டிகளையும், பயிற்சி முகாம்களையும் அரங்கேற்றுகின்றன. இது போதாதென்று அரசாங்க விளையாட்டுத் திணைக்களமும் அடிக்கடி விளையாட்டு விழாக்களை நடத்துகின்றது.

இதனால் யாழ். வீரர்களுக்கு நன்மைதானே ஏற்படுகின்றது. யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையே என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் உண்மையே. ஆனால் முழு அளவிற்கு அல்ல என்பதே நிதர்சனம்.

தேசிய, சர்வதேச ரீதியில் விளையாட்டுத்துறை நவீனத்துவம் அடைந்து வரும் இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான வளர்ச்சி இன்னமும் ஏற்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். தவிர சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்ப விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறுவதில்லை என்பதும் கவனத்திற்குரியது.

வெறும் அரசியல் விளம்பர நோக்கங்களுக்காக நடத்தப்படுகின்ற விளையாட்டு விழாக்களை நிறுத்த வேண்டும். ஏனெனில் அமைச்சர்களும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவே இவ்வாறான விளையாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றனவா? எனக் கேட்கத் தூண்டும் வகையில் இவை நடத்தப்படுகின்றன. இதற்காகப் பல மில்லியன் ரூபாக்களும் செலவிடப்படுகின்றன.

அதற்காக விளையாட்டு நிகழ்வுகளை நடத்தக் கூடாது என நாம் சொல்லவில்லை. விளையாட்டு நிகழ்வுகள் இப்போது நடப்பதைவிட அதிகளவில் நடத்தப்பட வேண்டும் என்பதே மக்கள் அனைவரினதும் அவாவாகும்.

ஆனால் அவ்விளையாட்டுக்களில் ஈடுபடும் வீரர்களுக்கான வள வாய்ப்புக்களை அனைவரும் ஏற்படுத்த முதலில் முன்வர வேண்டும். அதற்காகப் பின்வரும் விடயங்கள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர் , யாழ். மாவட்ட அரச அதிபர், மாநகர முதல்வர், விளையாட்டுத்துறை உயர் அதிகாரிகள் என அனைவரும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

போட்டிகளை நடத்துவதற்கு யாழ்.மாவட்டத்தையே அனைவரும் தேர்ந்தெடுப்பதற்கு முன்னிற்கின்றனர். ஆனால் இன்றுவரை இங்கு போட்டிகளை நடத்துவதற்கு சரியான - தகுந்த மைதான வசதி இல்லை.

இங்கு நடத்தப்படும் பெரும்பாலான போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்கிலேயே நடைபெறுவது வழமை. ஆனால் இவ்விளையாட்டரங்கு சர்வதேச தரத்திலோ அல்லது தேசிய தரத்திலான போட்டிகளை நடத்துவதற்குத் தகுதியான மைதானமாக இல்லை.

ஒரே நேரத்தில் பல போட்டிகளை நடத்துவதற்கு உரிய மைதான வளம் அவசியம் தேவை. அத்துடன் தனியே யாழ்.நகரினை மையமாகக் கொண்டு மைதானங்களை உருவாக்காது எதிர்கால யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திக்கு [illegible] விதத்திலும் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் என அனைத்துப் பகுதிகளிலும் தேசிய, சர்வதேச தரத்திலான மைதானங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மைதானங்களின் உருவாக்கத்தின் போது சில குறிப்பிட்ட விளையாட்டுக்களுக்கெனத் தரம் வாய்ந்த மைதானங்களும் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டும்.

துரையப்பா விளையாட்டரங்கம் ஒன்றே இன்று வீரர்களுக்குத் தஞ்சம் அளித்து வருகிறது. ஆனால் இம் மைதானத்தில் போட்டிகள் நடைபெறும் ஒரு சில நாள்களைத் தவிர ஏனைய நாள்கள் அனைத்திலும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடமாக அமைந்துள்ளது. அதுதவிர கேளிக்கை நிகழ்வுகள் நடைபெறும் இடமாகவும் இது இப்போது உள்ளது. இந்த நிலைமைகள் விரைவில் மாற்றப்பட்டு விளையாட்டு வீரர்கள் தினமும் பயிற்சி பெறும் வகையில் இந்த மைதானத்தின் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் துடுப்பாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நூற்றாண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்றுவரை பாய் விரிப்பு ஆடுகளமே வீரர்களுக்கு சாத்தியமாக உள்ளது. புற்றரை ஆடுகளம் உடைய மைதானத்தை யாழ்.வீரர்கள் கனவில் கூட நினைக்க முடியாத நிலையே உள்ளது.

புற்றரை ஆடுகளத்தின் அவசியம் குறித்து அனைத்துத் தரப்பினரும் உணர்ந்துள்ள நிலையிலும் இன்றுவரை வீரர்களுக்கு அது எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது.

அதுதவிர துடுப்பாட்டத்திற்கென பொது விளையாட்டு மைதானத்தின் தேவையும் அதிகமாகவே உள்ளது. இருக்கின்ற மைதானங்களிலேயே எதுவித வளர்ச்சியும் இல்லாத நிலையில் புதிய விளையாட்டு மைதானங்கள் தேவைதானா? என்ற கேள்வி கூட எழுவது நியாயமே. ஆனால் யாழ்ப்பாணத்தின் மைதானங்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை பாடசாலைகளுக்குச் சொந்தமானவை. அவற்றில் வேறு நபர்கள் செல்வாக்குச் செலுத்துவதைப் பாடசாலை நிர்வாகங்கள் விரும்புவதில்லை. எனவே பொது விளையாட்டு மைதானங்களின் தேவை அவசியமாகவுள்ளது.

## விளையாட்டுக்களின் தன்மைக்கு ஏற்ப நவீன வசதி கொண்ட மைதானங்கள் தேவை

இதேவேளை சிறிது காலத்துக்கு முன்னர் மாநகரசபையினால் யாழ்.நகர அபிவிருத்திக்கு துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்காக 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாக யாழ்.நகர முதல்வர் தெரிவித்திருந்தார். ஆனால் அதன் பின்னர் அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. அறிவிப்பின் பின்னரான நடவடிக்கைகள் என்னவாகின? என்பது தெரியவில்லை.


சர்வதேச தரத்தில் துரையப்பா மைதானம் உருவாக்கப்படும் எனக் கூறப்பட்ட போதும் தற்போதைய சூழ்நிலையில் முன்னர் இருந்த நிலையைவிட மிகவும் மோசமான நிலைக்குத் துரையப்பா விளையாட்டரங்கம் வந்துள்ளது.

மாகாண மட்டத்திலான போட்டிகளை இங்கு நடத்துகின்ற போது வெளி மாவட்ட வீரர்களுக்கு தங்குமிட ஏற்பாடுகளைச் செய்யும் போது அதிகாரிகள் திணறிப் போய் விடுகின்றனர். தங்குமிடங்களுக்காக அருகில் உள்ள பாடசாலைகளின் கதவுகளைத் தட்ட வேண்டியுள்ளது. இவற்றை தவிர்க்கும் பொருட்டு சிறந்த திட்டமிடலுடன் வீரர்களுக்கான தங்குமிடங்களை ஏற்படுத்த வேண்டும். அல்லது ஹோட்டல்கள், தங்குமிடங்களை அமைக்கத் தனியாருக்கு உதவுதல் வேண்டும்.

இவையனைத்தும் மைதானங்களில் ஏற்படுத்தப்படுதல் இன்றியமையாததாக உள்ளன. அத்துடன் உள்ளக விளையாட்டுக்களுக்கு ஏற்ற உள்ளக விளையாட்டரங்கம் ஒன்று இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இல்லை என்பது வேதனைக்குரியதாகும். இதனை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதற்காக தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு தாராளமாக கிடைக்கும் என்றே நம்பலாம்.

அத்துடன் இன்று சர்வதேச அரங்கில் புகழ்பெற்ற விளையாட்டுக்கள் யாழ்ப்பாணத்திற்கு மிகவும் அவசியம். ஏனெனில் விளையாட்டுத்துறையில் ஆயிரக் கணக்கானவர்கள் பங்கேற்றுவரும் இந்த நிலையில் ரெனிஸ், நீச்சல், படகோட்டம், துப்பாக்கி சுடல் போன்றவற்றின் அறிமுகமும் தேவையும் உள்ளது. தொலைக்காட்சிகளில் மட்டுமே இந்த விளையாட்டுக்களை பார்த்து மகிழும் எம் வீரர்கள் இவ்விளையாட்டுக்களில் சாதனை படைக்க சாதகமான சூழ்நிலைகள் உருவாகும்.

இதற்காகச் சிறந்த பயிற்றுவிப்பாளர்களையும் உரிய வளங்களையும் அனைவரும் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.



போர் மேகங்கள் சூழ்ந்த யாழ்.மாவட்டத்தில் அங்கவீனர்களாகியவர்கள் ஏராளம். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள், அவர்களுள் விளையாட்டு வீரர்களுக்கும் பஞ்சமில்லை. இவ்வாறானவர்களுக்குத் தேவையான வள வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்குச் சிறந்த கௌரவத்தை வழங்க முடியும். தவிர சர்வதேச அரங்கில் இவர்களுக்காக நடத்தப்படும் பரா ஒலிம்பிக்கில் கூட பதக்கங்களை வெல்லும் சாத்தியத்தைக் கூட ஏற்படுத்த முடியும் என்று நம்பலாம்.

இதேபோன்று மாற்று ஆற்றலுடையவர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடத்தப்படுகின்றன. ஆனால் அவர்களுக்கான சரியான வளம் மிகவும் பற்றாக் குறையாகவே உள்ளது. அவற்றை நிவர்த்தி செய்யவும் அனைவரினது பங்களிப்பும் அவசியமாகும்.

'இனியொரு விதி செய்வோம்' என்பதற்கு இணங்க பொலிவிழந்து, வளமிழந்து கிடக்கும் யாழ்.மண்ணில் சாதனைகள் படைக்கத்துடித்து நிற்கும் இளம் வீரர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும்.

தமிழரசன்

படங்கள்: தமிழினியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலைமகள் அழகு நிலா
## பயிற்சி நிலையம்

ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

**பயிற்சிகள்**

- ★ Facial *(ஏழு வகை)*
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stretening *(2 வகை)*
- ★ Hair Perming *(2 வகை)*
- ★ Hot Oil massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure manicure
- ★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
- ★ Bleaching
- ★ Bridal make up *(5 வகை)*

பயிற்சிக் கட்டணம்: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 10.06.2010,
பயிற்சி நேரம்: 9 மணி-பி.ப. 4 மணிவரை.

தொடர்புகள்: கலைமகள் அழகு நிலா,
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0773719071, 0214908151



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

# AAT (Srilanka)

Foundation level & intermediate level & Final
**பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.**

**Certificate Course in English**
**Course commencing on:**
19.06.2010 - 8.30 am Week end batch
21.06.2010 - 8.00 am Week day batch

**External Degree** (Jaffna University)
GAQ, BA 1 & BA Final
1st in Com, B.Com (1&11), Final
**ஆரம்பம்: 12.06.2010** (Saturday) 9.00 am

Furthur Detail
Director
**Jaffna College
Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.



## வேலையாள் தேவை

ஓரளவு ஆங்கில அறிவுள்ள ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**எரிக் கணேஷ்,**
இல.91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்



## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, சத்திர சந்திக்கும், கொட்டடி சந்திக்கும் அருகாமையில் யாழ்ப்பாணத்தில் வணிக நிலையம் (ஒருமாடி) வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
தொ.பே: 0777285811



## வீடு வாடகைக்குத் தேவை

கே.கே.எஸ். வீதிக்கும், பலாலி வீதிக்கும் இடையிலுள்ள சேர்.பொன்இராமநாதன் வீதிக்கு அருகாமையில் (பல்கலைக்கழக வீதி) சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0776054024, 0729634715, 0776697506



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1975 ஆம் ஆண்டு பிறந்த பூரட்டாதி நட்சத்திரம் லண்டன் PR உடைய மணமகனுக்கு 25-28 வயதுக்கு இடைப்பட்ட A\L அல்லது அதற்கு மேல் படித்து சித்தியடைந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 0778845063



## காணி தேவை

மாங்குளம், புளியங்குளம் பிரதேசத்தில் ஏ-9 பாதைக்கு அருகாமையில் உறுதியுடன் கூடிய 5 ஏக்கர் காணி தேவை.
தொடர்புகளுக்கு:
0775903384



# UK SPONSOR

வசதி UK EMBASSY மற்றும்
மத்திய வங்கியின் அங்கீகாரம்
பெற்ற வங்கியினூடாக
மூன்றே நாட்களில்

Call Rizan - 0729295367


## ‘இந்துவின் கிண்ணம்’ இறுதியாட்டம்

வலி.வடக்கு, ஜூன் 6

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் நடத்தும் ‘இந்துவின் கிண்ணத்துக்கான மென்பந்துப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

திறந்த போட்டியில் சுன்னாகம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும், 17வயதுக்குட்டப்பட்டோருக்கான போட்டியில் இணுவில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகமும் களமிறங்குகின்றன. (6-86)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

· தபால் மூலம் ·

- ~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- ~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- ~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Sales & Marketing Management விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Health & Hospital Management சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா.
- ~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.06.2010


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்





அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
கண்ணிமைப் பொழுதினிலே பிரிந்தவரே!
எண்ணவில்லை ஒருபோதும் உம்பிரிவை
விண்ணுலகம் சென்றதேனோ நம்மைவிட்டே
அன்பினதும் பண்பினதும் இருப்பிடமே
உதவும் கரம் கொண்ட உத்தமரே!
உன் மனையாளின் மனமும் ஏங்கித் தவிக்குதையா
உன் புதல்வர்களும் உன்முகம் காண ஏங்கி நிற்க
உன்னை நினைத்து சிறகு உடைந்த பறவைபோல்
உன்பிரிவை நினைத்து இப்புவியில்
ஐந்தாண்டுகள் முடிந்ததையா.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு: 19.07.1952

உதிர்வு: 06.06.2005

## அமரர் முத்து கதிரமலை
(செல்லக்கிளி)
(உரிமையாளர், கிருபா கிறேசர், வல்லைச்சந்தி, அச்சுவேலி)

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு.

மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தாவின் ஆட்சித் தெரிவு எதுவோ; சிங்கப்பூர் மொடலா அன்றிக் குவைத் மொடலா?



இலங்கையின் ஆறாவது குடியரசுத் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெற்றது. தேர்தல் முடிவு குறித்த முற்கணிப்புகள், எதிர்வுகூறல்கள் பலவிதமாக இருந்தன. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு 6 ஆசனங்கள் மட்டுமே குறைவாகப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இன்னும் சில வாரங்களில் மூன்றில் இரண்டு பலத்தையும் பெறும் அளவுக்கு எதிர்க்கட்சியில் இருந்து அரசு பக்கம் தாவல்கள் நடைபெறும் என்று செல்லப்படுகிறது.

இத்தனைக்கும் 2016 நவம்பர் மாதம் வரை ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக்கால ஆட்சியைத் தொடருவார்.

இந்தப் பின்புலத்தில் இம்மாதம் 8ஆம் திகதி இன்னும் இரண்டு நாள்களில் - இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்ய இருக்கையில் மஹிந்தரின் ஆட்சித் தெரிவு - ஆட்சி வகை - எந்த (''மொடல்'') மாதிரியைக் கொண்டிருக்கும் என்ற ஊகங்களும் கேள்வி பதில்களும் பலமாக அடிபடுகின்றன. அந்தப் பின்னணியில்...

ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் ஐக்கிய சுதந்திரமுன்னணி அமோக வெற்றிபெற்றது. யாழ்.மாவட்ட தேர்தலுக்காகக் கடை பரப்பியவர்களின் தேர்தல் வியாபாரமும் முடிந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இங்கு தேர்தலுக்காகத் தெற்கிலிருந்து வந்து கடை பரப்பிய ''தேர்தல் வியாபாரிகள்'' தேர்தல் முடிவுகள் வெளியான அன்றே மூடை கட்டிவிட்டனர். சிங்கள அரசியல்வாதிகளின் பம்மாத்துக்களை நம்பி தமது உடன்பிறப்புகள் மீது(பெண்கள் மீதும்) ''வயர்'' கொண்டு தாக்கிய எடுபிடிகள் இன்று யாழ்ப்பாண வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்கள் இன்றும் தமது உரிமைகளுக்காக வாக்களித்துள்ளனர்.

மஹிந்த கட்சியின் பெயரில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி. கட்சிக்கு வாக்களித்தவர்கள் செஞ்சோற்றுக் கடனுக்காக வாக்களித்துள்ளனர் என்று கூறினால் மிகையல்ல என நினைக்கிறேன். விஜயகலா அக்காவுக்கு வாக்களித்தவர்கள் தமது ஊர் பற்றைக் காட்டியுள்ளனர்.

ஜி.ஜி., அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோரின் சிம்மக்குரல்கள் முழங்கிய நாடாளுமன்றத்தில் விஜயகலா அக்காவின் குரலும் தமிழர்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலிக்கும் என்பது பலரின் எதிர்பார்ப்பு.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முப்பது ஆண்டுகால அகிம்சைப் போராட்டம், முப்பது ஆண்டுகால ஆயுதப்போராட்டம் என்று இரண்டும் தோல்வியைத் தழுவியபின்னர் தேர்தல் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற தேர்தல்.

தேர்தல் பிரசாரத்தின் போது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு வகையான தீர்வுத்திட்டத்தைத் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டன. நாடு கடந்த தமிழீழம், வடக்கு கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி, இந்திய மாதிரியில் (மொடல்) ஆட்சி, பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் பிளஸ் எனப் பல்வேறு தீர்வுத்திட்டங்களை தமிழ் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டன.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 23 வீதத்திற்கும் குறைவான வாக்குகளே பதிவாகியுள்ளன என்பது வேறு அம்சம்.

அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டிபோட்டுக்கொண்டு (ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட தமக்கிடையில் சண்டைபிடித்து) சுவரொட்டிகளை மாறிமாறி மூலைமுடுக்கெல்லாம் ஒட்டியும், வீதிகள் தோறும் வேட்பாளர்களின் பெயர்களையும் இலக்கங்களையும் எழுதியும் பல உத்திகளைக் கையாண்ட போதும் மக்கள் வாக்கெடுப்பில் ஆர்வம்காட்டவில்லை!

மக்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் விட்டமைக்கு, மக்கள் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டுதான் வாக்களிக்காமல் இருந்தார்கள் என நியாயப்படுத்தலாமா என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறது. எது யதார்த்தம்?

உலகில் யுத்தத்தில் வெற்றியீட்டியதன் மூலம் வெற்றியீட்டிய எந்தவோர் அரசும் யுத்தத்தில் தோல்வியடைந்தவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியதாக வரலாறு இல்லை.

ஜனாதிபதியின் கட்சியும் யுத்தவெற்றியை மூலதானமாக்கியே தேர்தலில் வென்றது. இந்த யதார்த்தத்திற்கு மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்படுவார் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும் என மேற்குலக இராஜதந்திரிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த சீனாவுடனும் நெருக்கமான உறவைப் பேணி வருவதால் முற்றுமுழுதாக சீனா பக்கம் சாய்ந்துவிடுவார் என்ற அஞ்சம் காரணமாக இந்தியாவும் ஜனாதிபதிக்கு அளவுக்கு அதிகமான அழுத்தம் கொடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது என்பது புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றப் போவதாகக் கூறும், அதாவது நாட்டின் அபிவிருத்தியே ஒரே குறிக்கோள் எனக் கூறும் ஜனாதிபதி மஹிந்தவின் முன்னால் இரு வகையான திட்டங்கள் உள்ளதாக மேற்குலக ராஜதந்திரிகள் கருத்துக் கூறி வருகின்றனர்.

முதலாவது -

சிங்கப்பூர் மாதிரி (மொடல்) அதாவது, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கம் நாட்டை ஆட்சி செய்யும். பெயரளவில் தமிழ் அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுவர். தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு அடங்கக்கூடிய ஜனநாயகம் என்று எதுவும் நடைமுறையில் கிடையாது; ஆனால் பேச்சளவில் அந்தப் பதம் பயன்படுத்தப்படும். நாட்டின் அபிவிருத்தியே அரசின் ஒரேகுறிக்கோளாக இருக்கும்.

அடுத்தது குவைத் மாதிரி (மொடல்) குவைத்தில் மன்னராட்சி நடைபெறுகிறது. அரசரின் உறவினர்களே முக்கியமான அமைச்சுக்களை கையில் வைத்துள்ளனர்.

ஆசியாவில் பொருளாதார ரீதியில் இந்த இரு நாடுகளும் வெகுவாக முன்னேறியுள்ளன. இந்த இரண்டு மாதிரிகளில் (மொடல்களில்) ஒன்றையே ஜனாதிபதி மஹிந்த தெரிவுசெய்வாரென மேற்குலகம் எதிர்பார்க்கிறது. பெரும்பாலும் சிங்கப்பூர் மாதிரியையே ஜனாதிபதி மஹிந்த தெரிவு செய்வார் என்றே மேற்குலகம் நம்புகிறது என்று இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் சொல்கிறார்.

எதற்கும் காலம் பதில் சொல்லும். இந்த இரண்டு மாதிரிகளில் (மொடல்களில்) எது வந்தாலும் தமிழர்களின் அரசியல் அபிலாசையை அவர்களின் '60 ஆண்டு கால அரசியல் வேணவாவை தீர்த்து வைக்கும் நிலை தோன்றுமா என்பதற்கு நேரிடையான பதில் கிடைக்குமா என்பதற்குப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்....!

ந.பரமேஸ்வரன்

# 'ஜொலிஸ்ரார்' கிண்ண இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் சென்றல் விளையாட்டுக் கழகமும் வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் நந்தகோபன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினர்களாக ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவன உரிமையாளர் பி.நாகரத்தினம் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா ஆகியோர் கலந்துகொள்வர். (1)



வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்



சென்றல் விளையாட்டுக் கழகம்

# சந்திமால் அதிரடி கன்னிச் சதம்; இந்தியாவை வீழ்த்தியது இலங்கை!

ஹராரே,ஜூன் 6

சந்திமாலின் கன்னிச்சதம் (111) கை கொடுக்க இந்திய அணியை 6 விக்கெட்டுக்களால் வென்றது இலங்கை.

சிம்பாவேயில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒரு நாள் போட்டியில் நேற்று இலங்கை - இந்திய அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவது எனத்தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பவீரர்களாக டினேஸ் கார்த்திக் - ஒஜா ஜோடி களமிறங்கியது.

ஒஜா ஓர் ஓட்டத்துடன் குலசேகரவின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த கோலி பொறுப்பாக ஆடினார். 5 பௌண்டறிகளுடன் 27 ஓட்டங்களைப் பெற்று பெரேராவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பதான் 44 ஓட்டங்களுடன் ரன்டீவின் பந்தில் ஆட்டம் இழக்க, அரைச்சதம் கடந்த கோலி 68 ஓட்டங்களுடன் துஷாரவின் பந்துக்கு ஆட்டம் இழந்தார்.

ரோகித் சர்மா 32, ரெய்னா 19, ஜடேஜா 19 என ஆட்டம் இழக்க அறிமுக வீரர் அஷ்வின் அபாரமாக ஆடி 4 பௌண்டறிகள் ஒரு. சிக்ஸருடன் 38 ஓட்டங்களைப் பெற்றார்.

பங்கஜ் சிங் 3 ஓட்டங்களுடனும் பிரயாஷ் ஒஜா ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டம் இழக்காது இருந்தனர். இந்நிலையில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் பந்து வீசிய துஷார 3 விக்கெட்டுக்களையும் ரன்டீவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

269 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய தரங்க - டில்ஷான் இணை இணைப்பாட்டமாக 29 ஓட்டங்கள் பெறப்பட்ட போது டில்ஷான் 4 பௌண்டறிகளுடன் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

தரங்கவுடன் ஜோடி சேர்ந்தார் சந்திமால். இருவரும் இணைந்து சிறப்பாக ஆடினர். இந்நிலையில் தரங்க 27 ஓட்டங்களுடன் அஷ்வினின் பந்தில் கோலியிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.

சந்திமால் - கப்புக்கெதர ஜோடி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இலங்கை அணி 195 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் கப்புக்கெதர 2 பௌண்டறிகள் ஒரு சிக்கஸருடன் 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

இந்நிலையில் அதிரடியாக ஆடித் தனது கன்னிச்சதத்தைப் பூர்த்தி செய்ய சந்திமால் 6 பௌண்டறிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 111 ஓட்டங்களைப் பெற்று அஷ்வினின் பந்தில் வினய்குமார் ஒஜாவிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்துவந்த மெண்டிஸ் 4 பௌண்டறிகளுடன் 35 ஓட்டங்களையும், சமரவீர 3 பௌண்டறிகளுடன் 28 ஓட்டங்களையும் பெற்று ஆட்டம் இழக்காது இருந்தனர்.

இந்திய அணி சார்பில் பந்து வீசிய அறிமுக வீரர் அஷ்வின் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சந்திமால் தெரிவானார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

சிறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் 60 ஆண்டு மணி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறுப்பிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். (ஒ-10-188)

## கூறுவிலை கோரல்

பழைமைவாய்ந்த கட்டடப் பொருள்கள் விற்பனைக்குண்டு. 14 மரத்தூண்கள், கைமரங்கள், பாச்சுகள், ஓடுகள் என்பவை விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். விலை கோரவேண்டிய கடைசித் திகதி 10.06.2010.

தொடர்புகளுக்கு : T.P.No : 0212263118

மாதா கோயில், கரவெட்டி. (சி-568143) பங்குத்தந்தையும், கட்டடக் குழுவினரும்.

### யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
### யாழ். பல்கலைக்கழகம்
## ஒத்தி வைக்கப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டம் (AGM)

மேற்படி கூட்டம் நாளை (07.06.2010) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு புதிய கலைப்பீடக் கட்டடத்தில் (New Arts Block) நடைபெறுமென ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித்தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எமது சங்க உறுப்பினர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலாநிதி செ.சிவசுப்பிரமணியம், செயலாளர். (சி-568140) பேராசிரியர் செ.இளங்குமரன், தலைவர்.

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
THE ART OF LIVING
## வாழும் கலைப் பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

★ சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

★ ஞாபகசக்தி அதிகரிக்க
★ நிகழ்காலத்தில் வாழ
★ மனதை ஒரு நிலைப்படுத்த
★ வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
★ ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### அறிமுக உரை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர் காலம்: நாளை (07.06.2010) திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
பயிற்சி நாட்கள்: 08.06.2010 செவ்வாய்க்கிழமை முதல் 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை வரை
குறிப்பு: ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கான 'சுதர்சனக்கிரியா' இன்று(06.06.2010) மாலை 3.50 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு

வாழும் கலைக்குடும்பம்
(99148) T.P: 0770474757

# VISA - வீசா
## Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் துணை

## 16 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



### திருமதி ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

(B.A. (Hons), English Trd- ஆசிரியை)

தோற்றம் 11 - 01 -1960 மறைவு 03 - 06 -1994

திதி: 06.06.2010

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே!
இனி எப்பிறப்பில் காண்போம்?

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி,
28,கைலாய பிள்ளையார் வீதி,
நல்லூர். (99127)

கணவர், சகோதரி, மாமா, மாமி, மைத்துனர், மைத்துனி, மக்கள், மருமக்கள், உறவினர்.

## விற்பனைக்குண்டு

சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள நாதன் புடைவையகமும் அழகுமாடம் என்ற கடையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0774151947

## கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள NISSAN Car B310 கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777173121

## தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள brother Deluxe 240 T தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 3211683

## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறை பற்றிய விளக்கமுறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த சுயதெரிவு முறை-முன்னோடி- தனி மனித நிறுவனர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் தரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!

தொலைபேசி: 2360488, 2360694, 4873929

## காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் ரோட்டுக் கரையோரமாக, கிணற்றுடன் கூடிய 10 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவை இல்லை.

நேரடித் தொடர்புகளுக்கு : 0779789534

## மாடி வீடு வாடகைக்குண்டு

கே.கே.எஸ். வீதியில் சிவன் கோயிலுக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு உடன் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 0779616895

## அருள் முருகன் திருமண சேவை

Teachers, Lecturers, Lawyers, Accountants, Dental-surgeon, Doctors, Engineers, Executives அரச வங்கி உத்தியோகத்தர்கள், PR குடியுரிமை உள்ள வெளிநாட்டு மணமக்கள் உட்பட எத்தகைய மணமக்கள் தெரிவுகளுக்கும் மனம் திறந்து பேசலாம். இது ஒரு திருமண சேவையல்ல. திருமண சேவைகளின் புதிய தோர் அத்தியாயம்.

03, யாழ். வீதி, சிறாம்பியடி லேன்,(Cosy Restaurant Lane) பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0212229334

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், அதன் குட்டியும், பொமேரியன் நாயும் குட்டியும், டாசோன் நாயும் குட்டியும் பொக்கட் பெனியர் பெண் நாயும், வான்கோழியும் விற்பனைக் குண்டு.

தொடர்பு : மயூரன், இல.209, ராஜா பிளாசா முன்பாக, பலாலி றோட், கோண்டாவில்.

## பிக்கப் விற்பனைக்கு

தரமான நல்ல
பாவனையிலுள்ள
TATA பிக்கப் உடன்
விற்பனைக்குண்டு.
**தொடர்பு : 0776441991**

## Digital Duplicator Ink, Master விற்பனைக்கு

சகல விதமான Digital Duplicator's இற்குரிய Ink, Master எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 82/13, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம், தொ.பே.:0212221388

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட MF 240 MF 135DL பதிவு செய்யப்படாத உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொலைபேசி - 0713585608
0777643637

தயவு செய்து சிங்களத்தில் தொடர்பு கொள்ளவும்.

## புதிய குளோபல் ஸ்ரார்

இல.226, பல்கலைக்கழக அருகாமை, இராமநாதன் வீதி.

எமது நிறுவனத்திற்கு கீழ்காணும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவை.

கணனி டைப்பிங்
போட்டோ பிரதி இயக்குனர்
(ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)

மேற்காணும் பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நேரடியாக அல்லது 0212226951, 0779522444 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



**STUDY MBA THE UK**
**From Rs. 1.3 Milion**

UNDERGRADUATE AND POSTGRADUATE PROGRAMS
Business Administration
Hospitality & Tourism Management
Finance & Accounting
Health & Social Care Management
Computing & IT Management

ADMISSION OPEN For August/October Semesters 2010

networth CONSULTANTS
No. 298, R.A.De Mel Mawatha, Colombo 03
Ph 011 2573393 M 077 2313955
E mail : colombo@networthedu.com

E.Thames Graduate School
www.etgs.org.lk

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 19 - 02 - 1953



இறைவன் அடியில் 17 - 05 - 2010

### அமரர் முத்துலிங்கம் ராஜ்குமார்

(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கொழும்பு)

கடந்த 17.05.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, தந்தி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிவரை நின்று எமக்கு உதவிபுரிந்தோருக்கும் மரணச் சடங்கில் கலந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது இல்லத்தில் இன்று இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூநாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (99205)
தகவல்: மனைவி, பிள்ளைகள்,

# மரண அறிவித்தல்கள்



### திருமதி மனோன்மணி கதிரேசு

நெடுந்தீவு மேற்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி கதிரேசு (05.06.2010) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- தெய்வயானை தம்பதிகளின் அன்பு மகளும், கதிரேசுவின் அன்பு மனைவியும், திலகேஸ்வரி, திருமங்களேஸ்வரி, பத்மராசா, நடேசராசா, தவனேஸ்வரி, சிவராசா, ஆனந்தராசா, மோகனராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு. (99267)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மயில்வாகனம் அன்னபூரணம்



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாவும், சாவகச்சேரி சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் அன்னபூரணம் நேற்று (05.06.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னக்குட்டி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகளும், அமரர்களான கனகரத்தினம், இராசதுரை, நாகம்மா மற்றும் திருமதி தெய்வானை (பிரான்ஸ்), திருமதி இரத்தினம், அமரர் மார்க்கண்டு மற்றும் விசுவலிங்கம், சின்னத்தம்பி (சோமு), சுப்பிரமணியம் (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் பத்மநாதன், மற்றும் மார்க்கண்டு, அமரர் குமரையா மற்றும் யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருமைராணி, ராதாகிருஸ்ணன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானம் மற்றும் ஸ்ரீதரன், சுமதி (சுவிஸ்), சிவசோதி, சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், பூபாலசிங்கம், ஜெயந்தி (சுவிஸ்), விஜயலட்சுமி, இராசேந்திரம் (சுவிஸ்), குணரத்தினம், சஞ்சீவ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் முற்பகல் 10 மணிக்குத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி, சங்கத்தானை.
தொ.பே. 0217201125 (99733)
தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன்றைய புதிய போக்கினை தடுத்து நிறுத்துவோம்

தூய தமிழில் எழுதவேண்டும், தூய தமிழில் பேச வேண்டும் என்று தமிழ் மொழி அபிமானிகள் விரும்புகிறார்கள்.

இது நியாயமான விருப்பம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் தூய தமிழ் என்பதற்காக கரடு முரடான சொற்களை, எளிதில் புரிந்து கொள்ள முடியாத வசனங்களை எழுத்தில் பயன்படுத்துவதும் பேச்சில் புகுத்துவதும் வரவேற்கக் கூடியதல்ல.

மொழி என்பது ஒருவர் நினைப்பதை மற்றவர் விளங்கிக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருவிதான். அதனை எளிமையாகவும், இலகுவாகவும் பிரயோகிப்பதன் மூலம் ஒருவர் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

சிலர் தமது மொழி அறிவைப் பறைசாற்றிக் கொள்வதற்காகவும் பாண்டித்தியத்தை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவும் கடுமையான சொற்களையும், வசனங்களையும் உரையாடல்களில் பயன்படுத்துவது உண்டு.

தூய தமிழ் என்று சொல்வது இலகுவான தமிழ், எளிமையான தமிழ் என்று தான் பொருள்படும். வழக்கில் இருக்கின்ற தமிழ்ச் சொற்களை மேலும் கடுமையான சொற்களாக மாற்றுவது தூய தமிழும் அல்ல. இலகுத் தமிழும் அல்ல. தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படும் சில அமைப்புகள் இலங்கையிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி இந்தக் கைங்கரியத்தைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே பிறமொழியில் இருந்து தமிழ் மொழியில் பல நூற்றாண்டுகாலமாகப் பயன்படுத்தப்பட்டு தமிழ் சொற்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்ட சொற்களை-பெரும்பாடுபட்டு தூயதமிழ் சொற்களாக மாற்றுவதில் அறிஞர்கள் தம் நேரத்தையும் காலத்தையும் செலவழிப்பது அர்த்தமில்லாத காரியமாகும். மொழிவளர்ச்சிக்கு அது உதவும் என்று சொல்ல முடியாது.

உலக மொழிகளாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட பல மொழிகளும் இந்தக் கோட்பாட்டைக் கடைப் பிடித்தே முன்னேற்றியுள்ளன.

உதாரணத்துக்கு நாம் ஆங்கில மொழியையே எடுத்துக் கொள்ளலாம். அம் மொழியின் வளர்ச்சிக்கு உலகின் பழம் பெரும் மொழிகள் பலவும் உதவியுள்ளன. அவ்வாறு எடுத்தாளப்பட்ட பிறமொழிச் சொற்களை அவர்கள் தம் சொல்லதிகாரங்களில் தமது சொல்லாகவே ஏற்று நிலை பெறச் செய்திருப்பதைக் காணலாம்.

ஏன் தமிழ் மொழி சொற்களையும் ஆங்கிலம் ஏற்றுக் கொண்டிருப்பதை அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

மாங்காய், கட்டுமரம் போன்ற சொற்களை ஆங்கிலச் சொற்களாகவே அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு மொழியில் பயன்படுத்தப்படுகின்றது என்பதற்காக எம் மொழியில் அதனைப் பயன்படுத்தக் கூடாது என்பது சரியான நியதியல்ல.

ஒரு காலத்தில் தமிழ் மொழியில் வடமொழிச் சொற்கள் அபரிமிதமாகப் பயன்படுத்தப்பட்டு தமிழின் தூய்மை கெட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தமையையும் இங்கு நாம் நினைவு கூறலாம். தமிழில் உரிய சொற்கள் இருக்கும் பொழுது பிறமொழிச் சொல்லை வலிந்து பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியது. தமிழில் உரிய சொல் இல்லாதவிடத்து அதைக் குறிக்கும் பிறமொழிச் சொல்லைத் தமிழ் மரபுக்கேற்ப மாற்றி வழங்குவது தமிழ் அறிஞர்களின் வழக்காக இருந்துள்ளது. இன்று தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டுப்பற்றியே பலரும் குறிப்பாக தமிழ் மொழிப்பற்றாளர் கவலையில் ஆழ்ந்துள்ளார்கள்.

தமிழ் மொழிக்குத் தனித்துவமே கிடையாது என்று சொல்லும் அளவுக்கு வடமொழி புகுந்து தமிழ் மொழியின் தூய்மை பாழ்படும் படி செய்துவிட்டிருந்த வேளையில் விழித்துக் கொண்ட தமிழ் அறிஞர்கள் அதன் தூய்மையை மேம்படச் செய்வதில் வெற்றிபெற்றிருந்தார்கள். ஆனால் இப்பொழுது மீண்டும் அத்தகைய ஒரு ஆபத்து ஏற்பட்டுக் கொண்டு வருவதை அனேகர் உணராமல் இருக்கிறார்கள்.

சமஸ்கிருதம் இருந்த இடத்தை இப்போது ஆங்கிலம் பிடித்துக் கொண்டுவருகின்றது.

ஆங்கிலம் உலக மொழிதான். உயரிய மொழிதான். நாமும் கற்றுத் தேறவேண்டிய மொழிதான். அதிலிருந்து நிறையவும் அறிவுசார்ந்த விடயங்கள் எம் மொழிக்கு வந்து சேரவேண்டியிருக்கின்றனதான். ஆனால் தமிழின் தூய்மையை - அது வீற்றிருக்கும் ஆசனத்தை ஆக்கிரமித்துக் கொள்வதற்கு யாரும் அனுமதிக்கலாகாது.

குறிப்பாக வானொலி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பு அறிவிப்புக்களில் எல்லாம் அறிவிப்பாளர்கள் தமிழையே மறந்து விடுகிறார்கள். சாதாரணமாக ''அவரை மேடைக்கு அழைக்கிறோம்'' என்று சொல்வதைக்கூட ஆங்கிலத்தில் கூறித்தான் செய்கிறார்கள். ''லெட்ஸ் வெல்கம் கிம் ஒன்த ஸ்டேஜ் பிளீஸ்' என்று கூறினால்தான் அறிவிப்பாளருக்கு ஆங்கில அறிவிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்புவது போல் தெரிகிறது.

இந்தப் போக்கு தமிழ் இளைஞர்கள், யுவதிகளையும் பீடித்துக்கொள்ளப் போகிறது.

இளைஞர்கள் மத்தியில் ஆங்கில அறிவு சூன்யமாகப் போய்க் கொண்ருக்கின்றது என அனைவரும் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இப்போது தமிழ் மொழிக்கு ''சூனியம்'' வைப்பதாக அது போய்விடும் போல் தெரிகின்றது.

கோவையில் செம்மொழி தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடிக்க தமிழகத் தலைவர்கள் முயன்று கொண்டிருக்கும் இவ் வேளையில், இந்தப் புதிய ஆபத்திலிருந்து தமிழ்மொழியைக் காப்பாற்றுவதற்கு இந்தக் கடைசி நேரத்திலாவது தமிழ் அறிஞர் முன்வர வேண்டும்.

---

**நாளை நடைபெறவிருந்த யாழ்., கிளிநொச்சி மாவட்ட**

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒத்திவைப்பு; அபிவிருத்தி மீளாய்வுக் குழுக்கூட்டம் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நாளை திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணங்களால் இக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனினும் ஏற்கனவே அறிவிக்கப் பட்டதற்கிணங்க யாழ்.மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டம் அதே தினம் காலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும். எனவே யாழ்.மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்களை இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## காணாமற் போனவர்களின் உறவினர்களுடனான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

1996ஆம், 1997 ஆம் ஆண்டுகளில் காணாமற் போனவர்களின் பெற்றோர், தங்கியிருப்பவர்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு உதவி பெறுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள உயர் பட்டப் படிப்புகள் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை மேற்கண்ட விடயம் தொடர்பாக சந்தித்துப் பேசுவது குறித்து நாளைய கலந்துரையாடலில் ஆராயப்படும். (ஒ-6)

## தொழில் பயிற்சி அதிகார சபையின் கற்கைநெறி அடுத்த மாதம் காரைநகரில்

காரைநகர், ஜூன் 6

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் காரைநகரில் தொழில் பயிற்சி கற்கை நெறிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் காரைநகர் கிராமிய தொழில் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி பி.சிறிகுகன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் வலந்தலையில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் தொழில் பயிற்சி வளாகத்தில் பின்வரும் கற்கை நெறிகள் ஜூலை மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளன.

ஆறு மாத கற்கை நெறிகளான வீட்டு மின் இணைப்பு, கணனிப் பிரயோகம், மரப்பொறியியல், கட்டட நிர்மாணம் என்பவற்றுடன் ஒரு வருட கற்கை நெறிகளான மின் தொழில் நுட்பவினைஞர், கட்டடப் பொறியியலாளர் கற்கை ஆகியனவே இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், ஜி.சீ.ஈ. சாதாரண தரக் கல்வியை கற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் இந்தக் கற்கை நெறிகளைப் பயில முடியும் எனவும் அவர் கூறினார்.

இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி, இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற் பசிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் இவர்களுக்கான நேர்முகத் தேர்வு விரைவில் இடம்பெறும் எனவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (50-250)

# குடாநாட்டுக்கு புற்றுநோய் சிகிச்சை நிலையம்; புதுடில்லியிடம் கோரிக்கை முன்வைப்பேன்

*ஜனாதிபதியுடன் நாளைமறுதினம் இந்தியா செல்லும்வேளை*



நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இந்தியா செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நானும் செல்கிறேன். அதன் போது இந்தியாவிடம் முன் வைக்கும் கோரிக்கைகளில் யாழ். மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சைக்கான வைத்தியசாலை ஒன்றை அமைக்கும் திட்டமும் முன்வைக்கப்படும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''புற்றுநோய் விழிப்புணர்வு மாலைப் பொழுது'' என்ற நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அமைச்சர் இப்படிக் கூறினார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

வட மாகாணத்தில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகளில் ஒன்றாக புற்றுநோய் உள்ளது. அதன் தீர்வாக சகல வசதிகளுடனான புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பது அவசியம். இதற்கான முயற்சிகளை புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரும் ஏனைய வைத்தியர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு கடந்த காலத்திலும் உதவியிருக்கின்றேன். தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்குவேன்.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு சகல வசதிகளுடனான புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு என்னாலான முழு ஒத்துழைப்புகளையும் வழங்குவேன்.

இதற்குத் தேவையான உத்தேச மதிப்பீட்டை உடனடியாக வழங்குமாறு மகரகம தேசிய புற்றுநோய் நிறுவகப் பணிப்பாளரிடம் இந்த மேடையில் வைத்துக் கேட்டுள்ளேன். அவர் 650 மில்லியன் ரூபா தேவையாகும் என குறிப்பிட்டிருக்கிறார் - என்றார். (ஒ-14)

## நயினாதீவு நாகவிகாரைத் துறைமுகம் விரைவில் புனரமைப்புச் செய்யப்படும்

நல்லூர், ஜூன் 6

நயினாதீவு நாகவிகாரைத் துறைமுகம் பெரும் செலவில் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் தினமும் நயினாதீவு நாகவிகாரையைத் தரிசிக்க வருவதனால் விகாராதிபதியின் கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி துறைமுகம் 23 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதேவேளை - வெள்ளைக் கடற்கரையை சிறந்த பொழுதுபோக்கு மையமாக மாற்றும் முயற்சிகளை வேலணை பிரதேசசபை ஆரம்பித்துள்ளது. தற்போது கடலில் குளிக்கவருபவர்கள்உடைகளை மாற்றுவதற்கான அறைகளை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (க-111)

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் நேற்றுப் பேரணியும் சிரமதானமும்

யாழ்ப்பாணம், ஜூன் 6

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் நேற்று சிரமதானப் பணியும் பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணியும் இடம்பெற்றன.

சிரமதானப் பணி நேற்றுக் காலை 8.30 மணிக்கு முற்றவெளியில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மறுபுறத்தில் நகரில் மாணவர்கள் சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருப்பதை வலியுறுத்தி பேரணி ஒன்றையும் நடத்தினார்கள். பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை முற்றவெளிப் பகுதிக்குச் சென்று சிரமதானப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன், கல்வி அதிகாரிகள், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச, நகரசபைகளின் செயலாளர்கள், மாநகர சபை அதிகாரிகள், பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களும், திணைக்களப் பணியாளர்களும் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

முற்றவெளிப் பிரதேசத்தில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், செடிகள் எனபன சிரமதானம் மூலம் வெட்டி அழிக்கப்பட்டன.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் சுற்றாடல் தின நிகழ்வுகளும் இடம்பெற்றன.

காலை 7 மணிக்கு சுற்றாடலைப் பாதுகாப்பது குறித்த வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் ஊர்வலமாகச் சென்றனர். ஊர்திகளும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டமை சிறப்பு அம்சமாக இருந்தது. ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, பண்ணை வீதி ஊடாகச் சென்று யாழ். கோட்டைப் பகுதியில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து முற்றவெளிப் பகுதியில் சிரமதான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

உலக சுற்றாடல் தினத்தையொட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கண்காட்சி, கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. (50-224-111)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 24 | 07.06.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : தசமி |
| | மாலை 06.34 |
| நட்சத்திரம் | : உத்தரட்டாதி |
| | காலை 07.10 |
| சுபநேரம் | : 11.52 - 01.22 |
| இராகுகாலம் | : 07.22 - 08.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் நாளை கருத்தரங்கு

யாழ்.முகாமையாளர் சங்கம் 'கிளீன் வெல்' அனுசரணையுடன் ஸ்ரீலங்கா பொறியியலாளர் நிறுவனத்தின் யாழ். பிராந்திய நிலையத்துடன் இணைந்து நடத்தும் -

''திண்மக் கழிவும், கழிவுநீர் பரிகரிப்பும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூரில் பருத்தித்துறை வீதியில் உள்ள 'யூரோ'வில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை மின்சார சபை பதில் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்ற - இந்திய 'டார்ஸி' சர்வதேச நிறுவனத்தின் இயக்குநரான பொறியியலாளர் ஆர்.செல்வகுமாரன் கருத்துரை வழங்குவார்.

ஆர்வமுள்ளவர்கள் இக் கருத்தரங் கில் பங்குபற்றி பயன்பெறலாம் என்று இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஒ)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடு குறித்தும் பீரிஸ் பிரஸ்தாபித்தார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் அண்மையில் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் பீரிஸ் விளக்கிக் கூறினார்.

இலங்கையின் மீள் குடியமர்வுக்கு தேவையான உதவிகளை வழங்குவதாகவும் நல்லிணக்கத்தின் மூலம் சமாதானத்தை நோக்கி முன்னேற உதவுவதாகவும் லியம் பொக்ஸ் தெரிவித்தார்.

லியம் பொக்ஸ் இலங்கை அரசுடன் மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)

## போருக்குப் பிந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைய சந்திப்பில் பேசப்படவுள்ள விடயங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேலும் விவரித்ததாவது:-

* வன்னியில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மாதம் மேற்கொண்ட விஜயத்தின் போது நேரில் கண்ட மக்களின் அவலங்களை எடுத்துக்கூறி அவர்களின் மீள்குடியேற்றம், மறுவாழ்வுக்கான செயற்பாட்டை விரைவுபடுத்த வற்புறுத்தல்.
* சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளை விடுவிக்க விரைவான நடவடிக்கை எடுக்கக் கோருதல்.
* வலி.வடக்கு உட்பட ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுதல்.
* மற்றும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் உடனடியாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து விரைந்து களைவதற்கு அரசாங்கத்திடம் வற்புறுத்தல்.

இன்று கொழும்பில் மாலை கூடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் பேசவேண்டிய விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்படும் - என்றும் மாவை சேனாதிராசா கூறினார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையேயான முதலாவது உத்தியோகபூர்வ பேச்சுக்கள் நாளை மாலை 5 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது தெரிந்ததே. (அ-1)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாஷிங்ரனில் இந்தியா - அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான முதல் கூட்டத்தைத் தொடர்ந்து இரு அமைச்சர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஹிலாரி மேலும் கூறியவை வருமாறு:

இந்தியாவுடன் அமெரிக்காவுக்கு உள்ள உறவு குறித்து எந்தவித சந்தேகமும் தேவையில்லை. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவற்றைப் பார்க்கிலும் இந்தியாவுடனான உறவு வலுவானது, உறுதியானது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விலகத் தொடங்கிவிட்ட நிலையில் அடுத்த கட்டமாக அந்தப் பிராந்தியத்தில் வலுவான நாடாக இந்தியா தன்னை நிலை நிறுத்திக்கொள்ள நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து உதவும். தற்போது ஆப்கானிஸ்தான் சீரமைப்புக்கு மிகத் தாராளமாக இந்தியா நிதியுதவி அளித்துள்ளது பாராட்டுக்குரியது.

சர்வதேச சவால்களை சமாளிப்பதில் அமெரிக்க மக்களுடன் இணைந்து இந்தியர்கள் செயற்படுகின்றனர். இத்தகைய சவாலை இந்தியாவின் துணையின்றி சமாளிப்பது மிகவும் கடினமானதாக இருக்கும். பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்படுகின்றன.

பயங்கரவாதிகள் தொடர்பாகவும், சைபர் குற்றங்கள் குறித்தும் தகவல்களும் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே இரு நாட்டு ராணுவங்களும் ராணுவம் சார்ந்த தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றன. - என்றார்.

இக்கூட்டத்தில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் நிலவும் அரசியல் சூழல் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும் பாதுகாப்பு, அணுசக்தி, பருவநிலை மாற்றம் கல்வி மற்றும் விவசாயத் துறைகளில் எவ்விதம் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து செயற்படலாம் என்றும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் கிருஷ்ணா - பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்டவற்றை சமாளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவிப்பது குறித்தும் தற்போது கொரிய பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்திய குழுவில் மத்திய அமைச்சர்கள் கபில் சிபல், பிருத்விராஜ் சவாண், திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா, வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அமெரிக்க தரப்பில் மின்துறை அமைச்சர் ஸ்டீபன் சூ, அரசியல் விவகாரங்களுக்கான துணை அமைச்சர் வில்லியம் பர்ன்ஸ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் போர்மேன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஒ)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

மாணவர்களின் நன்மைகருதி ஞாயிறு, போயா ஆகிய நாள்களில் தினயார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளைத் தடை செய்வது குறித்து ஆராயப்பட்டது.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் இந்தத் தடையை நடைமுறைப்படுத்துவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஒ-1)

## அவுஸ்திரேலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுகைக்குள்ளாகி இருக்கும் இரு படகுகளிலும் உள்ள அகதிகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் 750 அகதிகள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் ஊடுருவ முயற்சித்து கைது செய்யப்பட்டு, கிறிஸ்மஸ் தீவுகளிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாக அந் நாட்டு இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தஞ்சம் கோரும் அகதிகளின் விண்ணப்பங்களை ஏற்பதை கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் அவுஸ்திரேலியா தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-1)


**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் சந்தியிலிருந்து ஏ-9 வீதியில் 300 மீற்றர் தூரத்தில் 16 பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு உண்டு.

தொழிற்சாலைகள் மற்றும் வியாபார கட்டடங்கள் கட்டுவதற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:
தொ.பே: 0779588198

**Nikon**

PC LINK

Nikon D40,D60,D80,D90,D300
போன்ற கமராவகைகளுக்கு பயன்படுத்தக்கூடிய
SD Memory Card Original Japan 4GB மற்றும்
Nikon கமரா பராமரிப்பு,படப்பிடிப்பதற்கான பயிற்சி
அடங்கிய DVD என்பன விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 0774144411 - 0774747450

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கை (New Lane), கொய்யாத்தோட்டம், புது றோட்டில் 26ஆம் இலக்கத்தில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலைக் கொண்டதும், தென்னை, வேம்பு, புளி போன்ற பயன்தரு விருட்சங்களைக் கொண்டதுமான 2¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
ராஜன்
0774718177, 0778213138

**CERTIFICATE COURSE IN OFF-SET PRINTING**

அச்சகத்தில் தொழில்புரிபவர்களுக்கும் பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கும் செயன்முறை விளக்கங்களுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் யாழ் நகரில் முதன் முறையாக அச்சகத்தொழில் சம்பந்தமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றது.

பயிற்சி நெறிகளில் சேர விரும்புவர்கள் விபரங்களை வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை 9.00am to 4.00pm சனிக்கிழமைகளில் 9.00am to 12.30pm)

82/13 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே:0212221388
என்ற முகவரியில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

**SM CONSULTANT SERVICES**

லண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

அவரவர் தகமைக்கு ஏற்றவாறு நேரடியாக கல்லூரியினரால் இலகுவான அனுமதி நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



GCE O/L English: C உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும் விண்ணப்பிக்க தகமைஉள்ளோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்துவிசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அனுபவம் வாய்ந்த பிரபல விரிவுரையாளர்களால் இலாப நோக்கின்றி மிகக்குறைந்த கட்டணத்தில் IELTS வகுப்புக்கள் கொழும்பில் எம்மால் நடாத்தப்படுகிறது.

STUDY IN INDIA

இந்தியாவில் உயர் கல்விகற்பதற்கு 2 A/L சித்தியே போதுமானது..........

B.E, B.Sc, B.C.A, BBM, B.Com, BA,LL.B, M.Sc, MBBS, MBA போன்ற கற்கைநெறிகளை, இந்தியாவில்(# University of Madras # SRM University # Manipal University இன்னும் இது போன்ற) பிரபலமான பல்கலைக்கழகங்களில்கற்பதற்கு உடனடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

STUDY IN UKRAINE

Lungansk & Crimea State Medical University-(Ukraine)இல் இணைந்து சிறீலங்கா medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வரவிரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

STUDY IN POLAND

போலந்து (POLAND) நாட்டிற்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் ஆரம்பமாகியுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

தொடர்புகளுக்கு:
SM CONSULTANT SERVICES
148, கோவில் வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0215673818, Mobile: 0774528818, Fax: 0212223818
Mail: mg1404_2009@yahoo.com

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...

**திருமண அழைப்பிதழ் காட்சியறை**

**மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்**

**Wedding Card Show Room**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...

10/= இருந்து

இணையத்தளம் : www.mathicolours.com
15/2B, முருகேசர் லேன், நல்லூர், [முத்திரைச்சந்தி] யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524

**YOGI'S BEAUTY**

[The Academy of Beauty Culture, Hair Dressing & Home Science]
புதிய பயிற்சி வகுப்புக்கள் 26.06.2010 ஆரம்பமாக உள்ளன.

* அழகுக்கலை [Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course]
* ADVANCED COSMETOLOGY [Diploma Course]
* நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் [Advanced Bridal Make Up-Hair Styles]
* 10 வகையான சாறி கட்டும் முறைகள்
* கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் [Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers]

பயிற்சி வகுப்புகளில் சேரவிரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Mrs Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Advanced Cosmetology [INDIA]
Diploma in Advanced Bridal Make-up & Character Make- up [INDIA]
Diploma in Home Economics [India & Srilanka]

* உங்கள் முகத்தில் அம்மைத் தழும்புகள், பள்ளங்கள், கரும்புள்ளிகள் இவைகளுக்கு எமது நவீன DERMABRASION TREATMENT மூலம் புதுமையான முறையில் சிகிச்சைகள்.
* Magic Facial [For Dark and Dry Skin]
* Skin whitning Facial
* Glycolic Treatment(Spa சிகிச்சைகள்)
* Cllogen Facial (For Dry & Aging Skin)
* Anti Polution Treatment(For oily Skin)
* Thalassic Therapy (For whitning & Anti Bactierial)
* Gold Facial (For Brides)
* Oxigen Facial
* Skin Prepairing Facial For Brides
* Mole Implant - (மச்சம் வைத்தல்)
* Eye Bro Filling
* முடி உதிர்தல், பொடுகு போன்றவற்றிற்கு நவீன Spa சிகிச்சைகள்
* Warts Removal
* French Menicare & Nail Art

எமது நிறுவனத்தில் மணப்பெண் அலங்காரம் சிறப்பம்சமாகும்.



Phone No. 021 222 2796 - 021 321 0077 - 0777 164925 - 071 878 8814

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org